மனித உரிமைகளுக்கான

# குழந்தைகளின் குரல்

## Children's Voices for Human Rights




Source http://static.dnaindia.com/sites/default/files/2014/07/19/251896-poison-rape-girl-molestation.jpg

மனித உரிமைகளுக்கான குழந்தைகளின் குரல் - 71 - 2014

# அழிக்கப்படும் மகள்கள்

**– பெண் கருக்கொலைக்கு எதிரான பிரச்சாரம்**

*பெண் கருக்கொலைக்கு எதிரான பிரச்சாரத்தினர், பெண் இனத்திற்கு எதிரான இனப்படுகொலையை வன்மையாகக் கண்டிப்பதுடன் பெண் குழந்தைகள் அழிக்கப்பட்டு வருவது நிறுத்தப்படக் கோரியும், PCPNDT சட்டத்தை கடுமையாக அமல்படுத்தக் கோரியும் 16.12.2014 அன்று சென்னையில் நடைபெற்ற கண்டன ஆர்ப்பாட்டத்தின் பத்திரிக்கை வெளியீடு. கிட்டத்தட்ட 53,158 பெண் குழந்தைகள் 2011ல் பிறக்க முடியாமலேயே கொல்லப்பட்டு காணாமல் போய்விட்டனர். இதற்குக் காரணம் பிறப்பதற்கு முன்பே பெண் குழந்தைகள் அழிக்கப்படுவதும் ஒவ்வொரு 1000 குழந்தைகளுக்கும் 20 குழந்தைகள் இறப்பதும், 5 வயதிற்குட்பட்ட குழந்தைகள் விகிதத்தில் 1000 குழந்தைகளுக்கு 5 பெண் குழந்தைகள் இறப்பதும் ஆகும்.*

இந்த நிலை தொடருமானால் 2011ல் 3 லட்சம் பெண் குழந்தைகள் காணவில்லை என்பது 2021ல் சுமார் 5 லட்சம் பெண் குழந்தைகள் காணாமல் போகும் நிலை வரும் அபாயம் உள்ளது. இவ்வளவு அதிக எண்ணிக்கையில் பெண் குழந்தைகள் காணாமல் போவதற்கு பெண் கரு தெரிவும் பெண் கருக்கொலையுமே காரணமாகும். தொடர்ந்து பெண் கரு அழிக்கப்படுவதும், 6 வயதிற்குட்பட்ட பெண் குழந்தையின் விகிதாச்சாரம் குறைந்து வருவதற்கும் சுகாதாரம் மற்றும் குடும்ப நலத்துறையின் செயலின்மையும் குறிப்பாக PCPNDT சட்டம் 1994 (2002 திருத்தப்படும்) முறையாக நடைமுறைப் படுத்தாததே காரணமாகும்.

மாநில கண்காணிப்புக் குழுமங்கள், மாவட்ட கண்காணிப்பு மற்றும் ஆய்வு மையங்கள் அமைப்பது, பாலினத்தைக் கண்டுபிடித்தல் மற்றும் தேர்வு செய்தல் ஆகியவற்றிற்கான தொழில்நுட்பங்களை (ஸ்கேன் கருவிகள் உள்ளிட்டவை) விற்பனை செய்பவர்கள், இறக்குமதி செய்பவர்கள், தயாரிப்பாளர்கள் ஆகியவர்கள் பற்றிய அறிக்கையை புதிய மாநில அமைப்பிடம் அளிக்க வேண்டும் என்பன உள்ளிட்ட உச்சநீதிமன்றத்தின் பல்வேறு இடைக்கால உத்தரவுகளுக்குப் பின்னரும் இந்த நிலை தமிழகத்தில் தொடர்கிறது என்று இந்தப் பிரச்சாரத்தினர் கூறினர். தமிழ்நாட்டில், அமலாக்க அதிகார அமைப்பு, ஸ்கேன் மையங்கள் பதிவு மற்றும் படிவம் (F) உள்ளிட்ட ஆவணங்களை சரிபார்ப்பதில் தனது சிவில் நீதிமன்ற அதிகாரத்தை பயன்படுத்தாமல் இருப்பது வெட்கக் கேடானது என்றும் பிரச்சாரத்தினர் கூறினர்.

இந்த ஆர்ப்பாட்டத்தின் போது, பிரச்சாரத்தின் அமைப்பாளர் திருமிகு. ஜீவா அவர்கள் பங்கேற்பாளர்கள் அனைவரையும் வரவேற்று, PCPNDT சட்டம் மற்றும் மகள்கள் காணாமல் போவதற்கான காரணம் குறித்தும் விளக்கினார். டாக்டர் V. வசந்திதேவி, முன்னாள் தலைவர் – தமிழ்நாடு மாநில மகளிர் ஆணையம் அவர்கள் துவக்க உரையாற்றினார்.

திருமிகு. சுதா இராமலிங்கம், மூத்த வழக்கறிஞர் – சென்னை உயர்நீதிமன்றம், டாக்டர் ஜி.ஆர். ரவீந்திரநாத், பொது செயலாளர்–சமூக சமத்துவத்திற்கான மருத்துவ சங்கம், கவிஞர் சல்மா, தமிழ்நாடு சமூக நல வாரியத்தின் முன்னாள் தலைவர், டாக்டர் ஆர். செந்தில், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்–பாட்டாளி மக்கள் கட்சி, திருமிகு பதர் சயீத், மூத்த வழக்கறிஞர் – சென்னை



16.12.2014 அன்று சென்னையில் நடைபெற்ற கண்டன ஆர்ப்பாட்டம்

உயர்நீதிமன்றம், திருமிகு. பி. சுகந்தி, மாநில பொதுச் செயலாளர்–அனைத்திந்திய ஜனநாயக மாதர் சங்கம், திருமிகு. கே.எஸ். குமார், தமிழ்நாடு ஒடுக்கப்பட்டோர் வாழ்வுரிமை இயக்கம், திருமிகு. ரேவதி – திரைப்பட இயக்குநர், பத்திரிக்கையாளர் திருமிகு. கவிதா முரளிதரன் – இந்தியா டுடே, திருமிகு. வர்ஜில், இயக்குநர் – அருணோதயா, திருமிகு. தாமஸ் ஜெயராஜ், குழந்தை உரிமைக்கான முன்னணி ஆகியோர் ஆர்ப்பாட்ட கோரிக்கைகளை ஆதரித்து கருத்துரையாற்றினர்.

மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி 2011ம் ஆண்டில், தமிழகத்தில் 17 மாவட்டங்களில் 6 வயதிற்குட்பட்ட குழந்தைகளின் பாலின விகிதம் 2001 கணக்கெடுப்பை விட குறைந்துள்ளது.

பிறப்பு பதிவு ஆவணத்தின்படி 2011ம் ஆண்டில் பிறக்கும் குழந்தைகளின் பாலின விகிதம் 905 ஆகும். 2012ம் ஆண்டில் 900க்கும் குறைவாக கடலூர் (868), தர்மபுரி (868), திருச்சி (882), மற்றும் கிருஷ்ணகிரி (888) மாவட்டங்களில் பிறக்கும் குழந்தைகளின் பாலின விகிதம் உள்ளது. இந்த புள்ளி விவரங்கள் தமிழகத்தில் பெண் குழந்தைகள் கருவிலேயே அழிக்கப்பட்டு வருவது அதிகரித்து வருவதையும், பெண் கருக்கொலையைத் தடுப்பதற்கான சட்டம் நடைமுறைப்படுத்தப்படாததையும் உறுதி செய்கிறது. ஸ்கேன் மையங்களின் எண்ணிக்கை அதிகரிக்க அதிகரிக்க பெண் குழந்தைகளின் பிறப்பு பாலின விகிதம் குறைந்து கொண்டே வருகிறது. அது மட்டுமல்லாது, சேலம் மற்றும் தர்மபுரி மாவட்டங்களில் பெண் சிசு மரணங்களும் அதிகரித்து வருகின்றன. இந்த புள்ளி விவரங்கள் நம்மை அச்சுறுத்துவதாக உள்ளது. ஒரு மாதத்திற்குள் நிகழும் சிசு மரணம், ஒரு வருடத்திற்குள் நிகழும் சிசு மரணத்தில் 75 சதவிகிதமாகும்.

இந்த உண்மைகள் தெரிந்திருந்தும், தமிழக அரசு பெண் கருக்கொலையைத் தடுப்பதற்காக கொண்டு வரப்பட்ட "கருவுறுவதற்கு முன்பு மற்றும் பிறக்கும் குழந்தைகளின் குறைபாடுகளைக் கண்டறிய உதவும் மருத்துவ தொழில்நுட்பம் (பாலினத்தை தெரிவு செய்வதை தடுத்தல்) சட்டம் 2002" ஐ நடைமுறைப்படுத்த போதிய கவனம் செலுத்தவில்லை. பெண் குழந்தை பாதுகாப்பு திட்டம், தொட்டில் திட்டம் என்றெல்லாம் அறிமுகம் செய்த போதும், பிரச்சனையின் ஆணிவேரை அவை களைவதாக இல்லை. பெண்களுக்கான நலச்சேவை என்பதே அவர்களது மகப்பேறு சார்ந்த சேவைகளோடு சுருங்கி வருகிறது. மகப்பேறு மரணங்களும், அதிகரித்து வரும் இள வயது திருமணங்களும், பெண்கள் மீதான வன்முறைகளும் நம்மை அச்சுறுத்துவதாகவே உள்ளது. தேசிய குடும்ப நல கணக்கெடுப்பானது, தமிழகத்தில் 24 சதவிகித திருமணங்கள் 18 வயதிற்குள் நடந்துள்ளன என்று கூறுகிறது. பள்ளி செல்லும் குழந்தைகளில் (வளரிளம் பெண்கள்) 75 சதவிகிதத்தினர் இரத்தசோகையால் பாதிக்கப்பட்டுள்ளனர். மூன்றில் இரண்டு பங்கு குழந்தைகள் இரத்தசோகையுடனும், மூன்றில் ஒரு பங்கு குழந்தைகள் சத்துக்குறைபாடுகளுடனும் உள்ளனர். இந்நிலையில், அரசானது ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சித் திட்டத்தை தனியார்மயமாக்கும் முயற்சியில் உள்ளது. இந்த சூழல் அரசுக்கு பாலின சமத்துவம் குறித்த தெளிவில்லை என்பதை வெளிப்படையாக உணர்த்துகிறது. அரசின் இந்த மெத்தனப் போக்கையும், பாலின சமத்துவமற்ற கொள்கைகளையும் எதிர்ப்பதுடன், பெண்கள் மீதான வன்முறையை ஒழிக்கக் கோரியும், பெண்ணின் மீதான உச்சகட்ட வன்முறையான கருக்கொலை மற்றும் சிசுக்கொலையைத் தடுத்து நிறுத்தக் கோரியும், குறைந்து வரும் பெண் குழந்தைகள் எண்ணிக்கை குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்தி ஆதரவு திரட்டவும், பெண் கருக்கொலைக்கு எதிரான பிரச்சாரமும், அதன் தோழமை அமைப்புகளும் இணைந்து இந்த ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

### ஆர்ப்பாட்ட கோரிக்கைகள்:

- கருவுறுவதற்கு முன்பு மற்றும் பிறக்கப்போகும் குழந்தைகளின் குறைபாடுகளைக் கண்டறிய உதவும் தொழில்நுட்பங்கள் (பாலினத்தை தெரிவு செய்வதை தடுத்தல்) சட்டம் 2002–ஐயும், மருத்துரீதியான கருக்கலைப்புச் சட்டம் 1971–ஐயும் தீவிரமாக அமல்படுத்து.
- பல வருடங்களாக அமைக்கப்படாமல் உள்ள மாநில கண்காணிப்புக் குழுமத்தையும், மாநில ஆலோசனைக் குழுவையும் உடனடியாக அமைத்திடு.
- பிறக்கும் குழந்தைகளின் பாலின விகிதம் (Sex Ratio at Birth), ஓராண்டிற்குள் இறக்கும் குழந்தைகளின் பாலின விகித வித்தியாசத்தை (Infant Mortality Rate – Gender differential) ஆகியவற்றை முக்கிய நல அளவீடுகளாக இணைத்திடு.
- கலைக்கப்பட்ட கருவின் பாலினத்தை அனைத்து மருத்துவரீதியான கருக்கலைப்பு மையங்களிலும் ஆவணப்படுத்த உத்தரவிடு.
- அதிகரித்து வரும் ஸ்கேன் மையங்கள், குறைந்து வரும் பெண் குழந்தைகள் இரண்டுக்குமிடையே உள்ள தொடர்பு குறித்து ஆய்வு நடத்தி அறிக்கையை வெளியிடு.

# பிறக்காத குழந்தையின் பாலினத்தைத் தேர்வு செய்ய எப்படி உதவுகிறது கூகுள்?

– ரூஹி காந்தாரி

கூகுள் இந்தியா (www.google.in), வலைத் தொடர்பில் அமெரிக்க மக்களிடையேயான பாலினத் தேர்வு பற்றி சாதாரணமாகத் தேடினால் அது 'தி ஃபெர்ட்டிலிடி இன்ஸ்டிடியூட்ஸ்' என்ற வலைத்தளத்திற்கு இட்டுச் செல்கிறது. ஒரு இளம் தம்பதியினர் ஒரு ஆண்குழந்தையை முத்தமிடும் புகைப்படம்தான் தேடலுக்கான முதல் விடையாக இருக்கிறது. தி ஃபெர்டிலிடி இன்ஸ்டிடியூட்ஸ் பாலினத் தேர்வு தொழில்நுட்பத்தில் உலகளாவிய அளவில் ஒரு முதன்மையான நிறுவனமாகக் காட்டப்பட்டிருக்கிறது.

"நீங்கள் உங்கள் அடுத்த குழந்தையின் பாலினம் என்னவாக இருக்க வேண்டும் என்பதை உறுதிப்படுத்த விரும்புவீர்களானால் PGD (Preimplantation Genetic Diagnosis) முறையைவிட சரியான தொழில்நுட்பம் வேறில்லை," என்று அந்த வலைத்தளம் தெரிவிக்கிறது. தாயின் கருப்பையில் கருமுட்டையைச் செலுத்துவதற்கு முன்பாகவே PGD மரபணுக்களைத் தேவைக்கேற்ற வகையில் மாற்றம் செய்கிறது. பிறக்காத குழந்தைகளின் பாலினத்தைத் தேர்வு செய்வது குற்றச் செயலாக, இருபது ஆண்டுகளுக்கு முன்பே அறிவிக்கப்பட்டிருந்தாலும் இப்படிப்பட்ட தகவல்களை வெளியிடும் கூகுள், எம்.எஸ்.என், யாஹூ ஆகிய வலைத்தளங்கள் மீது எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. கூகுள் இந்தியா நிறுவனம், பாலினத் தேர்வு செய்ய உதவும் நிறுவனங்களைப்பற்றிய விளம்பரங்களை வெளியிடுவதன் மூலம் குழந்தையின் பாலினத்தை கருவுறுவதற்கு முடிவு செய்யக் காத்திருக்கும் தம்பதியினருக்கும் அத்தகைய வெளிநாட்டு மையங்களுக்கும் இடையே தொடர்பை ஏற்படுத்திக் கொடுக்கிறது.

"இணையமானது இன்னாரின் கவனத்தை ஈர்ப்பது என குறி வைத்த விளம்பரங்களை வழங்குகிறது. கருவின் பாலினத்தை நிர்ணயிக்க விரும்புவோருக்கு மட்டுமே இந்த விளம்பரங்கள் கண்ணில் படும்," என்று கூறுகிறார் சாபு ஜார்ஜ். யாஹூ, மைக்ரோசாஃப்ட், கூகுள் ஆகிய தேடுதளங்கள் மீது 1994ம் ஆண்டின், கருவுருவதற்கு முந்தைய மற்றும் பிறப்புக்கு முந்தைய சோதனைகள் சட்டத்தை (PCPNDT) மீறியதாக பொதுநல வழக்கு தொடுத்தவர் இவர். பிறக்காத குழந்தையின் பாலினத்தை நிர்ணயிப்பதற்காக ஒரு லட்சம் ரூபாய் செலவு செய்து வெளிநாடுகளுக்கு பயணம் மேற்கொள்ளும் பணக்கார தம்பதியினரைத்தான் இவர் குறிப்பிடுகிறார். இது குறிப்பாக ஆண் வாரிசுகளை அதிகம் எதிர்பார்க்கும் இந்தியாவிற்கும் சீனாவிற்கும் பொருந்தும். பாலினத் தெரிவு அடிப்படையிலான கருக்கலைப்பின் மூலமாக உயிர்வாழும் உரிமையை மறுப்பது இந்தியாவில் பாலினப் பாகுபாடு தொடர்கிறது என்பதற்கான மிகத் தெளிவான வெளிப்பாடாகும்.

PCPNDT சட்டத்தின் 22ஆம் பிரிவு பாலினத் தெரிவு பற்றிய விளம்பரங்களை மிக வெளிப்படையாகத் தடை செய்கிறது. ஒரு நபரோ அமைப்போ பாலினத் தெரிவைப் பற்றிக் கூறும் ஆராய்ச்சிக் கூடத்தைப் பற்றியோ மையத்தைப் பற்றியோ ஆலோசனை மையம் பற்றியோ விளம்பரங்களை வெளியிடவும் விநியோகிக்கவும் கூடாது என்று இந்தச் சட்டப்பிரிவு கூறுகிறது.

### அதிகமாகக் காணாமல் போகும் பெண் குழந்தைகள்

இந்த சட்டம் அமலில் இருக்கின்றபோதிலும், கடந்த 10 ஆண்டுகளாக பாலினத் தெரிவு கருச்சிதைவுகள் இந்தியாவின் வடகிழக்கு, கிழக்கு மற்றும் தெற்குப் பகுதிகளில் அதிகரித்திருப்பதாக 2011ஆம் ஆண்டின் மக்கள் தொகை கணக்கெடுப்பு தெரிவிக்கிறது. 2001ல் 260 இந்திய மாவட்டங்களில் 1000 ஆண் குழந்தைகளுக்கு 950 பெண் குழந்தைகள் (6 வயதிற்குட்பட்ட குழந்தைகள்) இருந்தது; இத்தகைய மாவட்டங்களின் எண்ணிக்கை 2011ல் 155ஆகக் குறைந்துவிட்டது. 1961 முதல் ஒவ்வொரு மக்கள்தொகைக் கணக்கெடுப்பிலும் இந்தியாவில் குழந்தைகளின் பாலின விகிதம் குறைந்துகொண்டே வருகிறது; 1961ல் 976ல் இருந்து 1971ல் 964; 1981ல் 962; 1991ல் 945; 2001ல் 927; கடைசியாக வந்த தகவல்படி 2011ல் 914.

1980ம் ஆண்டுகளில் இருபது லட்சமாக இருந்த பாலினத் தெரிவு கருக்கலைப்பு செயல்கள், 1990களில் 12 லட்சம் முதல் 41 லட்சம் வரை இருந்தது என்றும் 2000வது ஆண்டுகளில் 31 லட்சம் முதல் 60 லட்சம் வரை இருந்தது என்றும் டோரொன்டோவைத் தலைமையகமாகக் கொண்ட புதுதில்லியிலும் பெங்களூருவிலும் செயல்படும் லாப நோக்கற்ற நிறுவனமான உலகளாவிய சுகாதார ஆராய்ச்சி மையத்தின் (Centre for Global Health Research) நிறுவனரும் இயக்குநருமான பேராசிரியர் பிரபாத் ஜா–வின் மதிப்பிட்டுள்ளார். இதை வேறுமாதிரியாகச் சொல்வதாக இருந்தால் சுமார் 60 லட்சம் பெண் குழந்தைகள் கருவழிக்கப்பட்டு பிறப்பதற்கு முன்பே உயிர்வாழும் உரிமை மறுக்கப்பட்டிருக்கிறது.

அதிகப் படிப்பறிவும் செல்வமும் உள்ள குடும்பங்களில் பாலினத் தெரிவு கருக்கலைப்பு நடைபெறுவது இந்தியாவில் கண்டுகொள்ளப்படாத ஒரு அம்சமாக உள்ளது. இதனைக் கல்வியாளர்கள் 'செழிப்பின் விளைவு' எனக் கூறுகின்றனர். தில்லி ஐஐடி–யில் மானுடம் மற்றும் சமூக அறிவியல் பேராசிரியராகப் பணிபுரியும் ரவீந்தர் கௌர் கூற்றுப்படி செல்வமும் சொத்துக்களும் நிறைந்த குடும்பத்தில் அந்தச் சொத்துக்கள் குடும்பத்துக்குள்ளேயே இருப்பதை உறுதி செய்வதற்காக தங்கள் குடும்ப வாரிசின் பாலினத்தைத் தேர்வு செய்கிறார்கள்.

1999–2000ல் எடுக்கப்பட்ட தேசிய மாதிரிக் கணக்கெடுப்பின் இத்தகைய குழந்தைப் பாலின விகிதம் செல்வம் நிறைந்த குழுக்களிடையே அதிகம் உள்ளது. கிராமப்புறங்களில் வசதி படைத்த 5 சதவீத குடும்பங்களில் 1000 ஆண்குழந்தைகளுக்கு 804 பெண் குழந்தைகளும், 5 சதவீத வசதியற்ற குடும்பங்களில் 946 பெண் குழந்தைகளும் உள்ளனர்; நகர்ப்புறங்களில் வசதி படைத்த 5 சதவீத குடும்பங்களில் 819 பெண் குழந்தைகளும் வசதியற்ற 5 சதவீத குடும்பங்களில் 903 பெண் குழந்தைகளும் உள்ளனர். பாலினத் தேர்வு தடை செய்யப்பட்ட நாடுகளைச் சேர்ந்த, தங்கள் குடும்பத்தின் பாலின விகிதாச்சாரத்தை வடிவமைக்க விரும்புவோருக்கு அமெரிக்காவும் ஐரோப்பாவின் சைப்ரஸும் விருப்பமான இலக்குகளாக இருக்கின்றன. ஆண் குழந்தைகளை விரும்பக்கூடிய வசதி வாய்ந்த இந்தியக் குடும்பங்களுக்கு மிக அருகாமையில் உள்ள ஒரு மருத்துவச் சுற்றுலா மையமாக ஐக்கிய அரபு குடியரசு உருவாகியிருப்பதாக புதுதில்லியைச் சேர்ந்த ஒரு மருத்துவ சுற்றுலா நிறுவன அதிகாரி தெரிவிக்கிறார்.

"வசதிவாய்ந்த இந்திய குடும்பத்தார் தங்கள் பிறக்காத குழந்தைகளின் பாலினத்தை முடிவு செய்வதற்காக அமெரிக்காவிற்கும் ஐரோப்பாவிற்கும் பயணிப்பதற்கு விரும்புகின்றனர். வலைத்தளத்தில் இந்த நாடுகளில் இத்தகைய மையங்களைப்பற்றி தெரிந்துகொண்ட தம்பதியினர் எங்களிடம் வருகின்றனர்," என்று கூறுகிறார். PCPNDT சட்டத்தை அமல்படுத்துவதற்காகவும் பாலினத் தேர்வைத் தடை செய்வதற்காகவும் சிங்கப்பூர், துபாய், நேபாளம் ஆகிய நாடுகளுக்கு கர்ப்பமுற்ற பெண்கள் பயணிப்பதைக் கண்காணிக்க வேண்டும் என்று 2012 மார்ச் மாதம் மஹாராஷ்டிரா கண்காணிப்பு வாரியம் பரிந்துரைத்தது. உண்மையான சுற்றுலாப் பயணிகளையும் பாலினத்தைத் தேர்வு செய்வதற்காகப் பயணிப்போரையும் வேறுபடுத்திக் கண்டுபிடிப்பது மிகக் கடினமான செயல், ஆதலால் இந்தப் பரிந்துரை அமலாக்கப்படாமலேயே கைவிடப்பட்டது.

### பொய்யான வாக்குறுதி

ஜனவரி 2005ல் இந்திய உள்துறை அமைச்சகம், சுகாதார மற்றும் குடும்பநல அமைச்சகத்திடம் இதுபற்றிய தனது கவலையைத் தெரிவித்தது. மத்திய சுகாதார மற்றும் குடும்பநல அமைச்சகத்திடம் இருந்து தொடர்பு மற்றும் தகவல் தொழில்நுட்பத் துறை அமைச்சகத்துக்கு செப்டம்பர் 2009ல் எழுதிய கடிதத்திலும் இதுபோன்ற கவலையைத் தெரிவித்தது. அமைச்சகங்கள் தங்களுக்குள் கடிதம் எழுதிக்கொண்டிருந்த வேளையில் ஜார்ஜ்அவர்களின் வழக்கில், கூகுள் இந்தியா தனது பதிலைத் தாக்கல் செய்தவுடன் இது சம்பந்தமான பேச்சு வார்த்தை முற்றிலும் நின்றுவிட்டது. அரசாங்கம் இந்தப் பிரச்சனை முடிவுக்கு வந்ததாகக் கருதுகிறது. இந்தக் கட்டுரை சம்பந்தமாக தொடர்புகொண்டபோது கருத்துக் கூற கூகுள் மறுத்துவிட்டது.

ஐக்கிய முற்போக்கு கூட்டணி அரசு சொன்னதைப் போலவே இன்றைய அரசும் பாலினத் தேர்வு அடிப்படையிலான கருக்கலைப்பு தொடர்பான அவசர நடவடிக்கை அவசியம் என்று கூறுகிறது. ஆனால், பணக்கார, நகர்ப்புறம் சார்ந்த குடும்பங்களை இலக்கு வைத்த திட்டங்களோ கொள்கைகளோ இதுவரை உருவாக்கப்படவில்லை. இந்தியாவில் செல்வச் செழிப்பிற்கும், பெண் குழந்தைகளுக்கு எதிரான மனநிலைக்கும் இடையே ஒரு நெருங்கிய இணைப்பு இருக்கிற பிரச்சனை முற்றிலுமாக கண்டுகொள்ளப்படாமலேயே இருக்கிறது.

**ஆதாரம்: டெஹெல்கா, 6 டிசம்பர் 2014**

- பெண் குழந்தைகள், வளரிளம் பெண்கள், கருவுற்ற பெண்கள், பாலூட்டும் தாய்மார்களுக்கான அனைத்து அரசு நலத்திட்டங்களுக்காக ஒதுக்கப்பட்ட நிதி குறித்தும், திட்ட செயல்பாடு குறித்தும் வெள்ளை அறிக்கை வெளியிடு.
- ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சி திட்டத்தை தனியார் மயமாக்கும் முயற்சியை உடனே கைவிடு.
- ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சித் திட்டத்தில் நடைபெறுகின்ற முறைகேடுகளைக் களைய நடவடிக்கை எடுத்திடு.
- ஆரம்ப கால குழந்தைப் பருவப் (0–3 வயது) பராமரிப்பிற்குச் சட்டம் இயற்றிடு.
- அனைத்து திருமணங்களையும் பதிவு செய்ய வலியுறுத்தும் சட்டத்தை அமுல்படுத்திடு.
- அனைத்து மாவட்டங்களிலும் பிறக்கும் குழந்தைகளின் இறப்பு குறித்து வெள்ளை அறிக்கை வெளியிடு.
- பெண்களின் திருமண வயதை 21 –ஆக உயர்த்திட சட்டத் திருத்தம் கொண்டு வந்திடு.
- பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கான நலம் மற்றும் வளர்ச்சி குறித்த அனைத்து திட்டங்களும் மக்களை எளிதில் சென்றடையும் வகையில், ஊரக மேம்பாட்டுத்துறை, சமூக நலத்துறை, சுகாதாரத் துறை, கல்வித்துறை ஆகியவைகள் இணைந்து செயல்பட நடவடிக்கை எடுத்திடு.
- குழந்தைகள் மற்றும் பெண்களுக்கு வன்முறையற்ற பாதுகாப்பான சூழலை உறுதி செய்திடு.

எனவே, தமிழக அரசானது சமூகத்தில் நிலவி வரும் பெண் வெறுப்புக் கொள்கையை, மனப்பான்மையை ஒழித்திடத் தேவையான அனைத்து நடவடிக்கைகளையும் உடனடியாக மேற்கொள்ள வேண்டும். **0 – 18** வயது வரை உள்ள குழந்தைகளின் அனைத்து உரிமைகளையும் உறுதி செய்யப்படுவதோடு, குறிப்பாக, பெண் குழந்தைகளின் பிறக்கும் உரிமை மற்றும் வாழும் உரிமை காக்கப்படத் தேவையான சமூக, பொருளாதார, அரசியல் சூழலை ஏற்படுத்தி வன்முறையற்ற வாழ்வையும், மாண்புடனான வாழ்வையும் வழங்குமாறு வேண்டுகிறோம்.

## பாடம் நடத்தாமல் அரட்டை அடித்த ஆசிரியர் ‘சஸ்பெண்ட்’ : கடலூர் சி.இ.ஒ., அதிரடி உத்தரவு

கடலூர்: பள்ளிக்கு வந்தும், பாடம் நடத்தாமல் பொழுதை ஓட்டிய பட்டதாரி ஆசிரியரை, ’சஸ்பெண்ட்’ செய்து, மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர் (சி.இ.ஒ.,) உத்தரவிட்டார்.

கடலூர் அடுத்த சாமியார்பேட்டையில், அரசு மேல்நிலைப் பள்ளி உள்ளது. இங்கு, வரலாறு பட்டதாரி ஆசிரியராக, நந்தகுமார் என்பவர் வேலை பார்க்கிறார். இவர் தினமும், பள்ளிக்கு வந்தாலும், பாடம் எடுப்பதில்லை என கூறப்படுகிறது. இது குறித்து, வகுப்பு மாணவர்கள், கடந்த, 2ம் தேதி, கலெக்டரை சந்தித்து, புகார் தெரிவித்தனர். ’பொதுத்தேர்வு நெருங்கிவிட்ட நிலையில், இன்னும் வரலாறு பாடங்களை, ஆசிரியர் முடிக்கவில்லை. நாங்கள், வரலாறு பாடத்தில் தேர்ச்சி பெறுவோமா என்பது சந்தேகமாக உள்ளது’ என, கலெக்டரிடம் தெரிவித்தனர். மாணவர்களைத் தொடர்ந்து, பெற்றோர் ஆசிரியர் கழகத்தினரும், கலெக்டரை சந்தித்து முறையிட்டனர். இதையடுத்து, கலெக்டர், சுரேஷ் குமாரின் உத்தரவின்படி, முதன்மைக் கல்வி அலுவலர், பாலமுரளி, சாமியார்பேட்டை பள்ளியில் விசாரணை நடத்தினார். அதில், மாணவர்கள் மற்றும் பெற்றோர் ஆசிரியர் கழக நிர்வாகிகள் கூறிய குற்றச்சாட்டுகள் உண்மை என தெரிய வந்தது. இதனால், ஆசிரியர், நந்தகுமாரை, ’சஸ்பெண்ட்’ செய்து, நேற்று, சி.இ.ஒ., உத்தரவிட்டார். நந்தகுமார், ஏற்கனவே நெல்லிக்குப்பம் ஆண்கள் மேல்நிலைப் பள்ளியில் பணியாற்றியபோது, இதே குற்றச்சாட்டின் பேரில், ’சஸ்பெண்ட்’ செய்யப்பட்டவர் என்பது குறிப்பிடத்தக்கது.

**’ஆசிரியர் செய்தது துரோகம்’:**

அரசு உயர்நிலை, மேல்நிலைப் பள்ளி தலைமை ஆசிரியர்கள் சங்க பொதுச்செயலர், சாமி சத்தியமூர்த்தி கூறியதாவது: ஆசிரியர்களுக்கு, மதிப்பிற்குரிய ஊதியத்தை அரசு வழங்கி வருகிறது. ஏழை, எளிய பெற்றோர், தங்களது பிள்ளைகளை, அரசு பள்ளிகளுக்கு, ஆசிரியர்களை நம்பி அனுப்பி வைக்கின்றனர். பெற்றோரின் நம்பிக்கைக்கு எதிராக, மாணவர்களுக்கு துரோகம் செய்யும் ஆசிரியர்கள் மீது நடவடிக்கை எடுப்பது தேவையான ஒன்று தான். மற்ற ஆசிரியர்களுக்கும் இது பாடமாக இருக்கும். இவ்வாறு அவர் தெரிவித்தார்.

**ஆதாரம்: தினமலர், 7.1.2015**

# பாலியல் வன்முறையால் பாதிக்கப்பட்டவர்கள் தோற்பது ஏன்?

**– ஜோனதன் டெர்பி**

*நீதிமன்றங்களில் வரம்பே இல்லாமல் விசாரணைகள் இழுத்தடிக்கப்படுகிற கலாச்சாரம், பாதிக்கப்பட்டவர்களுக்கு அநீதி இழைக்கப்படுவதற்கு இட்டுச் செல்கிறது.*

இந்தியாவின் நீதிமன்றங்களில் விசாரணைகள் தாமதப்படுத்தப்படுவதும் ஒத்தி வைக்கப்படுவதும் ஒரு கலாச்சாரமாகவே மாறியுள்ளது. இது குற்றவியல் நடைமுறைச் சட்டத்திற்கே முரணானதாகும். இந்த செயலூக்கமற்ற, ஒழுங்குமுறையற்ற நடைமுறைகள் விசாரணைகளின் வேகத்தை மட்டுப்படுத்துகின்றன. பெரும்பாலும், குற்றச்செயல்களால் பாதிக்கப்பட்டவர்களுக்கு பாதகமான விளைவுகளே இதனால் ஏற்படுகின்றன.

உதாரணத்திற்கு ஷேவியா (பெயர் மாற்றப்பட்டுள்ளது) வழக்கை எடுத்துக்கொள்வோம். தனது 19 வயது அண்ணனாலேயே வன்புணர்வுக்கு உள்ளாக்கப்பட்டபோது ஷேவியாவின் வயது 15. குற்றச்சாட்டை அந்த அண்ணன் மறுத்துவிட்டான். ஆகவே, பொய் சொல்லிவிட்டதாக ஷேவியாவை அவருடைய தாய் அடித்தார். தெற்கு டில்லியில் உள்ள இவர்களுடைய சிறிய, ஒரு அறை மட்டுமே கொண்ட வீட்டில், அண்ணன் மீண்டும் வன்புணர்ச்சி செய்தபோது ஷேவியா வீட்டை விட்டு ஓடியதில் வியப்பில்லை. இந்த முறை ஷேவியா தனக்கு நேர்ந்ததை காவல் நிலையத்திற்குச் சென்று புகார் செய்தார்.

குடும்பத்தினர் செல்வாக்கு செலுத்த முடியாத ஒரு பாதுகாப்பு இல்லத்தில் ஷேவியா தங்க வைக்கப்பட்டாலும்கூட, நடந்த சம்பவத்தைப் பற்றி நீதிமன்றத்தில் சொல்ல வேண்டுமா என்பது குறித்து முடிவெடுக்க முடியாமல் தவித்தார். அண்ணனுக்கு ஜாமின் மறுக்கப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டது தனது தவறுதான் என்று ஷேவியா நினைத்தார். கண்காணிப்பின் கீழ் அந்த பாதுகாப்பு இல்லத்திற்கு ஷேவியாவின் தாய் வந்தபோதெல்லாம், குடும்பத்திற்கு ஏற்பட்ட கஷ்டங்களையும் அவமானங்களையும் சொல்லி அதற்கெல்லாம் காரணம் ஷேவியாதான் என்று பழி சுமத்திவிட்டுப் போனார்.

ஆயினும், இறுதியாக நீதிமன்றத்தின் சாட்சிக் கூண்டில் ஏறி நின்றபோது, அந்த வன்புணர்ச்சிக் குற்றம் பற்றிய உண்மையைச் சொல்லுகிற தைரியம் ஏற்பட்டிருந்தது. நீதிமன்றத்தில் அவரது வாக்குமூலம், ஏற்கெனவே புகார் பதிவு செய்தபோது கூறியதுடனும், விசாரணைக்கு முன்பாக ஒரு குற்றவியல் நடுவரிடம் அளித்த வாக்குமூலத்துடனும் ஒத்துப்போனது. இருந்தபோதிலும் நீதிபதி குறுக்கு விசாரணையைத் தள்ளி வைத்தார்.

மறுநாள் ஷேவியா அவருடைய குடும்பத்தாரிடமே ஒப்படைக்கப்பட்டார். ஆகவே, குறுக்கு விசாரணையின்போது ஷேவியா என்ன சொல்வார் என்பது ஊகிக்கக்கூடியதாக மாறியது. குடும்பத்தினரின் நிர்ப்பந்தங்களுக்குப் பணிய நேரிட்ட ஷேவியா தனது வாக்குமூலத்தை மாற்றிக் கூறினார். நான்கரை மாதங்கள் கழித்து, மேலும் இரண்டு முறை விசாரணை ஒத்தி வைக்கப்பட்டதற்குப் பிறகு, நீதிமன்றத்தில் தனது இறுதி வாக்குமூலத்தை அளித்த ஷேவியா, இதுவரையில் தான் சொன்னது அனைத்தும் பொய் என்றார். அண்ணன் தன்னை ஒருபோதும் வன்புணர்ச்சிக்கு உட்படுத்தவில்லை என்று கூறினார்.

விசாரணை நீதிமன்றங்கள் நடைமுறையில் எவ்வாறு செயல்படுகின்றன என்பது குற்றவியல் சட்டம் கூறுவதற்கு மாறாகவே இருக்கிறது. குற்றவியல் நடைமுறைச் சட்டத்தின் 309வது பிரிவு, நீதிபதிகள் தினந்தோறும் விசாரணையை நடத்த வேண்டும் என்றும், சாட்சிகள் நீதிமன்றத்தில் இருக்கிறபோதே வாக்குமூலம் அளிக்க வேண்டும் என்றும் கூறுகிறது. பாலியல் குற்றங்களிலிருந்து குழந்தைகளை பாதுகாப்பதற்கான 2012ம் ஆண்டின் சட்டம் (POCSO), நீதிமன்றம் வழக்கை விசாரணைக்கு எடுத்துக்கொள்கிற 30 நாட்களுக்குள் குழந்தைகளிடமிருந்து வாக்குமூலம் பெற வேண்டும் என்று வரையறுத்துள்ளது. பாலியல் அத்துமீறல் வழக்குகளில், பாதிக்கப்பட்டவர் உண்மையைக் கூறுவதற்கும், குற்றம் நடந்ததை உறுதிப்படுத்துவதற்கும் இந்த விதிகள் முக்கியமானவையாகும். பாதிக்கப்பட்டவர்கள் வாக்குமூலம் அளிப்பதற்கான விசாரணை எவ்வளவுக்கெவ்வளவு இழுத்தடிக்கப்படுகிறதோ அவ்வளவுக்கவ்வளவு அவர்கள் தங்களது வாக்குமூலத்தை மாற்றிச் சொல்வதற்கும் வழக்கில் சமரசம்

செய்துகொள்வதற்குமான வாய்ப்பு அதிகரிக்கிறது. ஷேவியா விஷயத்தில் நடந்தது இதுதான். நாடாளுமன்றம் இந்தச் சட்டத்தை நிறைவேற்றியபோது என்ன எதிர்பார்த்ததோ அதிலிருந்து வெகுதூரம் விலகிச் செல்லும் காரணங்களுக்காக நடைமுறையில் நீதிபதிகள் விசாரணைகளை திரும்பத் திரும்ப ஒத்திப் போடுகிறார்கள். குற்றம்சாட்டப்பட்டவர்கள் தரப்பு வழக்குரைஞர்கள் தொடர்ச்சியாக வருவதில்லை. அல்லது உரிய தயாரிப்புடன் இல்லை என்பதால் விசாரணையை ஒத்திப்போடக் கோருகிறார்கள். வேறு விசாரணைகளுக்கு செல்ல வேண்டியிருப்பதாலும் இந்த விசாரணைகளை ஒத்திப்போடக் கோருகிறார்கள். இதனால் நீதிபதிகளுக்கு வழக்குத் தொடர்பான ஆதாரங்கள் தொடர்ச்சியாக இல்லாமல் துண்டுதுண்டாகவே கிடைக்கின்றன. வழக்கு நடைமுறை பல விசாரணைகளாக உடைக்கப்படுகிறது. விசாரணைகள் முடிய வாரக் கணக்கில், மாதக் கணக்கிலும் கூட ஆகிறது. ஒவ்வொரு விசாரணையின்போதும் ஓரிரு சாட்சிகள் வாக்குமூலம் அளிக்கக்கூடும். ஆனால், அதுவும் அந்த நாட்களில் சாட்சிகள் நீதிமன்றத்திற்கு வந்திருந்தால்தான்.

நீதிபதிகள் இத்தகைய விசாரணைகளை செயல்திறனின்றி, மந்தமான முறையில் நடத்துவது குறித்து உச்சநீதிமன்றம் பல முறை விமர்சித்துள்ளது. உதாரணமாக, மோகன்லால் எதிர் பஞ்சாப் அரசு வழக்கை (AIR 2013, SC 2408) எடுத்துக்கொள்வோம். ஒரு பதின்பருவப் பெண் அவரது ஆசிரியர்களால் கும்பலாக வன்புணர்ச்சிக்கு உட்படுத்தப்பட்டார். அந்த பெண்ணின் வாக்குமூலத்தைப் பதிவு செய்ய அமர்வு நீதிமன்ற நீதிபதி 5 நாட்கள் எடுத்துக்கொண்டார். வன்புணர்ச்சி வழக்குகளின் தன்மையை கணக்கில் எடுத்துக்கொண்ட உச்சநீதிமன்றம், இந்த வழக்கை விசாரணை நீதிமன்ற நீதிபதி கையாண்ட விதம் ''அதிர்ச்சியளிக்கிறது'' என்று கூறி விமர்சித்திருக்கிறது. ஷேவியா வழக்கில் நடந்தது போலவே இந்த வழக்கில் நீதிபதி பாதிக்கப்பட்டவரின் முதல் வாக்குமூலத்திற்கும், குறுக்கு விசாரணைக்கும் இடையே பலமுறை விசாரணையை ஒத்தி வைத்தார். அது, குற்றம்சாட்டப்பட்டவர் பாதிக்கப்பட்டவரை நிர்ப்பந்தித்து வாக்குமூலத்தை மாற்றிச் சொல்லுமாறு கட்டாயப்படுத்த கால அவகாசத்தை ஏற்படுத்திக் கொடுத்தது.

நாட்டின் அனைத்து நீதிமன்றங்களையும் போலவே தில்லி நீதிமன்றங்களிலும் வழக்குகள் ஏராளமாகக் குவிந்துள்ளன. இது விரைவில் நீதி கிடைப்பதை சாத்தியமற்றதாக்குகிறது. விசாரணைகள் எவ்வாறு கையாளப்படுகின்றன என்பது நீதியை மிகவும் தாமதப்படுத்துகிறது. குழந்தைகள் பாலியல் கொடுமைகளுக்கு உள்ளாக்கப்படும் வழக்குகளைப் பொறுத்தவரையில் தில்லியில் அதற்கான சிறப்பு நீதிமன்றங்கள் இருக்கின்றன. ஆனால், அவற்றின் நீதிபதிகள் இதர குற்றவியல் வழக்குகளையும் விசாரிக்க வேண்டியவர்களாக இருக்கிறார்கள். அது இந்த வழக்குகளை விரைவில் முடிப்பதற்கு முட்டுக்கட்டையாகிறது.

அண்மைக்காலமாக குழந்தைகளும் அவர்களது குடும்பங்களும் காவல்துறையிடம் பாலியல் அத்துமீறல் குறித்து புகார் செய்வது அதிகரித்து வருகிறது. இந்த நிலையில், விசாரணைகள் இவ்வாறு தாமதமாவது நிலைமையை மேலும் மோசமாக்கிவிடும். தேசிய குற்றப்பதிவு நிறுவனத்தின் அறிக்கைப்படி, 2013ம் ஆண்டில் பதிவான குழந்தைகளுக்கு எதிரான வன்புணர்ச்சிக் குற்றங்கள் 2009ம் ஆண்டில் பதிவானதைவிட 130.3 சதவீதம் அதிகரித்துள்ளது (2009ல் பதிவான குற்றங்கள் 5,368, 2013ல் பதிவானவை 12,363). பொதுவாகவே எல்லா வன்புணர்ச்சிக் குற்றங்களும் இந்தக் காலகட்டத்தில் அதிகரித்துள்ளன. 2009ம் ஆண்டில் 25.1 சதவீதமாகவும், 2013ம் ஆண்டில் 36.7 சதவீதமாகவும் பதிவாகியுள்ளது.

வழக்குகள் குவிவது நீதிமன்றங்களுக்கு ஒரு பெறும் சுமைதான் என்பதில் சந்தேகமில்லை. ஆனால், அதற்காக நீதிபதிகள் 309வது சட்டப்பிரிவை செயல்படுத்துவதில் தங்களது கடமைப் பொறுப்பை கைவிடக்கூடாது. விசாரணைகள் எவ்வாறு நிர்வகிக்கப்பட வேண்டும் என்பதை தீர்மானிக்க வேண்டியது நீதிபதிகள்தானேயன்றி வழக்குரைஞர்கள் அல்ல. சரியான காரணமின்றி, குறிப்பாக சாட்சிகள் நீதிமன்றத்தில் இருக்கிறபோது, விசாரணையை ஒத்தி வைக்க நீதிபதிகள் மறுக்க வேண்டும். வழக்குரைஞர்கள் குறிப்பிட்ட வழக்குகளில் தயாரிப்போடு இல்லை என்பதற்காக அல்லது வேறு பணிகள் இருக்கின்றன என்பதற்காக விசாரணையை ஒத்தி வைக்கக்கூறுவது உடனடியாகவே மறுக்கப்பட்டுவிடும் என்பது அந்த வழக்குரைஞர்களுக்குத் தெரிவிக்கப்பட வேண்டும்.

நீதிமன்றத்தில் ஒரு ஒழுங்குமுறைக் கலாச்சாரத்தை உருவாக்குவதற்கான சட்டப்பூர்வ வழிகள் நீதிபதிகளிடம் இருக்கின்றன. தேவையற்ற கோரிக்கைகளை முன்வைக்கும் வழக்குரைஞர்களுக்கு நீதிபதிகள் கட்டுப்பாடு விதிக்க முடியும். குற்றம்சாட்டப்பட்டவர், ஜாமீனில் விடுவிக்கப்பட்டிருக்கிற நிலையில், சரியான காரணமின்றி விசாரணைக்கு வரத் தவறினால், ஜாமீனை

ரத்து செய்ய வேண்டும். விசாரணையை ஒத்தி வைக்க வேண்டிய சூழல் ஏற்படுமானால், அடுத்த விசாரணைக்கான கால அவகாசத்தை நீதிபதிகள் குறைக்க வேண்டும். அடுத்த வேலை நாளிலேயே விசாரணை எடுத்துக்கொள்ளப்படுவது நல்லது.

ஒவ்வொரு நாளும் விசாரணை நடப்பது அனைத்துத் தரப்பினருக்குமே நன்மை அளிப்பதாக இருக்கும். சரியான, செயலூக்கமுள்ள நீதி கிடைப்பதற்கு வழி வகுக்கும். அமைப்பிலேயே மாற்றங்களை ஏற்படுத்துவதற்கு தில்லியில் உள்ள, குழந்தைகளுக்கு எதிரான பாலியல் குற்றங்களை விசாரிக்கும் நீதிமன்றங்களிலிருந்து நடவடிக்கையைத் தொடங்கலாம். இந்த நீதிமன்றங்களுக்கு வரும் மற்ற வழக்குகளை வேறு நீதிமன்றங்களுக்கு உடனடியாக மாற்ற வேண்டும். அன்றாட அடிப்படையில் சாட்சிகளை நீதிபதிகள் விசாரிக்க வேண்டும். பாதிக்கப்பட்ட குழந்தைகள் வாக்குமூலம் அளிப்பதற்கும், விசாரணையை விரைவில் முடிப்பதற்கும் உதவும் வகையில் விசாரணைக்கான கால அளவுகளை நீதிபதிகள் ஒழுங்குபடுத்த வேண்டும். அத்தகைய நீதிமன்றம், நாட்டின் இதர நீதிமன்றங்களுக்கும் வழிகாட்டியாக செயல்பட முடியும்.

**ஆதாரம்: Economic & Political WEEKLY (EPW) DECEMBER 27, 2014 VOL XLIX No.52**

## கல்விமுறை செல்ல வேண்டிய திசை எது?

அடிப்படைக் கல்வி மறுக்கப்படுவதுதான் மக்களிடையே பாதுகாப்பற்ற நிலையை ஏற்படுத்துகிறது என்று பொருளியல் அறிஞர் அமர்த்திய சென் கூறுவது சாதாரணமான விஷயமல்ல. 2014–ம் ஆண்டுக்கான இந்தியக் கல்வித் தரத்தின் ஆய்வறிக்கையை (ஏ.எஸ்.ஈ.ஆர்.) அந்தப் பின்னணியில் பொருத்திப் பார்த்தால் பல உண்மைகள் புரியவரும். கல்வி கற்றுத்தருவது தொடர்பான கருதுகோள்களும் நடைமுறைகளும் எந்த அளவுக்கு வீழ்ச்சியடைந்திருக்கின்றன என்பதை அறிக்கை உணர்த்துகிறது. மாணவர்கள் எளிதில் மதிப்பெண்களைப் பெற வேண்டும், அதிக மாணவர்கள் இறுதித் தேர்வில் தேர்ச்சி பெற வேண்டும் என்ற நோக்கத்திலான பாடத்திட்டம்தான் மாணவர்களின் திறன் குறைவுக்கு முக்கியமான காரணம். பாடத்தைப் புரிந்துகொண்டு படிப்பது, கணிதத்தின் நான்கு முக்கிய அம்சங்களான கூட்டல், கழித்தல், பெருக்கல், வகுத்தல் ஆகியவற்றை எளிதாகக் கற்றுக்கொள்வது ஆகியவற்றைவிட, தேர்ச்சி விகிதத்துக்கு மட்டுமே முக்கியத்துவம் தரப்படுகிறது.

ஐந்தாம் வகுப்பு மாணவரால் இரண்டாம் வகுப்பு மாணவரின் பாடங்களை எளிதாகப் படிக்க முடியவில்லை. ஐந்தாம் வகுப்பு மாணவர்களில் முக்கால்வாசிப் பேருக்குச் சாதாரண கழித்தல் கணக்கு தெரியவில்லை. இந்த மாணவர்கள் மேல் வகுப்புகளுக்குப் போன பிறகு இந்தத் திறன் அதிகரிப்பது ஓரளவுக்குத்தான் நடைமுறை சாத்தியமாக இருக்கிறது என்பது நமது கல்வி முறையின் தோல்வியைச் சுட்டிக்காட்டுகிறது. 577 மாவட்டங்களில் 5,70,000 மாணவர்களிடம் கேள்விகளைக் கேட்டு பதில்களைப் பெற்று ஏ.எஸ்.ஈ.ஆரின் அறிக்கை தயாரிக்கப்பட்டிருக்கிறது. 6 வயது முதல் 14 வயது வரையுள்ள சிறுவர், சிறுமியரைப் பள்ளிக்கூடங்களில் சேர்ப்பதில் 96 வளர்ச்சி ஏற்பட்டிருப்பது மட்டுமே இதில் ஆறுதலான விஷயம். மாணவர்களின் திறன் குறைவுக்குப் பாடத்திட்டங்களும் பயிற்றுவிப்பு முறைகளுமே முக்கியமான காரணங்கள். அன்றாட வாழ்வில் மக்களுக்குத் தேவைப்படும் கணிதம் என்பது எண்களைப் பற்றியதும் கூட்டல், கழித்தல், பெருக்கல், வகுத்தல்களும்தான். அது இப்போது 9, 10–வது வகுப்பு பாடங்களிலிருந்து நீக்கப்பட்டுவிட்டது. பொறியியல் படிப்பைத் தேர்ந்தெடுக்கப்போகும் மாணவர்களுக்காக இதர மாணவர்களுக்குக் கணிதப் பாடங்களைக் கடினமாக்குவதால் மாணவர்களுக்குத் தேவையற்ற கல்விச்சுமைதான் கூடும்.

ஒரு ஆசிரியர் 30 மாணவர்களுக்கு மட்டுமே பாடம் சொல்லித் தரும் வகையில் ஆசிரியர், மாணவர்கள் எண்ணிக்கை விகிதம் இருக்க வேண்டும். அதை அடைவதற்கு வகுப்பறைகளும் ஆசிரியர்களின் எண்ணிக்கையும் கணிசமாக உயர்த்தப்பட வேண்டும். பள்ளிக் கூடத்துக்குப் பிள்ளைகளை அனுப்புவது வீண் என்று பெற்றோர்கள் நினைத்த காலம் போய், தான் எந்த வகையில் துயரப்பட்டாலும் சரி, தன்னுடைய குழந்தைகளுக்கு நல்ல கல்வி கிடைக்க வேண்டும் என்ற உணர்வு பெற்றோருக்கு ஏற்பட்டிருப்பது வரவேற்கப்பட வேண்டியதே. ஆனால், பாடங்களும் கற்பித்தல் முறைகளும் எளிமையாகவும் பயனுள்ளவையாகவும் இருப்பதே கல்வியின் அடிப்படை நோக்கத்தைப் பூர்த்திசெய்யும். மதிப்பெண்ணுக்காகப் படிப்பதைவிடப் பல கலைகளைக் கற்கவும் உலகைத் தெரிந்துகொள்ளவும் உதவும் கல்வியே வாழ்க்கைக்கு உதவும். தேர்ச்சியும் தேர்ச்சி விகிதமும் கல்வித் துறையின் சாதனைக்கு வெறும் புள்ளிவிவரங்களாக மட்டுமே இருக்க முடியும். தத்தமது வகுப்புக்குரிய பாடங்களைத் தாங்களே படிக்கவும் எழுதவும் புரிந்துகொள்ளவும் முடிவதுதான் கல்வித்தரத்துக்கு உண்மையான உரைகல். அரசும் கல்வித் துறையும் அதை நோக்கிப் பயணிப்பது நல்லது.

**ஆதாரம்: தமிழ் இந்து, ஜனவரி 21, 2015**

# பலிபீடங்களாகும் பள்ளிக் கூடங்கள்

– பிரதீக் கோயல்

*மகாராஷ்டிரா மாநிலத்தின் பழங்குடியினருக்கான அரசுப் பள்ளிகள் குழந்தைகளின் பலிபீடங்களாக மாறியுள்ளன. இந்த சோகமான நிலைமையை மாற்றுவதற்கு இதுவரையில் எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை.*

முகப்புத் தோற்றம் அழகாகத்தான் இருக்கிறது. குழந்தைகள் புன்னகையும் இளஞ்சிவப்பு – பச்சை வண்ண சீருடையும் அணிந்துகொண்டு அந்த புல்வெளி மைதானத்தில் விளையாடிக்கொண்டிருக்கிறார்கள். அவர்களின் பின்னணியில் அழகாக வடிவமைக்கப்பட்ட பச்சை–வெள்ளை வண்ணக் கட்டடம் ஒளிர்கிறது. கட்டடத்தின் வாயிலில் 'ஷசா கியா பிராத்மிக் வ மத்யமிக் ஆஷ்ரம்சாலா' என்ற பெயர் பலகை இருக்கிறது. இது மகாராஷ்டிரா மாநில அரசின் பழங்குடியினர் மேம்பாட்டுத் துறை வெளியிட்டுள்ள தகவல் புத்தகத்தின் அட்டைப் படம். ஆனால், ஆஷ்ரம்சாலா எனப்படும் பழங்குடி குழந்தைகளுக்கான உறைவிடப் பள்ளிகளின் உண்மை நிலைமை, இந்தப் படத்தில் தெரியும் காட்சியிலிருந்து வெகுதூரம் விலகியிருக்கிறது.

உங்கள் சிந்தனைக்கு: 2001 முதல் 2013 வரை இந்தப் பள்ளிகளைச் சேர்ந்த 793 குழந்தைகள் சிறு நோய்களாலும் பாம்புக் கடிகளாலும் இறந்துவிட்டார்கள். அவர்களது இறப்புக்கு முக்கிய காரணம் உடனடியாக மருத்துவ உதவிகள் அவர்களுக்கு கிடைக்கவில்லை என்பதுதான். ஆண்டுக்கு சுமார் 300 கோடி ரூபாய் பட்ஜெட் போடப்படுகிற அந்தப் பள்ளிகள் மோசமான உள்கட்டமைப்பு வசதிகளால் அமைக்கப்பட்டுள்ளன என்று பழங்குடி மக்களின் உரிமைகளுக்காக செயல்பட்டு வருவோர் கூறுகிறார்கள். இந்தப் பள்ளிகளில் வழங்கப்படும் உணவு தரக்குறைவாக இருக்கிறது. பாலியல் அத்துமீறல்கள் இந்தப் பள்ளிகளில் சர்வசாதாரணம்.

**2001 முதல் 2013ம் ஆண்டு வரை இந்தப் பள்ளிகளைச் சேர்ந்த 793 குழந்தைகள் இறந்துவிட்டார்கள். சாதாரண நோய்களும், பாம்புக் கடிகளுமே இதற்குக் காரணம்.**

2012 ஜூலை மாதம் கோண்டியா மாவட்டம் மக்கத்கோடா பகுதியில் உள்ள ஒரு ஆஷ்ரம்சாலாவின் தரையில் படுத்திருந்த 6 குழந்தைகளை ஒரு பாம்பு கடித்துவிட்டது. அவர்களில் இரண்டு குழந்தைகள் உயிரிழந்தார்கள். அந்தப் பள்ளி விடுதியில் கட்டில்கள் கிடையாது. ஆகவே, தரையில் படுப்பதைத் தவிர அந்தக் குழந்தைகளுக்கு வேறு வழியில்லை. இந்தப் பள்ளிகளில் அப்போது பயின்ற குழந்தைகளின் மொத்த எண்ணிக்கை 384. அவர்களில் 150 பேர் தரையில்தான் படுக்க வேண்டியிருந்தது.

2012 டிசம்பரில் நாசிக் மாவட்டத்தில் உள்ள ஒரு ஆஷ்ரம்சாலா வளாகத்திற்குள் 18 வயது பழங்குடிப் பெண் ஒரு கும்பலால் வன்புணர்வுக்கு உட்படுத்தப்பட்டார். விதிமுறைகளை முறையாக பின்பற்றாததற்காகவும், சம்பவ நாளில் பள்ளிக்கு வராமல் இருந்ததற்காகவும் ஒரு கண்காணிப்பாளர் உள்பட அந்தப் பள்ளியின் 15 பணியாளர்கள் இடை நீக்கம் செய்யப்பட்டனர். ஆஷ்ரம்சாலா விதிகளின்படி, குழந்தைகளின் பாதுகாப்புக்காக கண்காணிப்பாளர் பள்ளி வளாகத்தில் எந்த நேரமும் இருந்தாக வேண்டும்.

2009 ஜனவரி மாதம் பால்கார் மாவட்டத்தின் கோவாடே கிராமத்தில் ஆஷ்ரம்சாலாவில் 15 வயது மாணவி கருவுற்றார். பழங்குடியினருக்கான அந்த உறைவிடப் பள்ளியின் கண்காணிப்பாளர், அந்த சிறுமியை பாலியல் வக்கிரத்தோடு பயன்படுத்தி வந்திருக்கிறார் என்று கூறப்படுகிறது. சிறுமியின் வீட்டுப் பிரச்சனைத் தீர்க்க உதவுவதாகச் சொல்லிக்கொண்டு இந்த அத்துமீறலில் அவர் ஈடுபட்டதாகத் தெரிகிறது.

இந்தப் பள்ளிகளுக்காக ஒதுக்கப்படும் கோடிக் கணக்கான பணம் எவ்வாறு செலவிடப்படுகிறது ? இந்த ஆஷ்ரம்சாலாக்கள் உண்மையிலேயே பழங்குடி குழந்தைகளின் வாழ்க்கையில் ஏதேனும் மாற்றத்தை ஏற்படுத்துகின்றனவா ? இதனை அறிவதற்காக 'தெஹெல்கா' நிருபர்கள் குழு ஒன்று இதனை விசாரிக்கச் சென்றது. இந்த மாநிலத்தில் பழங்குடி மக்கள் அதிகமாக வாழ்வது நந்தூர்பார் பகுதிதான். அவர்கள் பில் தாத்வீ, பவாரா ஆகிய பழங்குடி சமூகங்களைச் சேர்ந்தவர்களாவர். 2014 நவம்பர் 14 அன்று சத்புரா மலைப் பகுதியைச் சேர்ந்த அக்கல்குவா வட்டத்தில்

உள்ள தாஹேல் என்ற கிராமத்தில் அரசாங்கத்தால் நடத்தப்படும் ஆஷ்ரம்சாலாவில் ஒரு குடிசை போன்ற கட்டிடத்திற்குள், மரச்சுவர்கள் அமைக்கப்பட்டுள்ள 350 சதுர அடி அறைக்குள், குண்டும் குழியுமாக இருக்கிற தரையை 12 வயது சிறுமிகள் இரண்டு பேர் கூட்டிப் பெருக்கிக்கொண்டிருக்கிறார்கள். அந்த அறையின் மூலைகளில் சிறிய இரும்புப் பெட்டிகள் வைக்கப்பட்டுள்ளன. சுவரில் மாவட்ட வரைபடமும் மாநில வரைபடமும் இருக்கிறது. பக்கத்தில் இந்து மதத்தின் கல்விக் கடவுள் சரஸ்வதி ஓவியம் மாட்டப்பட்டுள்ளது. பழங்குடியினர் மேம்பாட்டுத் துறையின் அதிகாரப்பூர்வ சின்னமும் மாற்றப்பட்டுள்ளது. வெளிச்சுவரிலிருந்து 2 கரும்பலகைகள் தொங்கவிடப்பட்டுள்ளன. பக்கத்தில் உள்ள மற்றொரு குடிசையில் கிழிந்த ஆடைகளோடு சிறுவர்கள் பேசிக் கொண்டிருக்கிறார்கள். அந்தக் கிழிந்த ஆடைகள் அவர்களுடைய சீருடைகள். வேறொரு குடிசையில் 20 வயதிற்கு மேற்பட்ட இளைஞர்கள் சிலர் பிளாஸ்டிக் நாற்காலிகளிலும் கயிற்றுக் கட்டிலிலும் உட்கார்ந்திருக்கிறார்கள்.

**❍ தவறான அணுகுமுறை: பழைய பள்ளிகளை மராமத்து செய்வதை விட்டுவிட்டு புதிய பள்ளிகளைக் கட்டுவதற்கு பணத்தைக் கொட்டுகிறது மாநில அரசு.**

“தலைமையாசிரியருக்காக நாங்கள் காத்திருக்கிறோம். அவர் வந்தவுடன் நாங்கள் குழந்தைகள் தினத்தைக் கொண்டாடுவோம்,” என்கிறார் 29 வயது ரமண்யா வாசவே. இந்தப் பள்ளியில் அவர் ஒரு தற்காலிக ஆசிரியர்.

மகாராஷ்டிரா மாநிலத்திலேயே எழுத்தறிவுபெற்றோர் மிகக் குறைவாக உள்ள வட்டம் அக்கல்குவாதான். தாஹோர் ஆஷ்ரம் சாலாவில் முதல் வகுப்பிலிருந்து 7ம் வகுப்பு வரை இருக்கிறது. 340 மாணவர்கள் பயில்கிறார்கள். இவர்களில் 280 பேர் விடுதியில் தங்கியிருப்பவர்கள். மற்றவர்கள் கிராமத்திலிருந்து தினமும் வந்து செல்கிறவர்கள்.

“இங்கே பெண் குழந்தைகளுக்கும் ஆண் குழந்தைகளுக்கும் தனித்தனி விடுதி வசதிகள் உள்ளன. மொத்தம் 190 பெண் குழந்தைகள் அவர்களுக்கான இரண்டு விடுதிகளிலும், 90 ஆண் குழந்தைகள் அவர்களுக்கான ஒரு விடுதியிலும் தங்கியிருக்கிறார்கள்,” என்று வசாவே தெரிவித்தார்.

இந்த ஆஷ்ரம்சாலாவில் 4 குடிசைகள் உள்ளன. மூன்று குடிசைகள் வகுப்பறைகளாகவும், விடுதிகளாகவும் பயன்படுத்தப்படுகின்றன. நான்காவது குடிசை சமையலுக்குப் பயன்படுத்தப்படுகிறது. இருப்பதிலேயே பெரிய குடிசையில் மூன்று அறைகள் உள்ளன. அந்த அறைகளில் ஒன்று பள்ளியின் அலுவலகமாக இருக்கிறது. மற்றொன்று பொது கழிப்பறையாக இருக்கிறது. ஐந்து அறைகளில் 280 குழந்தைகள் தங்க வைக்கப்பட்டிருக்கிறார்கள். எந்த அறையுமே 350 சதுர அடிக்குமேல் இல்லை. இவ்வாறாக 6 முதல் 14 வயது வரை உள்ள சுமார் 50–60 குழந்தைகள் அடைத்து வைக்கப்பட்டிருக்கிறார்கள். இது தாஹேல் கிராமத்தில் மட்டும் உள்ள காட்சியல்ல. மாறாக மாநிலத்தின் எல்லா ஆஷ்ரம்சாலாக்களிலும் இதே நிலைமைதான்.

இந்தப் பள்ளிகளின் நிலைமைகள் பழங்குடியினர் மேம்பாட்டுத் துறை வகுத்துள்ள விதிமுறைகள் பறக்கவிடப்பட்டிருப்பதைக் காட்டுகின்றன. அந்த விதிகளின்படி ஒரு ஆஷ்ரம்சாலா முறையான கட்டிடத்தில், வகுப்பறைகளுக்கும் விடுதிகளுக்கும் போதுமான இடவசதியோடு அமைக்கப்பட்டிருக்க வேண்டும். ஆண் குழந்தைகளுக்கும் பெண் குழந்தைகளுக்கும் தனித்தனி கழிப்பறைகள் கட்டப்பட்டிருக்க வேண்டும். தாகேல் ஆஷ்ரம்சாலாவில் கழிப்பறை என்று சொல்லிக்கொண்டு, கூரையில்லாத ஒரு கட்டுமானம்தான் இருக்கிறது. அதுவும் பயன்படுத்த முடியாததாக இருக்கிறது.

“குளிப்பதற்காகவும், மற்ற அன்றாடத் தேவைகளுக்காகவும் நாங்கள் தினமும் காலையில் பக்கத்தில் உள்ள ஆற்றுக்குப் போய் வருகிறோம்,” என்று 6ம் வகுப்பு மாணவி சுனிதா கூறுகிறாள் (பெயர் மாற்றப்பட்டுள்ளது).

ஒவ்வொரு ஆஷ்ரம்சாலாவிலும் ஒரு கணினி மையம் இருக்க வேண்டும் என்று பள்ளி விதிகளில் கூறப்பட்டுள்ளது. ஆனால், தாஹேல் பழங்குடியினர் பள்ளியில் அடிப்படையான மின்சார வசதியும் இல்லை. தண்ணீர் வசதியும் இல்லை. மாணவர்களுக்கு சத்துணவாக முட்டை, பழம், காய்கறி, பால், பருப்புகள், ரொட்டி, அரிசி, சப்பாத்தி ஆகியவை வழங்கப்பட வேண்டும் என விதி உள்ளது. ஆனால், அதெல்லாம் காகிதத்தில் மட்டுமே.

“தினமும் மூன்று வேளை எங்களுக்கு போஹா, கிச்சடி மட்டுமே தரப்படுகிறது. பால், தேனீர் ஒருபோதும் தரப்படுவதில்லை. மாதத்தில் இரண்டு முறை மட்டுமே முட்டையும் பழமும் கிடைக்கின்றன,” என்று 7ம் வகுப்பு பயிலும் 13 வயது மாணவன் கபில் கூறுகிறான் (பெயர்

மாற்றப்பட்டுள்ளது).மூன்று மாதங்களுக்கு ஒருமுறை மாணவர்களுக்கு மருத்துவ சோதனை நடத்தப்பட வேண்டும் என்ற விதியும் அலட்சியமாக மீறப்படுகிறது. தங்களுக்கு அப்படிப்பட்ட மருத்துவ சோதனை எதுவும் நடத்தப்பட்டதில்லை, எவ்வித மருத்துவ உதவி வழங்கப்பட்டதில்லை என்று தாஹோல் மாணவர்கள் எல்லோருமே கூறுகிறார்கள்.

குழந்தைகளை கவனிப்பதற்காக நியமிக்கப்பட்டுள்ள கண்காணிப்பாளர் அல்லது விடுதிக் காப்பாளர் அங்கேயே நிரந்தரமாக தங்கியிருக்க வேண்டும், குழந்தைகளின் பாதுகாப்பிற்கு பொறுப்பேற்க வேண்டும் என்பது விதி. ஆனால், தாஹோல் பள்ளி விடுதியின் காப்பாளர் தினமும் மாலையில் வீட்டுக்குப் போய்விடுகிறார் என்று மாணவர்கள் கூறுகிறார்கள். கிட்டத்தட்ட ஒரு மாத காலமாக பள்ளியின் தலைமையாசிரியர் கூட அந்தப் பக்கம் வரவில்லை.

**“பழங்குடியினர் பள்ளிகள் என்ற பெயரில் அரசியல்வாதிகள் கோடிக்கணக்கில் குவிக்கிறார்கள், ஆனால் அந்தப் பள்ளிகளின் குழந்தைகளுக்கு எதுவுமே கிடைப்பதில்லை,” என்கிறார் கிஷோர் திவாரி.**

ஆக, இரவு நேரங்களில் இந்தக் குழந்தைகளை கவனித்துக்கொள்வது யார்? “அதற்காக கண்காணிப்பாளர் ஒரு காவல்காரரை நியமித்துக்கிறார்,” என்று தனது பெயரை வெளியிட விரும்பாத மற்றொரு ஆசிரியர் கூறுகிறார்.

தலைமையாசிரியரும் கண்காணிப்பாளரும் அக்கறையின்றி இருக்கும் நிலையில் தங்களால் எதுவும் செய்ய இயலவில்லை என்று, பள்ளியில் உள்ள 4 தற்காலிக ஆசிரியர்களும் கூறுகிறார்கள். “எங்களால் என்ன செய்ய முடியும்? அவர்கள்தான் நிரந்தரமாக நியமிக்கப்பட்டிருக்கிறார்கள், அவர்களுக்கு மாதம் 35,000 ரூபாய் ஊதியம் கிடைக்கிறது. நாங்கள் தினசரிக் கூலி அடிப்படையில்தான் வேலை செய்கிறோம். மணிக்கு 56 ரூபாய் மட்டுமே தரப்படுகிறது,” என்று ஒரு ஆசிரியர் கூறுகிறார். “எந்த நேரமும் நாங்கள் தூக்கி எறியப்படலாம்,” என்றும் அவர் கூறுகிறார்.

குழந்தைகளுக்கு உணவு தயாரிப்பதற்காக 2014 ஜூன் மாதம் நியமிக்கப்பட்டவர் ஆஷா வால்வி. அன்றிலிருந்து, நவம்பர் வரையில் தனக்கு ஊதியம் எதுவும் வழங்கப்படவில்லை என்று அவர் தெரிவிக்கிறார். “எங்களுக்கு எவ்வளவு ஊதியம் தரப்படும் என்பதும் இதுவரை சொல்லப்படவில்லை,” என்றும் அவர் கூறுகிறார்.

மற்ற ஆஷ்ரம்சாலாக்களின் நிலைமைகள் ஒன்றும் மாறுபட்டதாக இல்லை. “இங்கே எல்லாமே பிரச்சனையாகத்தான் இருக்கிறது,” என்று அதே வட்டத்தைச் சேர்ந்த சாரி கிராமத்தில் உள்ள ஆஷ்ரம்சாலாவின் தலைமையாசிரியர் கே.பி. தாத்வி கூறுகிறார். “மின்சாரமும் இல்லை, தண்ணீரும் இல்லை. குடிநீருக்காகக் குழந்தைகள் குறைந்தது ஒரு கி.மீ. தொலைவு நடந்து சென்று வருகிறார்கள். சாலைகள் மிக மோசமாக இருக்கின்றன. தேர்தல் வரும்போது மட்டும்தான் அரசியல்வாதிகள் வருகிறார்கள். நானும் பழங்குடியினத்தைச் சேர்ந்தவன்தான். பிறந்ததிலிருந்தே இந்த ஊரில்தான் வாழ்ந்து வருகிறேன். ஆனால், இந்த ஊரின் எந்த வளர்ச்சியையும் நான் பார்த்ததில்லை என்கிறார் அவர்.

சாதி ஆஷ்ரம்சாலாவில் சுமார் 400 குழந்தைகள் சேர்க்கப் பட்டிருக்கிறார்கள். பத்தாம் வகுப்பு வரை இங்கு உள்ளது. காணச் சகியாத அறைகளில் குழந்தைகள் தங்க வைக்கப்பட்டிருக்கிறார்கள். அந்த அறைகளுக்கு மின்சார இணைப்போ, தண்ணீர் வசதியோ கிடையாது. “ஒரு மழைக்காலத்தில்தான் நான் இந்தப் பள்ளியில் சேர்ந்தேன். மழைக்காலத்தில் நிலைமைகள் மிக மோசமாகிவிடுகின்றன,” என்று விடுதிக் கண்காணிப்பாளர் அனிதா வாசவே கூறுகிறார். “கூரைகள் ஒழுகிக்கொண்டிருப்பதால், மழைக்காலத்தில் தாக்குப்பிடித்து இருப்பதென்பது மாணவர்களுக்கும் ஆசிரியர்களுக்கும் அச்சமூட்டுவதாகவே இருக்கிறது,” என்றும் அவர் கூறுகிறார்.

பெரும்பாலான நாட்களில் நிரந்தர ஆசிரியர்கள் வருவதில்லை. “அவர்களுக்கு மூன்றாண்டு பதவிக்காலம் இருக்கிறது. ஆனால், ஓரிரு ஆண்டுகளிலேயே அவர்கள் விலகிவிடுகிறார்கள்,” என்று தற்காலிகப் பணியாளர் ஒருவர் கூறுகிறார். அவர் இங்கு கடந்த 8 ஆண்டுகளாக வேலை செய்து வருகிறார். “இது பழங்குடி குழந்தைகளின் கல்விக்கு ஆரோக்கியமானது அல்ல,” என்று கூறுகிறார்.

மோல்கி கிராமத்தில் பச்சிம் காண்டேஷ் பில் சேவா மண்டல் பிரைமரி–செகன்டரி ஆஷ்ரம்சாலா என்ற ஒரு பள்ளி இருக்கிறது. சுகாஸ் நடவாக்கர் என்ற உள்ளூர் அரசியல்வாதியின் தனியார் அறக்கட்டளையால் நடத்தப்படுகிற பள்ளி இது. இங்கே ஒரு நல்ல

அலுவலகமும் கணினி மையமும் இருக்கின்றன. ஆனால், இங்கு சேர்க்கப்பட்டுள்ள 504 மாணவர்களுக்கு மாணவர்களின் மற்ற நிலைமைகள், தாஹேல், சாரி ஆஷ்ரம்சாலாக்களைவிட எவ்வகையிலும் சிறந்ததாக இல்லை. ''சராசரியாக ஒவ்வொரு ஆண்டும் அரசாங்கம் எங்களுக்கு 33 லட்சம் ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்கிறது. ஆனால், அது போதுமானதல்ல. பள்ளியை நன்றாக நடத்த வேண்டும் என்றால் அதிக நிதி வேண்டும்,'' என்று அந்த பள்ளியின் தலைமையாசிரியர் வி.எச். சௌதாரி கூறுகிறார். ''நாங்கள் ஒரு புதிய கட்டடம் கட்ட திட்டமிட்டிருக்கிறோம். ஆனால், சில சட்டப் பிரச்சனைகள் காரணமாக அது தாமதமாகிறது,'' என்று அவர் தெரிவிக்கிறார்.

**மூக்கைத் துளைக்கும் உண்மை: இந்தப் பள்ளிகளின் மிகப் பெரும்பாலான கழிப்பறைகள் மோசமான நிலையில் உள்ளன. ஆகவே, மாணவர்கள் தங்கள் அவசரத் தேவைகளுக்கு பள்ளிகளைவிட்டு வெளியே செல்ல வேண்டியிருக்கிறது.**

சஹாதா கோட்டத்தில் உள்ள ஆஷ்ரம்சாலாவின் நிலைமை இப்படித்தான் இருக்கிறது. பள்ளியின் சமையல் அறை அருகிலேயே குப்பைக் குவியல்கள் காணப்படுகின்றன. கழிப்பறைகள் அருவருப்பாக மிகச் சிறிய கரடுமுரடான அறைகளில் உள்ளன. 10ம் வகுப்பு மாணவர்களால் சர்க்கரை, யானை போன்றவற்றிற்கான சாதாரண ஆங்கில வார்த்தைகளைக் கூட வாசிக்க முடியவில்லை.

''ஒரு வாடகைக் கட்டடத்தில்தான் நாங்கள் செயல்பட்டுக் கொண்டிருக்கிறோம். அதனால்தான் நிலைமை இவ்வளவு மோசமாக இருக்கிறது,'' என்று இப்பள்ளியின் தலைமையாசிரியர் ஆர்.ஓ.பராரி கூறுகிறார். ''சொல்லப் போனால் கடந்த 6 மாதங்களாக நாங்கள் கட்டடத்திற்கு வாடகைக் கொடுக்கவில்லை. அதற்குக் காரணம் நிதிப் பற்றாக்குறை. பள்ளிக்காக ஒதுக்கப்பட்டுள்ள நிலத்தில் புதிய கட்டடம் கட்டப்படுகிறது. அங்கே விரைவில் போய்விடுவோம் என்று நம்புகிறோம்,'' என்று அவர் கூறுகிறார்.

பழங்குடியினர் உரிமைகள், மேம்பாடு ஆகியவற்றுக்காக கடந்த 21 ஆண்டுகளாக செயல்பட்டு வருபவரும், லோக்சங்காஷ் மோர்ச்சா என்ற அமைப்பின் பொதுச் செயலாளருமான பிரதிபா ஷிண்டே பழங்குடியினருக்காக நடத்தப்படும் அரசுப் பள்ளிகள், அரசு உதவி பெறும் பள்ளிகள் இரண்டிலுமே கடுமையான பிரச்சனைகள் உள்ளன என்று குறிப்பிடுகிறார்.

''அரசுப் பள்ளிகளில் தேவையான உள்கட்டுமான வசதிகள் இல்லை. நிரந்தர ஆசிரியர்கள் பல நாட்கள் பள்ளிக்கு வருவதில்லை. அரசு உதவி பெறும் ஆஷ்ரம்சாலாக்களைப் பொறுத்தவரையில் அவற்றை அரசியல்வாதிகளும் அவர்களது குடும்பத்தினரும்தான் இயக்குகிறார்கள். அரசு உதவி பெறும் ஆஷ்ரம்சாலாக்கள் அவர்களுக்கு ஒரு வியாபாரமாகிவிட்டன. மாணவர்கள் சேர்க்கை எண்ணிக்கையை மோசடியாக அதிகரித்துக்காட்டி அரசாங்கத்திடமிருந்து கூடுதல் நிதி பெறுகிறார்கள்,'' என்று ஷிண்டே கூறுகிறார்.

### பலி பீடங்களாகும் பள்ளிக்கூடங்கள்

கண்காணிப்பாளர்கள் இரவு நேரங்களில் குழந்தைகளை விடுதிக்குள் வைத்துப் பூட்டிவிட்டுப் போய்விடுகிறார்கள் என்றும் ஷிண்டே கூறுகிறார். ''வெளியே செல்ல முடியாததால் சில நேரங்களில் குழந்தைகள் அறைகளுக்குள்ளேயே மலம் கழித்துவிடுகிறார்கள். மறுநாள் காலை திரும்பி வருகிற கண்காணிப்பாளர் அதைப் பார்த்துவிட்டு குழந்தைகளைத் திட்டுகிறார். அறையை அந்தக் குழந்தைகள்தான் சுத்தம் செய்ய வேண்டுமென்று கட்டாயப்படுத்துகிறார். பெண் குழந்தைகள் குளிப்பதற்காக அருகில் உள்ள ஆற்றுக்கும் நீரூற்றுகளுக்கும் போகிறபோது உள்ளூர் இளைஞர்களின் பாலியல் தொந்தரவுகளுக்கும் உள்ளாகிறார்கள்,'' என்று அவர் தெரிவிக்கிறார்.

தங்களது அமைப்பு மேற்கொண்ட ஒரு ஆய்வை சுட்டிக்காட்டும் ஷிண்டே கூறுவது வருமாறு: ''நந்தூர்பார் மாவட்டத்தின் அக்கல்ஹுவா, தலோடா, தாட்காவூன் ஆகிய கோட்டங்கள் ஊட்டச்சத்துப் பற்றாக்குறையால் பாதிக்கப்பட்ட பகுதிகளாக அறிவிக்கப்பட்டுள்ளன. ஒவ்வொரு ஆண்டும் இந்தக் கோட்டங்களைச் சேர்ந்த கிராமங்களிலிருந்து, குழந்தைகள் உட்பட, சுமார் 70 சதவீதம் மக்கள் உணவுக்காகவும் வேலைக்காகவும் வேறு இடங்களுக்குப் புலம் பெயர்ந்து செல்கிறார்கள். அந்த இடங்களில் அவர்கள் குறைந்தது ஆறு மாதங்களுக்குத் தங்குகிறார்கள்.

பிறகு எப்படி 400–500 மாணவர்கள் இந்த ஆஷ்ரம்சாலாக்களில் ஆண்டு முழுவதும் படிக்க முடியும்? இல்லாத குழந்தைகளின் பெயரால் பள்ளி நிர்வாகம் அரசு நிதிகளைப் பெற்றுக் கொண்டிருக்கிறது. இந்த அமைப்பிலேயே ஊழல் மலிந்திருக்கிறது. வடக்கு மகாராஷ்டிராவில் அனைத்து ஆஷ்ரம்சாலாக்களையும் மூடிவிட வேண்டும் என்ற கோரிக்கையோடு போராட்ட இயக்கம் நடத்த நாங்கள் திட்டமிட்டு வருகிறோம்.''

கடந்த ஆண்டு நடைபெற்ற 10ஆம் வகுப்புத் தேர்வு தாட்காவூன் கோட்டத்தைச் சேர்ந்த ரோஷ்மால் ஆஷ்ரம்சாலா குழந்தைகள் யாருமே தேர்ச்சி பெறவில்லை. ''அந்த ஆஷ்ரம்சாலாவைச் சுற்றி சாராயக் கடைகள் இருக்கின்றன. சில நேரங்களில் ஆசிரியர்களே குடித்துவிட்டு வகுப்புக்கு வருகிறார்கள். அதிகாரிகள் சோதனைக்கு வருவது என்பதே கிடையாது. இதனால், ஆசிரியர்கள் தங்கள் விருப்பப்படி செயல்படுகிறார்கள்,'' என்று பழங்குடி மக்களுக்கான இயக்கம் நடத்தி வருபவரும், இந்த வட்டாரத்தைச் சேர்ந்தவருமான சுமித்ரா வாசாவே கூறுகிறார்.

இதுகுறித்து தெஹல்கா பத்திரிகையின் நிருபர்கள் பேட்டி கண்டபோது, பழங்குடியினர் மேம்பாட்டுத் திட்ட அலுவலர் சுக்ராச்சாரியார் தூதாத் கூறியது வருமாறு: ''தாலோடா கோட்டத்தில் மொத்தம் 62 ஆஷ்ரம்சாலாக்கள் இருக்கின்றன. அவற்றில் 40 ஆஷ்ரம்சாலாக்கள் அரசாங்க நிதியுதவியுடன் நடைபெறுகின்றன. 22 ஆஷ்ரம்சாலாக்கள் தனியாரால் இயக்கப்படுகின்றன. சராசரியாக ஒவ்வொரு ஆஷ்ரம்சாலாவுக்கும் ஓராண்டில் சுமார் ஒரு கோடி செலவிடப்படுகிறது. ஆஷ்ரம்சாலாக்களின் நிலையை மேம்படுத்தத்தான் எங்கள் துறை முயற்சி செய்து வருகிறது. சொல்லப்போனால் மற்ற பல மாநிலங்களை விட நாங்கள் சிறப்பாகவே செயல்பட்டு வருகிறோம்.''

**❍ வாட்டும் பட்டினி மாணவர்களுக்கு ஊட்டச்சத்து மிகுந்த உணவு வழங்கப்பட வேண்டும் என்று ஏட்டில் மட்டுமே எழுதப்பட்டுள்ளது.**

மஹாராஷ்டிரா மாநிலத்தில் பழங்குடிகள் மேம்பாட்டுத் துறை 24 திட்டங்களை செயல்படுத்தி வருகிறது. இவற்றில் 11 திட்டங்கள் ஆழ்ந்த முக்கியத்துவம் வாய்ந்தவை. தாலோடா, ஜவஹர், பாந்தவ்தாவ்டா, அஹேரி, கட்சிரோலி, பாம்ராகாட், நாஷிக், கால்வான், தஹானு, தார்னி, கின்வாட், ஆகிய கோட்டங்களில் அந்தத் திட்டங்கள் செயல்படுத்தப்படுகின்றன. துறை விதிகளின்படி இந்தத் திட்ட அதிகாரிகள் ஐஏஎஸ் பட்டதாரிகளாகவும் மூன்றாண்டு பதவிக்காலம் உள்ளவர்களாகவும் இருக்க வேண்டும். ஆனால், இந்த 11 திட்டங்களில் எதிலுமே எந்த ஒரு ஐஏஎஸ் அதிகாரியும் ஓர் ஆண்டுக்கு மேல் செயல்பட்டதில்லை.

மஹாராஷ்டிரா மாநிலத்தில் பள்ளிப் படிப்பிலிருந்து பாதியில் விலக நேரிடும் பழங்குடி குழந்தைகளின் விகிதம், பழங்குடியினர் முன்னேற்றத்தில் காட்டப்படும் அக்கறையின்மையைக் காட்டுகிறது. நாடு முழுவதும் இப்படி பள்ளிப் படிப்பைப் பாதியில் நிறுத்தும் (6 முதல் 14 வயது வரையிலான பிரிவினர்) பழங்குடி குழந்தைகளின் விகிதம் 19 சதவீதம். இவர்களில் 7 சதவீதத்தினர் மஹாராஷ்டிரா மாநிலத்தைச் சார்ந்தவர்கள். ஆணரம்சாலாக்களின் இந்த அவல நிலைமையைக் காணும் சில தொண்டர்கள் அவற்றை உடனடியாக மூடி விட வேண்டும் என்று கோருகிறார்கள். ''பழங்குடியினர் உறைவிடப் பள்ளிகள் என்ற பெயரில் அரசியல்வாதிகள் கோடிக்கணக்கில் குவிக்கிறார்கள். ஆனால், குழந்தைகளுக்கு எதுவும் கிடைப்பதில்லை,'' என்கிறார் கிஷோர் திவாரி. இவர் நாக்பூரிலிருந்து செயல்படும் விதார்ப் ஜன் அண்டோலன் சமிதி என்ற அமைப்பில் இருக்கிறார். ''ஆகவே அந்த ஆஷ்ரம்சாலாக்களை அரசு உடனடியாக மூடிவிட வேண்டும். மாறாக கோட்ட அளவில் பழங்குடி குழந்தைகள் தங்குவதற்காக என புதிய விடுதிகளைக் கட்டுவதில் முதலீடு செய்ய வேண்டும். பழங்குடி சமூக குழந்தைகளை வழக்கமானப் பள்ளிகளில் சேர்த்துக்கொள்ள வேண்டும். அப்படிச் செய்தால் மற்றப் பிரிவுகளிலிருந்து வரும் குழந்தைகளோடு இவர்களும் சேர்ந்து படிக்க முடியும், அதன்மூலம் இவர்களது எதிர்காலம் சிறப்பாக இருக்கும்,'' என்றும் கிஷோர் திவாரி கூறுகிறார்.

ஒதுக்கப்படும் நிதி எவ்வாறு செலவிடப்படுகிறது என்பதில்தான் மையமான பிரச்சனை இருக்கிறது என்று திவாரி சுட்டிக்காட்டுகிறார். ''பழங்குடியினர் மேம்பாட்டுக்கான என அறிவிக்கப்படும் நிதி ஒதுக்கீடுகள் வேறு துறைகளுக்கு மாற்றப்படுகின்றன,'' என்று அவர் குற்றம்சாட்டுகிறார். 2012ல் அவர், மாநிலத்தின் ஆஷ்ரம்சாலாக்கள் எத்தகைய அவல நிலையில் இருக்கின்றன என்பது குறித்து மும்பை உயர்நீதிமன்ற தலைமை நீதிபதிக்கு கடிதம் அனுப்பினார். தலைமை நீதிபதி எம்.எஸ். ஷா அந்தக் கடிதத்தை ஒரு மனுவாக எடுத்துக்கொண்டு, மாநில அரசுக்கு, ஆஷ்ரம்சாலாக்கள் பற்றிய பிரமாணப் பத்திரத்தை தாக்கல் செய்யுமாறு ஆணையிட்டார்.

''மாநிலத்தில் மொத்தம் 1108 ஆஷ்ரம்சாலாக்கள் இருக்கின்றன. அவற்றில் 552 ஆஷ்ரம்சாலாக்கள் அரசாங்கத்தால் நடத்தப்படுகின்றன. இவற்றில் மற்றவை அரசு உதவி பெறும் அமைப்புகளால் நடத்தப்படுகின்றன,'' என்று மகாராஷ்டிரா மாநில பழங்குடியினர் மேம்பாட்டு ஆணையர் சஞ்ஜீவ் குமார் கூறுகிறார். ''பிரச்சனை என்ன என்பது எங்களுக்கும் தெரிகிறது. அதைத் தீர்ப்பதற்கு நாங்கள் முயற்சி செய்து வருகிறோம். உதாரணமாக ஆசிரியர் பற்றாக்குறைப் பிரச்சனையில், புதிதாக ஆசிரியர்களை நியமிக்கும் நடைமுறை தற்போது கடைசி இறுதிக்கட்டத்திற்கு வந்துள்ளது. அடுத்த சில வாரங்களில் மாநிலம் முழுவதும் ஆஷ்ரம்சாலாக்களில்


647 ஆசிரியர்கள் நியமிக்கப்படுவார்கள்," என்றும் அவர் தெரிவிக்கிறார்.

ஆஷ்ரம்சாலாக்களுக்கு பெரிய அளவில் நிதி (சுமார் ரூ.300 கோடி) ஒதுக்கப்படுகிறது. ஆனால், அதில் பெரும்பங்குத் தொகை (சுமார் மூன்றில் இரண்டு பங்கு) புதிய ஆஷ்ரம்சாலாக்களை கட்டுவதற்கு செலவிடப்படுகிறது என்று சஞ்ஜீவ் குமார் கூறுகிறார். ஆக, ஏற்கெனவே உள்ள பள்ளிகளின் நிலை மோசமாக இருந்தாலும் கூட, அதிலே கவனம் செலுத்தப்படாமல் புதிய ஆஷ்ரம்சாலாக்கள் கட்டப்படுகின்றன என்பதையே இது காட்டுகிறது.

**புலி மூட்டைகளாய்... சில அரசுப் பள்ளி விடுதிகளில் ஒரு சிறிய கூடத்திற்குள் 50 முதல் 60 குழந்தைகள் வரை தங்க வைக்கப் பட்டிருக்கிறார்கள்.**

மாநில பழங்குடியினர் மேம்பாட்டுத் துறை தகவலின்படி பழங்குடியினர் துணைத் திட்டத்தின் கீழ் அந்த மக்களின் மேம்பாட்டுக்காக ஒதுக்கப்படும் மொத்தத் தொகை ரூ.4,986 கோடி. இதில் 6 சதவீதம், ஆஷ்ரம்சாலாக்கள் உள்பட, பழங்குடியினர் கல்விக்காக என செலவிடப்பட வேண்டும்.

முந்தைய ஐக்கிய முற்போக்குக் கூட்டணி அரசால் நியமிக்கப்பட்ட சமூக நீதி மற்றும் அதிகாரம் வழங்களுக்கான ஹேமானந்த் பிஸ்வால் நிலைக்குழு, கடந்த பிப்ரவரி மாதம் தனது அறிக்கையை நாடாளுமன்ற மக்களவையில் தாக்கல் செய்தது. அந்த அறிக்கையின்படி 2001 முதல் 2013 வரையிலான காலகட்டத்தில் மாநிலம் முழுவதும் உள்ள ஆஷ்ரம்சாலாக்களில் படித்து வந்த 793 பழங்குடி குழந்தைகள் பாம்புக் கடியாலும் தேள் கடியாலும் வேறு சிறிய நோய்களாலும் இறந்துவிட்டார்கள். நாஷிக் மண்டலத்தில் மட்டுமே, மிக அதிக அளவாக, 393 பேர் இறந்தனர். அந்த 393 குழந்தைகளில் 166 பேர் தாலோடா கோட்டத்தைச் சேர்ந்தவர்கள். ஆஷ்ரம்சாலா திட்ட விதிகளின்படி, உயிரிழக்கும் ஒவ்வொரு குழந்தையின் பெற்றோருக்கும் இழப்பீடாக ரூ.15,000 வழங்கப்பட வேண்டும். ஆனால், உயிரிழந்த 340 குழந்தைகளின் பெற்றோருக்கு இழப்பீடு எதுவும் வழங்கப்படவில்லை என்று நிலைக்குழு தனது அறிக்கையில் சுட்டிக்காட்டியுள்ளது.





2013ம் ஆண்டுக்கான தலைமை கணக்குத் தணிக்கையாளர் அறிக்கை ஆஷ்ரம்சாலாக்கள் பற்றிய ஆய்வில் வெளிப்பட்ட குறைபாடுகளை சுட்டிக்காட்டியுள்ளது. கணக்குகளைத் தாக்கல் செய்வதில் உள்ள நிலுவைகளையும் தலைமைத் தணிக்கையாளர் வெளிப்படுத்தியுள்ளார். 1999–2004 காலகட்டத்திற்கான தணிக்கை 2005ம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்டது. அந்த தணிக்கை தொடர்பான அறிக்கையில் 1953–54ல் ஆஷ்ரம்சாலா திட்டம் தொடங்கப்பட்டதிலிருந்து, அதன் செயல்பாடுகள் குறித்து மதிப்பிடுவதற்கு மாநில அரசு எதுவும் செய்யவில்லை என விமர்சிக்கப்பட்டுள்ளது.

ஒவ்வொரு ஆண்டும் ஆஷ்ரம்சாலா குழந்தைகளுக்கு மருத்துவ பரிசோதனைகள் செய்யப்பட வேண்டும். ஆனால், 1999 முதல் 2004 வரையிலான காலகட்டத்தில் அத்தகைய மருத்துவ பரிசோதனை எதுவும் செய்யப்படவில்லை என்று 2005ம் ஆண்டின் அறிக்கையில் கூறப்பட்டுள்ளது. மேலும், 1794 கணினிகள், 299 மின் அச்சு எந்திரங்கள், 299 மேசைகள் வாங்குவதற்கு என ரூ.10 கோடி நிதி ஒதுக்கீட்டை மத்திய அரசு அங்கீகரித்தது. இருந்தபோதிலும் ஆஷ்ரம்சாலாக்களுக்கு 166 கணினிகள் மட்டுமே வாங்கப்பட்டன.

“எல்லா இடங்களிலும் ஆஷ்ரம்சாலாக்களின் நிலைமை ஒரே மாதிரியாகத்தான் இருக்கிறது,” என்று கூறுகிறார் கட்சிரோலி மாவட்டத்தில் பழங்குடியினர் நலன்களுக்காக செயல்பட்டு வரும் சமூக ஆர்வலர் லால்சு சோமா. “பழங்குடி குழந்தைகளுக்கு கல்வி கற்றுத்தருவதற்காக இங்கே வர ஆசிரியர்கள் விரும்புவதில்லை. பல இடங்களில் ஒரே ஒரு ஆசிரியர்தான் எல்லாப் பாடங்களையும் நடத்துகிறார். ஊட்டச்சத்துப் பற்றாக்குறை மிக அதிகமாக இருக்கக்கூடிய உள்பகுதிகளைச் சேர்ந்த குழந்தைகள், ஏதாவது சாப்பிட வேண்டும் என்பதற்காகவே ஆஷ்ரம்சாலாக்களுக்கு வருகிறார்கள்,” என்று அவர் தெரிவிக்கிறார்.

பழங்குடியினர் மேம்பாட்டு அமைச்சர் விஷ்ணு சவ்ரா இந்த ஆஷ்ரம்சாலாக்களின் நிலைமையை குறித்து ஆராய்ந்து வருவதாகவும் விரைவில் “பிரச்சனைகளுக்கு தீர்வுகாண்பதற்கு உரிய நடவடிக்கைகள் எடுக்க இருப்பதாகவும், தெஹெல்கா செய்தியாளர்களிடம் கூறினார். இந்தத் துறையின் அமைச்சராக சவ்ரா இரண்டாவது முறையாகப் பொறுப்பேற்றிருக்கிறார் என்பது குறிப்பிடத்தக்கது.

**ஆதாரம்: தெஹெல்கா, 29 நவம்பர் 2014**

# கரூர் மாவட்டம், கிருஷ்ணராயபுரம் தாலுகா, பிச்சம்பட்டியில் வினிதா என்ற மாணவி வன்புணர்ச்சிக்கு உள்ளாக்கப்பட்டு கொலை செய்யப்பட்ட சம்பவம் குறித்த உண்மையறியும் குழுவின் அறிக்கை

### 27 மற்றும் 28 ஜுன் 2014

– தமிழ் நாடு குழந்தை உரிமைகள் பாதுகாப்பு கூட்டமைப்பு

**முன்னுரை:**

கடந்த 25 மற்றும் 26 ஜுன் 2014 அன்று வெளியாகி இருந்த பத்திரிக்கை செய்தியின் அடிப்படையில் கரூர் மாவட்டம், கிருஷ்ணராயபுரம் தாலுகா, கோவகுளம் அஞ்சல், பிச்சம்பட்டியில் வசித்து வந்த வினதா என்ற மாணவி கரூரில் உள்ள V.K.A பாலிமர் பிரைவேட் லிமிடெட் என்ற கொசுவலை கம்பெனியில் பணி முடிந்து வீட்டிற்கு திரும்பும்பொழுது வழியில் உள்ள கிருஷ்ணராயபுரம் வெத்தலை தோட்டத்தில் வன்புணர்ச்சிக்கு உள்ளாக்கப்பட்டு கொலை செய்யப்பட்ட சம்பவம் குறித்த உண்மை நிலையறிய தமிழ் நாடு குழந்தை உரிமைகள் பாதுகாப்பு கூட்டமைப்பு சார்பில் உண்மையறியும் குழு 27 மற்றும் 28 ஜுன் 2014 தேதிகளில் பாதிக்கப்பட்ட குடும்பத்தினர், அரசு அதிகாரிகள் மற்றும் சாட்சிகளிடம் விசாரணை மேற்கொண்டது.



பாலியல் வன்புணர்ச்சிக்கு உள்ளாக்கப்பட்டு கொலை செய்யப்பட்ட மாணவி

**சம்பவச் சுருக்கம்**

கரூர் மாவட்டம், கிருஷ்ணராயபுரம் தாலுகா, மாயனூர் காவல் நிலைய எல்லைக்குபட்ட K.பிச்சம்பட்டி என்ற கிராமத்தில் வசிக்கும் பள்ளர் சமுகத்தைச் சேர்ந்த பொன்னுசாமி என்பவரின் மகள் வினிதா வயது 17, இவர் +2ம் வகுப்பு முடித்து வெற்றி விநாயாக பாலிடெக்னிக் கல்லூரிக்கு 26.06.2014 அன்று கல்லூரிக்குச் செல்ல தயாராக இருந்துள்ளார். குடும்ப வறுமையின் காரணமாக கரூரில் உள்ள V.K.A பாலிமர் பிரைவேட் லிமிட் என்ற கொசுவலை கம்பெனியில் வேலை செய்து வந்தார். இந்நிலையில் 23.06.2014 இன்று வழக்கம்போல் பணிக்கு சென்று திரும்பும் வேளையில் வெத்தலை கொடிக்கால் வயலில் பாலியல் வன்புணர்ச்சி செய்து கொலை செய்யப்பட்டுள்ளார். குற்றவாளிகளை உடனடியாக கைது செய்யக் கோரி மக்கள் சாலை மறியலில் ஈடுபட்டுள்ளனர். 24.06.2015 அன்று மாயனூர் காவல் நிலையத்தில் குற்ற எண் 125/14, 302 இந்திய தண்டனைச் சட்டம் மற்றும் 5 & 6 Protection of Children from Sexual offences Act 2012. மற்றும் 3(2) (v) Sc/ST New Ordinance Act 2014 பிரிவில் வழக்குப் பதிவு செய்யப்பட்டது. காவல் துறை அதிகாரிகள் மூன்று நாட்களுக்குள் குற்றவாளிகளை கைது செய்வதாக உறுதி அளித்ததின் பேரில் சாலை மறியல் கைவிடப்பட்டுள்ளது. ஆனால் இன்றுவரை குற்றவாளிகள் கைது செய்யப்படவில்லை. 13 பிரிவாக காவல்துறை பிரிக்கப்பட்டு தேடுவதாக தகவல் கூறியுள்ளார்கள். இதனிடையில் வினிதா கொலை வழக்கில் சாட்சிகளாக உள்ள இளம் பெண்களிடம் தொடர்ந்து காவல் துறையினர் சீருடையில், காவல் நிலையத்திற்கு அழைத்துச் சென்றுவிசாரணை செய்து வருகின்றார்கள். மாவட்ட குழந்தைகள் நல குழுவும், குழந்தைகளை பாதுகாக்க எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை.

**சம்பவம் தொடர்பாக சந்தித்த நபர்களின் வாக்குமூலம்:**

**நாகவள்ளி (38),** க/பெ. பொன்னுச்சாமி (39), பிச்சம்பட்டி, கோவகுளம் அஞ்சல், கிருஷ்ணராயபுரம் தாலுகா, கரூர் மாவட்டம்: நான் மேற்கண்ட முகவரியில் கணவர் பொன்னுச்சாமி (39), குழந்தைகள் ரம்யா (22), இவரை சு.புதுப்பட்டியில் உள்ள கார்த்திக் என்பவருக்கு திருமணம் முடிக்கப்பட்டது. இரண்டாவது பெண் குழந்தை வினிதா (17) +2 முடித்து விட்டு தொட்டியத்தில் உள்ள வெற்றி விநாயகா பாலிடெக்னிக் கல்லூரியில் Admission



கொலை செய்யப்பட்ட வினிதாவின் குடும்பத்தினர்

சென்றனர். அத்துடன் வினிதாவின் மாமன் மகன் ஸ்ரீதரும் அவர்களுடன் வேலைக்கு சென்று கொண்டிருந்தான். இவர்கள் பிச்சம்பட்டியில் இருந்து நடந்துதான் செல்வார்கள். இவர்களுக்கு முன் என் மகள் சைக்கிளில் சென்று இவர்களுக்கு முன் பஸ் ஏறி வேலைக்குச் சென்று விடுவாள். இந்நிலையில் கடந்த 23.06.2014 அன்று எப்போதும் போல் என் மகள் வினிதா சைக்கிள் எடுத்துக்கொண்டு காலை சுமார் 6.45க்கு பிச்சம்பட்டியான எங்கள் கிராமத்திலிருந்து புறப்பட்டு வேலைக்குச் சென்றாள். நாங்கள் எப்பொழுதும் போல் வேலைக்குச் சென்றுவிட்டோம். அதன்பிறகு மாலை நாங்கள் வீட்டிற்கு வந்து இரவு 7.15க்கு மேல் ஆகிவிட்டது. எனது மகள் வினிதா வரவில்லை.

இந்நிலையில் சித்தலவாயலில் (கிருஷ்ணராயபுரம்) உள்ள மாரியம்மன் கோவிலில் சரங்குத்துவது என்ற திருவிழா (ஆட்டுத் தலையை ஈட்டியில் குத்தி ஊர்வலமாக எடுத்து வருவது யார் முதலில் குத்தி எடுத்து வருகிறார்களோ அவர்களுக்கு கோவிலில் முதல் மரியாதை செய்யப்படும்) நடைபெற்றுக் கொண்டிருந்தது. இது எட்டுப்பட்டி மக்களும் பங்கேற்கும் திருவிழாவாகும். இதில் முதல் நாள் முத்தரையர் சாதியினர் மற்றும் மற்ற உயர் சாதியினர் வழிபடுவார்கள். மறுநாள் தலித் மக்கள் வழிபடுவார்கள். இது வழக்கமாக நடைபெற்று வருகிறது. இத்திருவிழா சம்பவத்தன்றும் (23.06.2014) நடந்தது. அதனால் ஒரு வேளை வினிதா திருவிழாவை வேடிக்கை பார்த்துவிட்டு தாமதமாக வருவாள் என்று மனதை சமாதானம் செய்து கொண்டு வீட்டில் இருந்தோம்.

போட்டு 27.06.2014 அன்று கல்லூரிக்கு செல்லும் தருவாயில் இருந்தவர். மூன்றாவது பெண் குழந்தை கனிமொழி வயது 14. இவர் 9ம் வகுப்பில் பழைய ஜெயம்கொண்டம் மேல்நிலைப்பள்ளியில் படித்து வருகின்றார். கடைசி மகள் கிருபா (10). 5ம் வகுப்பு பிச்சம்பட்டி நடுநிலைப்பள்ளியில் படித்து வருகின்றார்கள். நாங்கள் இந்து பள்ளர் சமூகத்தைச் சேர்ந்தவர்கள். நானும் எனது கணவரும் விவசாய கூலி வேலை செய்து குடும்பத்தை நடத்தி வந்தோம்.

இந்நிலையில் எனது இரண்டாவது மகள் வினிதா கிருஷ்ணராயபுரம் அரசு மேல்நிலைப் பள்ளியில் +2 தேர்வு எழுதியதில் 570 மதிப்பெண் எடுத்து கல்லூரிக்கு செல்லும் நிலையில் இருந்து வந்தார். இச்சமயம் கல்லூரிக்கு பணம் செலுத்துவதற்கு எங்களிடம் போதிய பண வசதியில்லாததால் என் மகள் கரூரில் உள்ள V.K.A. பாலிமர் பிரைவேட் லிமிட் என்ற கொசுவலை கம்பெனியில் பணிக்குச் சென்றாள். அங்கு 450 கொசு வலை மடித்துக் கொடுத்தால் தினமும் 150 ரூபாய் கிடைக்கும். அதிக வேலை செய்தால் அதிக பணம் கிடைக்கும். அதனால் என் மகள் ஒரு மாதம் மட்டும் வேலைக்குச் சென்றாள். காலை 7.30 மணிக்கு சைக்கிள் எடுத்துக்கொண்டு கிருஷ்ணராயபுரம் பேருந்து நிலையத்தில் சைக்கிளை நிறுத்திவிட்டு அங்கிருந்து பஸ் ஏறி கரூர் செல்வாள். அதன்பிறகு மாலை வேலை முடித்துவிட்டு மாலை சுமார் 6.45க்கு பஸ்சை விட்டு இறங்கி இரவு 7.15க்கு தினமும் சைக்கிளில் வீட்டிற்கு வந்து விடுவாள். இவளுடன் எங்கள் ஊரிலிருந்து எங்கள் உறவினர் பெண்கள் இந்துமதி, பவித்ரா, விக்னேஸ்வரி ஆகியோரும்



பாலியல் வன்புணர்ச்சிக்கு உள்ளாக்கப்பட்டு கொலை செய்யப்பட்ட இடம்

அப்போது இரவு சுமார் 8 மணியளவில் என் மகளுடன் வேலைக்குச் சென்ற பெண்களெல்லாம் வந்துவிட்டார்கள். ஆனால், என் மகள் மட்டும் வரவில்லை. இதனால் என் கணவர் பொன்னுசாமி வண்டி எடுத்துக்கொண்டு கிருஷ்ணராயபுரத்து பேருந்து நிலையத்திற்கு சென்று காத்துக் கொண்டிருந்து மூன்று பேருந்துகளை பார்த்துள்ளார். அப்பொழுதும் என் மகள் வரவில்லை. ஒரு வேளை வீட்டிற்கு வினிதா சென்றிருக்கலாம் என்று மீண்டும் அவர் சுமார் 9 மணிக்கு வீட்டிற்கு வந்து என்னைக் கேட்டார். நான் வினிதா வரவில்லை என்று கூறினேன். எங்களுக்கு பயம் ஏற்பட்டு அழுதுகொண்டிருந்தோம். அதன்பிறகு மறுபடியும் என் கணவர் மற்றும் உறவினர்கள் தேடச் சென்றார்கள். இந்நிலையில் இரவு சுமார் 10.20க்கு ஆனந்தன் உங்கள் மகள் வினிதா அரை நிர்வாணமாக வெத்தலைக் கொடிக்கால் வயலில் பிணமாக உள்ளாள் என்று கூறினார். நாங்கள் அழுது கொண்டு சம்பவ இடத்திற்கு ஓடினோம். அதற்குள் காவல்துறையினர் வந்திருந்தார்கள். எங்களை வினிதாவின் உடலை பார்க்க அனுமதிக்கவில்லை. ஆனால், எனது உறவினர்கள் பார்த்துவிட்டு உடலில் ஒட்டு துணியில்லாமல் நிர்வாணமாக கிடப்பதாகவும் உடலில் காயங்களும் பிறப்புறுப்பில் இரத்தம் வடிந்து வருவதாகவும் கூறினார்கள்.

ஆகையால், குற்றவாளிகளை உடனடியாக கைது செய்ய வேண்டும் என்று பிச்சம்பட்டியிலிருந்து கிருஷ்ணராயபுரம் செல்லும் சாலையில் சாலை மறியல் செய்தோம். அப்பொழுது DSP மற்றும் காவலர்கள் வந்து சமாதானம் பேசி 3 நாட்களுக்குள் குற்றவாளிகளை நாங்கள் கைது செய்து விடுவோம் என்று உறுதி கொடுத்த பிறகு கலைந்து சென்றோம். அதன்பிறகு என் மகள் உடலை 2.45க்கு, கரூர் அரசு மருத்துவமனைக்கு கொண்டுச் சென்று பிரேத பரிசோதனை செய்து கொடுக்கும்போது நாங்கள் மீண்டும் சம்பந்தப்பட்டவர்கள் மீது நடவடிக்கை எடுக்காமல் உடலை வாங்கமாட்டோம் என்று கூறினோம். அப்போது கரூர் SP மற்றும் DSPக்கள் கண்டிப்பாக நடவடிக்கை எடுப்போம் என்று கூறியதன் அடிப்படையில் உடலை பிச்சம்பட்டிக்கு 24.06.2014 அன்று மாலை 4 மணிக்கு வீட்டிற்கு எடுத்து வந்து பெட்டியில் உப்பு போட்டு புதைத்துள்ளோம்.

இதனிடையில் எனது மகள் வினிதா எப்படி கொலை செய்யப்பட்டார் என்பதை அங்கிருந்தவர்களை விசாரித்த போது, சம்பவத்தன்று (23.06.2014) மாலை சுமார் 7 மணியளவில் எனது மச்சாண்டார் மகன் உமாசங்கர் கிருஷ்ணராயபுரம் பேருந்து நிலையத்தில் இருந்தபோது எனது மகள் வினிதா V.K.A பேருந்திலிருந்து இறங்கியுள்ளதையும், அதன் பிறகு சைக்கிளை எடுத்துக் கொண்டு சென்றதையும் பார்த்திருக்கிறார். அதன்பிறகு வினிதா சைக்கிளில் வரும்பொழுது ஸ்ரீதர் (வினிதாவின் மாமா மகன்) வினிதாவிடம், வா எங்களுடன் நடந்து செல்வோம் என்று கூறியுள்ளான். அதற்கு வினிதா ''நீங்களே போங்க'' என்று கூறிவிட்டு சைக்கிளில் வந்திருக்கிறாள். அதன்பிறகு சம்பவ இடத்திற்கு சிறிது தூரத்திற்கு முன் அன்று திருவிழா என்பதால் சரங்குத்தி ஊர்வலமாக சென்றுள்ளது. அப்போது வடிவேல் மற்றும் நான்கு நபர்களுடன் சேர்ந்துகொண்டு பிச்சம்பட்டி கிராமத்திலிருந்து வேலைக்கு செல்லும் விக்னேஸ்வரியிடம் முகத்திற்கு நேரேச் சென்று பயமுறுத்தியுள்ளான். அப்போது அவருடன் வந்த ஸ்ரீதர் பேசாம போகமாட்டியா என்று கூறியுள்ளான். அதற்கு வடிவேல், மாப்பிள்ளை சும்மா விளையாட்டா செய்தேன் பயப்படாத என்று ஸ்ரீதரின் முதுகை தட்டிக்கொடுத்துவிட்டு கிருஷ்ணராயபுரத்தை நோக்கி சென்றுள்ளார்.

இந்நிலையில் இரவு 10 மணிக்கு எங்கள் ஊரை சேர்ந்த தனபால், கலைச்செல்வன் இருவரும் இரண்டு சக்கர வாகனத்தில் சம்பவ இடத்திற்கு வரும் போது வண்டியில் லைட் வெளிச்சத்தில் வெத்தலை தோட்டத்திற்கு எதிர்புறத்தில் வினிதாவின் சைக்கிளும், டிபன் பாக்ஸ் பையும் கிடப்பதை பார்த்துள்ளார்கள். அதன்பிறகு சைக்கிளில் தனுஷா அது எனது பெரிய மகளின் பேத்தியின் பெயர் என்பதால் அவர்களுக்கு தெரியவில்லை. அதனால் அவர்கள் உடனடியாக மாயனூர் காவல் நிலையத்திற்கு தகவல் கொடுத்துள்ளார். அதனடிப்படையில் காவலர்கள் உடனே வந்த போது எங்கள் ஊரைச் சேர்ந்த ஆனந்தன் மற்றும் செந்தில் காவலர்களுடன் தோட்டத்திற்குள் சென்று பார்த்துள்ளார்கள். இருட்டில் சரியாக பார்க்க முடியவில்லை என்பதினால் ஆனந்தன் அவரது சித்தப்பாவிற்கு போன் செய்து பெரிய லைட் எடுத்து வரச் சொல்லி அதன்பிறகு அடித்து பார்த்ததில் வினிதா என்று அறியப்பட்ட பிறகுதான் எங்களுக்கு தகவல் கொடுத்துள்ளார்கள். அதன் பிறகுதான் நாங்கள் சம்பவ இடத்திற்கு சென்றோம்.

மேலும் குழந்தை வினிதாவை வெத்தலை அடுக்கும் இடத்தில் பாலியல் வன்புணர்ச்சி செய்து அதன்பிறகு அவ்விடத்திலிருந்து சுமார் பத்து அடி தூரம் தரத்தரவென இழுத்து சென்றுள்ளார்கள். அங்கிருந்து தண்ணீர் டியூப்பில் இரத்த கரை இருந்ததாகவும் கூறினார்கள். என் மகளை அநாவசியமாக இப்படி செய்துவிட்டார்கள். இந்நிலையில் காவல் துறையினர் குற்ற எண் 125/14 பிரிவு

302 IPC மற்றும் 5 & 6 of Protection of Children from Sexual Offence Act-2012 ல் 24.06.2014 அன்று அதிகாலை 1.45க்கு வழக்கு பதிவு செய்ததாக எனது மருமகன் கார்த்திக் கூறினார். மேலும் 26.06.2014 அன்று வன்கொடுமை தடுப்புச் சட்ட வழக்கில் 3(2) (5) பதிவு செய்து மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி. ஜெயந்தி அவர்கள் எங்களை அழைத்து ரூ. 1,86,500/– காசோலையாக கொடுத்தார்கள். மேலும் எங்களது மற்ற மூன்று குழந்தைகளையும் படிக்க வைப்பதாக கூறினார்கள். ஆனால் இதுவரை குற்றவாளிகளை கைது செய்யாதது மிகவும் வேதனையாக உள்ளது. எனவே என் மகளை இந்த நிலைக்கு ஆளாக்கிய நபர்களை கடுமையாக தண்டிக்க வேண்டும். அவர்களுக்கு தூக்கு தண்டனைதான் கொடுக்க வேண்டும். எக்காரணத்தை கொண்டும் வெளியில் விடக் கூடாது. பிச்சம்பட்டி வரும் வழியில் உள்ள டாஸ்மாக் கடையை உடனடியாக அகற்ற வேண்டும் என்ற கோரிக்கையுடன் கூறி முடித்தார்கள்.

**கரூர் மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி.ஜெயந்தி அவர்கள் அளித்த வாக்குமூலம்:**

இவ்வழக்கில் நடவடிக்கைகள் பற்றி கேட்ட போது 3 மாவட்ட காவல்துறை கண்காணிப்பாளர்கள் மற்றும் IG திரு. இராமசுப்பரமணியம் மற்றும் DIG செந்தாமரைக் கண்ணன் ஆகியோர் பிச்சம்பட்டி கிராமத்தில் முகாமிட்டு தொடர்ந்து கண்காணித்து வருகின்றார்கள். மேலும் 5 சிறப்பு படை அமைக்கப்பட்டு தேடியும் விசாரித்தும் வருகின்றார்கள். மேலும் 13 நபர்களை அழைத்து வந்து செமன் டெஸ்ட் செய்யப்பட்டுள்ளது. அந்த பெண்ணை பாலியல் பலாத்காரம் செய்துள்ளார்கள் என்று பிரேத பரிசோதனை அறிக்கையில் தெரிய வந்துள்ளது. மேலும் FIR Alert 3(2)(v) பட்டியல் சாதி மற்றும் பழங்குடியினர் வன்கொடுமை திருத்த சட்டத்தில் வழக்கு பதிவு செய்து 26.06.2014 அன்று ரூ. 1,86,500/– நிவாரணம் கொடுக்கப்பட்டுள்ளது. மேலும் அப்பெண்ணின் மூன்று சகோதரிகளுக்கு படிப்பதற்கான செலவை அரசே முழுமையாக ஏற்றுக் கொள்ளும். மேலும் பள்ளியைப் பற்றி கேட்ட போது பழைய ஜெயங்கொண்டம் பள்ளிதான் பாதுகாப்பாக உள்ளது. அதனால் அங்கேயே சேர்க்கச் சொல்லி கூறியுள்ளார்கள் என்று கூறினார்.

மேலும் கள ஆய்வு குழுவினர் மாவட்ட ஆட்சித் தலைவரிடம் வினிதாவுடன் வேலைக்கு சென்ற மூன்று பெண் குழந்தைகள் 18 வயதிற்கு குறைவான மைனர் குழந்தைகளை 24.06.2014 அன்று அதிகாலை 3 மணிக்கு மாயனூர் காவல் நிலையத்திற்கு அழைத்துச் சென்று மாறி மாறி காவல் நிலைய ஆண் காவலர்கள் விசாரித்துவிட்டு அதன் பின் காலை சுமார் 7.30 மணிக்குத்தான் வீட்டிற்கு அனுப்பியுள்ளார்கள். அத்துடன் தற்போது காவலர்கள் சம்பவ இடத்திற்கு வந்து குழந்தைகளை அழைத்து தொடர்ந்து விசாரித்து வருகின்றார்கள். இதுகுறித்து தங்கள் கவனத்திற்கு வந்ததா என்று கேட்ட போது இதற்கு மாவட்ட ஆட்சித்தலைவர் இதுகுறித்து எங்களுக்கு யாரும் எதுவும் சொல்லவில்லை, இதைப்பற்றி நாங்கள் யோசிக்கவும் இல்லை. SC கமிஷன், மாநில குழந்தைகள் ஆணையமும் தெரிவிக்கவில்லை. 18 வயதிற்கு கீழ் உள்ள குழந்தைகளை காவல் நிலையம் அழைத்து விசாரித்தது தவறுதான். இனிமேல் இதுபோன்று நடக்காமல் SP யிடம் கூறுகின்றேன். காவலர்கள் குற்றவாளியை கண்டு பிடிக்கத்தான் இவ்வாறு செய்துள்ளார்கள் அது தவறுதான், நான் அவர்களிடம் கூறுகின்றேன்.

மாவட்ட குழந்தைகள் நல அலுவலர் அவர்களுக்கு POCSO சட்டத்தின்படி பாதிக்கப்பட்ட குழந்தைகள், சாட்சியம் அளிப்பவர் குழந்தையாக இருக்கும்போது அவர்களுக்கு பாதுகாப்பு கொடுக்க வேண்டியது அவர்களின் கடமை. ஆனால் மாவட்ட DCPO விற்கு இதுகுறித்து தெரியாது என்பது பொறுப்பற்ற தன்மையாகத்தான் பார்க்க முடிகிறது.

இதுகுறித்து தாங்கள் என்ன நடவடிக்கை மேற்கொள்ள உள்ளீர்கள் என்று கேட்டதற்கு, DCPO விடம் நான் ஏற்கனவே தொடர்ந்து அந்த பகுதிக்கு சென்று பார்வையிட கூறியிருந்தேன். ஆனால் அவர் இதுவரை செல்லாதது கண்டிக்கத்தக்கது. அதனால் சமூக நல அலுவலர் அவர்களை உடனடியாக அப்பகுதிக்கு சென்று கண்காணிக்கச் சொல்கின்றேன் என்று இரவு 9 மணிக்கு சமூக நல அலுவலர் அவர்கள் வீட்டில் இருந்தாலும் வரவேண்டும் என்று வரவழைத்தார்.

கிருஷ்ணராயபுரத்திலிருந்து பிச்சம்பட்டி வரும் வழி மிகவும் இருட்டாக உள்ளது. அதனால் தான் இதுபோன்ற ஒரு சம்பவம் நடந்தது யாரும் கண்டறியமுடியவில்லை. சம்பந்தப்பட்ட இடத்தில் தற்பொழுது மின் விளக்கு போடப்பட்டுள்ளது. அப்பகுதி நீங்கள் சொல்வது போல் மிகவும் இருட்டாகத்தான் உள்ளது. பெண்கள் இரவில் செல்வது மிகவும் கடினம்தான். விரைவில் அப்பகுதியில் மின் விளக்குகள் அமைக்க ஏற்பாடுகள் செய்யப்படும். மேலும் இதுபோன்ற சம்பவங்கள் ஏற்படாமல் இருக்க சமூக ஆர்வலர்கள் விழிப்புணர்வு ஏற்படுத்த வேண்டும். நாங்களும் உங்களுக்கு முழு ஒத்துழைப்பு வழங்குவோம் என்று கூறி முடித்தார்.

**கண்டறிந்தவைகள் : –**

கரூர் மாவட்டம், கிருஷ்ணராயபுரம் தாலுகா, கே. பிச்சம்பட்டி கிராமத்தில் வசிக்கும் திரு. பொன்னுசாமி, நாகவல்லி என்பவரின் மகள் வினிதா என்பதும் அவருக்கு மூன்று சகோதரிகள் உள்ளனர் என்பதும், இவர்கள் இந்து பள்ளர் சமூகத்தை சார்ந்தவர்கள் என்பதும் உண்மை என கள ஆய்வின்மூலம் கண்டறியப்பட்டுள்ளது.

கொலை செய்யப்பட்ட வினிதா, கரூரில் உள்ள V.K.பாலிமர் பிரைவேட் லிமிட்டெட் என்ற கொசுவலை கம்பெனிக்கு வேலைக்கு சென்றுள்ளார் என்பதும் கள ஆய்வின் மூலம் கண்டறியப்பட்டுள்ளது. பள்ளர் சமூகத்தை சேர்ந்த வினிதா தான் குடியிருக்கும் கே. பிச்சம்பட்டியில் இருந்து காலை சுமார் 8.15 மணிக்கு புறப்பட்டு 2 கிலோமீட்டர் தொலைவில் உள்ள கிருஷ்ணராயபுரத்திற்கு சைக்கிளில் சென்று அங்கு சைக்கிளை நிறுத்திவிட்டு அங்கிருந்து தனியார் பேருந்தில் 45 நிமிடத்தில் கரூரில் உள்ள கம்பெனிக்கு சென்று வேலை செய்துவிட்டு மாலை மீண்டும் தனியார் பேருந்தில் ஏறி கிருஷ்ணராயபுரத்திற்கு சுமார் 6.45 மணிக்கு இறங்கி அங்கு சைக்கிளை எடுத்துக்கொண்டு இரவு சுமார் 7.15 மணிக்கு தினமும் வீடு வந்துவிடுவார் என்பது கிராம மக்கள் மற்றும் பெற்றோரின் வாக்குமூலத்தில் இருந்து கண்டறிய முடிகிறது.

சம்பவ நாளான 23.06.2014 அன்று கிருஷ்ணராயபுரத்தில் உள்ள மாரியம்மன் கோவில் திருவிழா நடைபெற்றுள்ளது. அன்று முத்துராஜா என்ற சமூகமும், மற்ற சாதி இந்துக்களும் இவ்விழாவை கொண்டாடி உள்ளார்கள் என்பதுவும், மற்ற தலித் மக்கள் யாரும் அவ்விழாவில் கலந்து கொள்ளவில்லை என்பதும் கள ஆய்வின் மூலம் கண்டறியப்பட்டுள்ளது. சம்பவ நாள் அன்று (23.06.2014) காலை 7.15 மணியளவில் மாணவி வினிதா எப்பொழுதும் போல் வேலைக்கு சைக்கிளில் சென்றது, அதேபோன்று மாலை 6.45 மணிக்கு V.K. பேருந்தைவிட்டு இறங்கி சைக்கிளை எடுத்துக்கொண்டு வீட்டிற்கு செல்ல முயற்சித்துள்ளார் என்பதும் உண்மை என சாட்சி உமா சங்கர் வாக்குமூலத்தில் இருந்து அறியமுடிகிறது.

சம்பவ நாள் அன்று (23.06.2014) மாலை 6.45 மணிக்கு. பேருந்தைவிட்டு இறங்கும் போது வினிதாவுடன் வேலைபார்க்கும் கே. பிச்சம்பட்டியை சேர்ந்த இந்துமதி, பவித்ரா, விக்னேஸ்வரி, மற்றும் வினிதாவின் மாமன் மகன் ஸ்ரீதர் ஆகியோரும் இறங்கியுள்ளார்கள் என்பதும், இறங்கிய வினிதா சைக்கிளை எடுத்துக்கொண்டு வந்துள்ளார், அப்போது ஸ்ரீதர் எங்களுடன் வா என்று கூறியுள்ளார் மேலும் வினிதாவிற்கு தனது முதலாளி ஸ்ரீதருக்கு கொடுத்த சம்பள பணத்தை கொடுத்துள்ளார் என்பதுவும், அதை வினிதா வாங்க மறுத்து வினிதா கீழே போட்டுவிட்டு சைக்கிளை எடுத்துக்கொண்டு வீட்டிற்கு வந்துவிட்டதாக சாட்சிகள் வாக்குமூலத்தில் இருந்து அறியமுடிகிறது. சம்பவ நாள் அன்று (23.06.2014 ) சம்பள பணத்தை கீழே போட்டுவிட்டு வந்த வினிதா இரவு 10 மணி ஆகியும் வீடுதிரும்பவில்லை என்பதும் அதன் பிறகு அவர் முனியப்பன் என்பவரின் கொடிக்காலில் (வெத்தலை தோப்பில்) அரை நிர்வாணமாக கழுத்தில் துப்பட்டா இறுக்கப்பட்ட நிலையிலும், வினிதாவின் ஆடை மற்றும் உள்ளாடைகள் ஆகியவை கொடிக்காலில் மட்டிவைக்கப்பட்டிருந்த நிலையில் இறந்து கிடந்துள்ளார் என்பது சம்பவ சாட்சிகளின் வாக்கு மூலத்திலிருந்து அறியமுடிகிறது. வினிதா என்ற 17 வயது சிறுமி பல நபர்களால் கொடூரமாக பாலியல் வன்புணர்ச்சி செய்யப்பட்டு வெளியில் தெரியாமல் இருக்க கொலை செய்துள்ளார்கள் என்பது வினிதாவின் பெற்றோர் மற்றும் சம்பவ சாட்சிகள் வாக்குமூலத்திலிருந்து அறியமுடிகிறது.

சாட்சிகளின் வாக்குமூலத்தின் படி சம்பவ நாள் அன்று (23.06.2014 ) கொலை செய்யப்பட்ட வினிதா, சாட்சிகள் இந்துமதி, பவித்ரா, விக்னேஸ்வரி, மற்றும் ஸ்ரீதர் ஆகியோரை கடந்து வந்த பிறகு கிருஷ்ணராயபுரம் மாரியம்மன் திருவிழாவில் சரங்குத்தி கிருஷ்ணராயபுரத்தில் இருந்து கே. பிச்சம்பட்டி நோக்கி ஊர்வலம் வந்துள்ளது என்றும். அப்போது மேற்கண்ட நபர்கள் வேடிக்கை பார்த்துக்கொண்டு வந்த போது சுமார் 25 நிமிடங்கள் கழித்து வடிவேல் (முத்துராஜா பரம்பரையை செர்ந்தவர்) என்பவர் நான்கு நபர்களுடன் சம்பவ இடத்தில் இருந்து கிருஷ்ணராயபுரத்தை நோக்கி வந்த போது எதிரே வந்த மூன்று பெண்களில் ஒருவரான விக்னேஸ்வரியிடம் பயமுறுத்தியுள்ளார்கள் என்பதுவும், அப்போது ஸ்ரீதர் சத்தம் போட்டதாகவும், அதற்கு வடிவேல் கோவிச்சிகாத மாப்பிள்ளை என்று முதுகில் தட்டிவிட்டு சென்றதாகவும், தற்போது ஸ்ரீதர் மற்றும் வடிவேல் காவல் நிலைய விசாரணையில் வைக்கப்பட்டுள்ளார்கள் என்பதும் சாட்சிகள் மற்றும் காவலர்களின் வாக்குமூலத்தில் இருந்து அறியமுடிகிறது.

தலித் மாணவி வினிதா கொலை செய்யபட்ட சம்பவத்தில் முத்துராஜா பரம்பரையினர் ஈடுபட்டிருக்கக் கூடும் என்று சந்தேகிப்பதினால் பள்ளர் சமூகத்தினருக்கும், முத்துராஜா பரம்பரையினருக்கும் இடையே சாதி கலவரம் ஏற்படுவதற்கு வாய்ப்பு உள்ளதினால் மூன்று மாவட்ட காவல் கண்காணிப்பளர்கள் மற்றும் காவல் துறை துணை தலைவர், காவல் துறை தலைவர் ஆகியோர் பிச்சம்பட்டியில் முகாமிட்டுள்ளார்கள் என கண்டறியப்பட்டுள்ளது.

கொலை செய்யப்பட்ட வினிதாவுடன் வேலை பார்த்த பெண்கள் இந்துமதி, பவித்ரா, விக்னேஸ்வரி ஆகிய 17 வயது நிரம்பிய இளம் பெண்களை இரவு நேரங்களிலோ அல்லது அவர்களின் விருப்பத்திற்கு அப்பாற்பட்டோ காவல் நிலையத்தில் வைத்து விசாரிக்க கூடாது. மேலும் 18 வயதிற்கு குறைவான குழந்தைகளை சீருடையில் விசாரிக்க கூடாது என்று சட்டம் இருந்தும் அதை காவல் துறையினர் மதிக்காமல் சம்பவத்தன்று மேற்கண்ட மூன்று பெண்களை அதிகாலை 3 மணிமுதல் மறுநாள் 7.30 மணி வரை விசாரணை என்ற பெயரில் விசாரித்துள்ளார்கள் என்று பாதிக்கப்பட்ட மூன்று பெண்களின் வாக்கு மூலத்திலிருந்து அறியமுடிகிறது.

இந்துமதி, பவித்ரா, விக்னேஸ்வரி ஆகியோரை தொடர்ந்து காவல் துறையினர் மாறி மாறி விசாரித்ததில் அவர்கள் மனரீதியாக பாதிக்கப்பட்டுள்ளார்கள் என்பது பாதிக்கப்பட்ட பெண்களை விசாரிக்கும்போது நேரடியாக அறியமுடிகிறது. மாவட்ட குழந்தைகள் நல பாதுகாப்பு அலுவலர் சாட்சிகளாக இளம் பெண்களை காவல் துறையினர் சீருடையில், அழைத்து சென்று காவல் நிலையத்தில் வைத்து விசாரிப்பதையும் அவருக்கு தெரிவித்து இருந்தும் இன்றுவரை அவர்களை விசாரிக்க சம்பவ இடத்திற்கு வரவில்லை என்பதை கள ஆய்வின் மூலம் அறியமுடிகிறது. வினிதாவை வன்புணர்ச்சி செய்து கொலை செய்த குற்றவாளிகள் மீது மாயனூர் காவல் நிலையத்தில் குற்ற எண். 125/14 U/s 302 IPC, 5& 6 of Protection of children from sexual offences act 2012 - 24.06.2014 and alter 3(2) (V) SC/ST New Amendment ordinance act 26.06.2014 என்ற பிரிவுகளில் வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது.

மேலும் வினிதாவின் குடும்பத்திற்கு 1,86,500 நிவாரண தொகையை மாவட்ட ஆட்சியர் வழங்கியுள்ளார்கள் என்பது கள ஆய்வின் மூலம் கண்டறியப்பட்டுள்ளது. வினிதாவை வன்புணர்ச்சி செய்து கொலை செய்த குற்றவாளிகளை பிடிப்பதற்கு தமிழக காவல் துறையினர் 13 குழுக்களாக பிரித்து தேடிவருவதாக இதுவரை கூறிவருவதும், காவல் படைகளை கே.பிச்சம்பட்டியில் குவித்து வருவதும் குற்றவாளிகளை தப்பிக்க வைக்கும் முயற்சியாக உள்ளது என்பது காவல் துறையினரின் நடவடிக்கை மூலம் அறியமுடிகிறது. வினிதாவை வன்புணர்ச்சி செய்து கொலை செய்த குற்றவாளிகளை தேடுகின்றோம் என்ற போர்வையில் வினிதாவுடன் பணிபுரியும் இளைஞர்களை தொடர்புபடுத்தி வினிதாவின் மாண்பை சீர்குலைத்து அதிலிருந்து குற்றவாளியாக அடையாளபடுத்தவே இதுபோன்ற செய்திகளை பத்திரிகைகளில் வெளியிட்டு வருகின்றார்கள் என்பது பத்திரிகையின் வாயிலாக அறியமுடிகிறது.

**பரிந்துரைகள் :**

18 வயதிற்கு குறைவான பெண் குழந்தைகள் மீது நடத்தப்படும் பாலியல் வன்கொடுமை குற்ற வழக்குகளில் கைது செய்யப்படும் ஒரு குற்றவாளியால் மீண்டும் குழந்தைக்கு பாதிப்பு ஏற்படும் என்ற சூழல் நீதிமன்ற விசாரணை அவரை அப்பகுதிக்கு வரவிடாமலும், அல்லது நீதிமன்றத்தில் பட்டியல் சாதி மற்றும் பட்டியல் வன்கொடுமை திருத்த அவசர சட்டம் 2012 இன் படி வழக்கு முடியும்வரை நீதிமன்றம் ஜாமீனில் விட வேண்டாம் என்று எந்த சட்டத்தின் அடிப்படையிலும் ஜாமினோ அல்லது முன் ஜாமீனோ வழங்கக்கூடாது என்று தமிழக அரசிற்கு பரிந்துரைக்கப்படுகிறது.

18 வயதிற்கு குறைவான பெண் குழந்தைகள் மீது நடத்தப்படும் பாலியல் வன்கொடுமை குற்ற வழக்குகளில் உடனடியாக குற்ற பத்திரிக்கை தாக்கல் செய்யவேண்டும் அவ்வாறு தவறும் பட்சத்தில் சம்பந்தப்பட்ட அதிகாரின் மீது குற்றத்திற்கு உடந்தையாக இருந்தார் என வழக்கு பதிவு செய்து பணியிலிருந்து நிரந்தரமாக பணி நீக்கம் செய்ய வேண்டும் என தமிழக அரசிற்கு பரிந்துரைக்கப்படுகிறது.

வினிதாவை பாலியல் வன்புணர்ச்சி செய்து கொலை செய்த வழக்கில் காவல் துறையினர் இதுவரை குற்றவாளிகளை கைது செய்யாதது காவல் துறையினரினர் குற்றவாளிகளை தப்பிக்க வைக்கும் நோக்கில் செயல்படுவதால் இவ்வழக்கை சிபிஐ இடம் ஒப்படைக்க உத்தரவிடவேண்டும் என்று தமிழக முதல்வர் அவர்களுக்கு பரிந்துரைக்கப்படுகிறது. சட்டத்தின் அடிப்படையில் குழந்தைகளை பாதுகாக்க வேண்டிய பொறுப்பில் உள்ள மாவட்ட குழந்தைகள் பாதுகாப்பு அலுவலர் ஏற்கெனவே Probation officer ஆக உள்ளவர்களுக்கு. மேலும் இந்த பதவி கொடுத்திருப்பதால் இரண்டு வேலைகளையும் சரியாக செய்ய முடியதவர்களாக இருக்கிறார்கள். ஆதலால் அனைத்து மாவட்டத்தில் தனியாக குழந்தைகள் பாதுகாப்பு அலுவலர்கள் அதிலும் குறிப்பாக பெண் குழந்தைகள் மீதான நிகழ்வுகள் அதிகம் இருப்பதால் பெண் அலுவலர்களையே நியமிக்க வேண்டும் என்று அரசுக்கு பரிந்துரைக்கப்படுகிறது.

தற்போது வினிதாவின் சாட்சிகளாக இருக்கும் இந்துமதி, பவித்ரா, விக்னேஸ்வரி ஆகியோரை காவல் துறையினர் குழந்தைகளாக நடத்த வேண்டும் என்றும், அவர்கள் சுமங்கலி திட்டத்தில் பணிபுரிந்து வருவதால் அவர்களை மீட்டு அவர்களுக்கு தொழில்நுட்ப பயிற்சி வழங்கி அவர்கள் வீட்டிலிருந்து வருமானம் ஈட்ட வழிவகை செய்ய மாவட்ட நிர்வாகத்திற்கு பரிந்துரைக்கபடுகிறது.

# பள்ளிகளில் பாலியல் வன்கொடுமைகளும் எதிர்வினைகளும்

– சுஜாதா ராவ்

*கர்நாடக மாநிலப் பள்ளிகளில் கண்காணிப்பு, கட்டுப்பாடு, கொண்டுவரப்பட்டுள்ள வழிகாட்டல் விதிகள், பள்ளிகளில் திட்டமிட்ட முறையில் நடைபெறும் குழந்தைகளுக்கு எதிரான பாலியல் அத்துமீறல்களை தடுப்பதற்குப் போதுமானவையாக இல்லை. அனைத்துக் குழந்தைகளும் பாதுகாப்புடன் கல்வி பயின்று முன்னேறுவதை உறுதிப்படுத்தும் இடங்களாக பள்ளிகள் திகழவேண்டும் என்றால் பள்ளி நடைமுறைகளின் மையமாக குழந்தைகளின் நலன் மட்டுமே வைக்கப்பட வேண்டும்.*

பெங்களூரு நகரில் உள்ள ஒரு தனியார் பள்ளியில் 2014 அக்டோபர் 28, 29 ஆகிய தேதிகளில் 6 வயது குழந்தை பாலியல் ரீதியான வன்கொடுமைக்கு அந்தப் பள்ளியின் ஆண் ஆசிரியரால் உள்ளாக்கப்பட்ட செய்தி வந்துள்ளது. அதே நகரில் ஒரு நர்சரி பள்ளியில் மூன்றரை வயது குழந்தைக்கு இதே போன்று நடந்தது என்ற செய்தி வெளியான ஒரு வார காலத்திற்குள் இந்தச் சம்பவம் நடந்துள்ளது. சென்ற ஆண்டு ஜூலையில் ஒரு பெரிய நிறுவனம் நடத்துகிற சங்கிலித் தொடர் போன்ற பள்ளிகள் ஒன்றில் ஒரு 6 வயதுக் குழந்தையை அந்தப் பள்ளியின் உடற்பயிற்சி ஆசிரியர்கள் இரண்டு பேர் பாலியல் வன்கொடுமைக்கு உள்ளாக்கினர்.

ஜூலை மாத நிகழ்வைத் தொடர்ந்து எங்கும் கண்டனக் குரல்கள் எழுந்தன. அந்தப் பள்ளியின் நிர்வாகத்தைக் கண்டித்து குழந்தைகளின் பெற்றோர்களும் பொது மக்களும் போராட்டங்களை நடத்தினர். அந்தப் போராட்டங்களில் நிர்வாகத்தை எதிர்த்து முழக்கங்கள் எழுப்பப்பட்டன. பள்ளிக்கு முன் மறியல் போராட்டமும் நடைபெற்றது. பள்ளிக் குழந்தைகளுக்குப் பாதுகாப்பை உறுதிப்படுத்த வேண்டுமானால் பள்ளியின் முதல்வரும் நிர்வாகமும் இதற்குப் பொறுப்பாக்கப்பட வேண்டும் என்று பெற்றோர்கள் கோரினர்.

இத்தகைய போராட்டங்களையும், ஊடகங்களில் இடையராமல் வெளியான செய்திகளையும் தொடர்ந்து கர்நாடக மாநில காவல்துறை, மாநில கல்வித்துறை ஆதரவோடு பள்ளிகளில் கடைபிடிக்கப்பட வேண்டிய பாதுகாப்பு விதிகள் குறித்த வழிகாட்டல்களை வெளியிட்டது. நிர்வாகங்களும் தலைமையாசிரியர்களும் அந்த விதிகளை செயல்படுத்தத் தவறினால் வழக்குத் தொடரப்படும் என்றும் காவல்துறை எச்சரித்தது. முக்கியமான பல விதிகளில் ஒன்று, ஒவ்வொரு பள்ளியிலும் கண்காணிப்பு ஒளிப்பதிவுக் கருவிகள் (சி.சி.டி.வி. கேமரா) பொறுத்தப்பட வேண்டும் என்பதாகும். பள்ளிப் பேருந்துகளில் இதேபோன்ற கேமராக்களுடன், பேருந்துகள் இருக்கும் இடத்தை தெரிவிக்கக்கூடிய புவி நிலை அமைப்பு (ஜி.பி.எஸ்.) நிறுவப்பட வேண்டும் என்று மற்றொரு விதி கூறுகிறது. பேருந்து ஓட்டுநர்கள் பள்ளிகளில் தனித்து இருக்க வேண்டுமேயன்றி குழந்தைகளோடு கலந்திருக்க அனுமதிக்கப்படக்கூடாது. பல மாடிகளாக உள்ள பள்ளிகளில் ஒவ்வொரு தளத்திலும் வெளியில் இருப்பவர்களுக்கும் தெரியக்கூடிய கண்ணாடிக் கூண்டுகளில் தள கண்காணிப்பு அலுவலர் நியமிக்கப்பட வேண்டும்.

**பள்ளிகள் தங்களது நிர்வாக ஏற்பாடுகளுக்குத்தான் முக்கியத்துவம் தருகின்றனவேயன்றி, குழந்தைகள் – ஆசிரியர்கள் – பள்ளி என்ற மையமான உறவு பரிசீலிக்கப்படாமலே, கண்டுகொள்ளப்படாமலே விடப்படுகிறது.**

அங்கிருந்து அவர் பள்ளிக்குள்ளும், வகுப்பறைகளுக்கும் கழிப்பறைகளுக்கும் வந்து செல்கிற குழந்தைகளையும் மற்றவர்களையும் கண்காணிக்க தோதாக அந்தக் கூண்டுகள் அமைக்கப்பட வேண்டும். பள்ளிகளின் உடற்பயிற்சிக் கூடங்கள், நீச்சல் குளங்கள் போன்ற இடங்களுக்கு அந்தப் பயிற்சிகளை அளிப்பது தொடர்பான அதிகாரப்பூர்வ நபர்கள் மட்டுமே அனுமதிக்கப்பட வேண்டும். பள்ளிகளின் ஆசிரியர்கள் உள்ளிட்ட அனைத்து ஊழியர்களின் பின்னணி குறித்து நிர்வாகங்கள் உறுதிப்படுத்திக்கொள்ள வேண்டும். குழந்தைகளை விட்டுச் செல்லவும், திரும்ப அழைத்துச் செல்லவும் தோதாக பெற்றோர்களுக்கு அடையாள

அட்டைகள் தரப்பட வேண்டும்.பள்ளிகளுக்கு இந்த வழிகாட்டல் விதிகள் வழங்கப்பட்டு மூன்று மாதங்கள் கடந்த பிறகு இன்றும் பெங்களூரு நகரிலும் நாட்டின் வேறு பல பகுதிகளிலும் குழந்தைகளுக்கு எதிரான பாலியல் தாக்குதல்கள் பற்றிய செய்திகள் குறைந்தபாடில்லை.

**திட்டமிட்ட அத்துமீறல்**

இந்தியாவில் பள்ளிகளில் தினந்தோறும் குழந்தைகளுக்கு எதிராகத் தொடுக்கப்படும் உடல்சார்ந்த, உணர்வு சார்ந்த, பாலியல் அத்துமீறல் சார்ந்த வன்முறைகள் அதிகரித்து வருகிறது என்பதற்கான ஒரு அறிகுறிதான் பெங்களூரு சம்பவங்கள். நாடு முழுவதுமே அனைத்து வகையான பள்ளிகளிலுமே, குழந்தைகள் தொடர்ச்சியாக திட்டமிட்ட முறையிலான பல்வேறு உடல்சார்ந்த, உணர்வு சார்ந்த வன்முறைகளுக்கு உள்ளாக்கப்படுகிறார்கள். பெரும்பாலும் “ஒழுக்கம்” என்ற பெயரில் இந்த அத்துமீறல்கள் நடைபெறுகின்றன. 2009ம் ஆண்டின் கல்வி உரிமைச் சட்டம் பள்ளிகளில் எந்த வகையிலும் குழந்தைகளுக்கு உடல்ரீதியான தண்டனை வழங்கக்கூடாது என கூறுகிறது. பள்ளிகளில் வழக்கமானதாகிவிட்ட பிரம்பால் அடிப்பது, குழந்தைகளைத் தனிமைப்படுத்துவது, இகழ்ந்து பேசுவது, திட்டுவது மற்றும் இதர வகையான தண்டனை முறைகளுக்கு இந்தச் சட்டம் தடை விதிக்கிறது. பள்ளிகளில் இருட்டு அறைகளுக்குள் குழந்தைகள் அடைக்கப்படுவது, கொளுத்தும் வெயிலில் குழந்தைகள் மயங்கி விழும் வரை நிற்க வைக்கப்படுவது, ஆசிரியர்களாலும் பள்ளியின் நிர்வாகத்தோடு சம்பந்தப்பட்ட மற்றவர்களாலும் குழந்தைகள் ரத்தம் வரும் வரை அடிக்கப்படுவது பற்றிய செய்திகள் ஊடகங்களில் வந்துகொண்டே இருக்கின்றன. சில நேரங்களில் குழந்தைகள் தற்கொலை செய்து கொள்வது பற்றிய செய்திகளும் வருகின்றன.

பள்ளிகளில் சாதி, பாலினம், வர்க்கம் என்ற அடிப்படைகளில் குழந்தைகள் பாகுபடுத்தப்படுவது தொடர்கிறது. போதிய வாய்ப்புகளும், கல்வியின் பலன்களும் இந்தப் பாகுபாடுகளின் அடிப்படையில் மறுக்கப்படுகின்றன. இது, பள்ளிகளிலிருந்து பாதியிலேயே வெளியேறும் இடை நிற்றல் விகிதத்திலிருந்தும், அரசுத் தேர்வுகளில் குழந்தைகளின் தேர்ச்சியிலிருந்தும் தெரிய வருகிறது. 2005ம் ஆண்டின் தேசிய பாடத்திட்ட கட்டமைப்பின் வழிகாட்டல் கொள்கைகளில் ஒன்றாக, “ஒருவர் தனது இயல்புப்படி, தனது இயற்கையான, சமூக சூழலோடு இணக்கமாக வாழ்தல்” என்பது ஒரு அடிப்படை மனிதத் தேவையாகக் கூறப்பட்டுள்ளது. “இயற்கைப் பின்னணி, உளவியல், சமூகவியல் சார்ந்த சூழல்களில் இடையூறுகள் ஏற்படுவது மனித உறவுகளில் மன அழுத்தத்தை ஏற்படுத்துகின்றன, சகிப்பின்மையும் மோதலும் ஏற்படக் காரணமாகின்றன” என்றும் அந்தக் கொள்கை கூறுகிறது. கல்வி என்பது அர்த்தமுள்ளதாக இருக்க வேண்டுமானால், ஒவ்வொருவரும் தனது வாழ்க்கை முறையாக அமைதியை தேர்ந்தெடுப்பதற்குத் தோதானதாகவும், அதற்கான அதிகாரத்தை வழங்குவதாகவும் இருக்க வேண்டும் என்றும் அந்தக் கொள்கை விளக்குகிறது. குழந்தைகள் தெளிவான முறையில் கற்றுக்கொள்வது தொடர்பான அனுபவங்கள், மன அழுத்தமும், அத்துமீறல்களும் நிறைந்த சூழல் குழந்தைகளின் கற்றல் திறனுக்கும் வளர்ச்சிக்கும் குந்தகமான நிலையை ஏற்படுத்துகின்றன என்றுத் தெளிவாகக் காட்டுகின்றன. சூழல்கள் எவ்வளவுக்கெவ்வளவு அழுத்தமிக்கதாக இருக்கின்றனவோ அவ்வளவுக்கவ்வளவு, அத்தகைய சூழல்களில் கற்றல் திறன் என்பது அர்த்தமற்றதாக இருக்கிறது.

**பள்ளிகளுக்குள் ஒழுங்குமுறை சார்ந்த, கண்காணிப்புகள் சார்ந்த அதிகார ஏற்பாடுகள் மாணவர்களை தங்களது சந்தேகத்தையோ, மாற்றுக் கருத்தையோ மன அழுத்தத்தையோ வெளிப்படுத்த முடியாத அளவிற்கு மிகுந்த அச்சம்கொண்டவர்களாக மாற்றுகின்றன.**

**கேள்வியில்லாக் கலாச்சாரம்**

அமைதியான, “அழுத்தங்களிலிருந்து விடுபட்ட” கற்றல் என்பதை ஒரு அடிப்படையான கல்வி முறை இலக்காக நமது கொள்கை ஆவணங்கள் வகுத்துள்ளன. ஆனால், பள்ளிகளில் குழந்தைகளுக்கு எதிராக நடைபெறும் பல்வேறு வகையான அத்துமீறல்களும், குறிப்பாக வன்முறைகளும் பாலியல் அத்துமீறல்களும், நமது பள்ளிகளின் அமைப்பு சார்ந்த கொள்கைகளிலும் அதன்படி செயல்பட வேண்டிய பள்ளி நிர்வாகங்களின் அணுகுமுறைகளிலும் அடிப்படையான ஒரு குறைபாடு இருப்பதை எடுத்துக்காட்டுகின்றன. முதலில் பள்ளிகளுக்கான அமைப்பு சார்ந்த கோட்பாடுகளை எடுத்துக்கொள்வோம். குழந்தைகளைக் கட்டுப்படுத்துவது, வேலைப் பிரிவினை குழந்தைகளைப்

பிரித்து வைக்கிற கொள்கைகள் ஆகியவையே பள்ளிகளின் முதன்மையான நிர்வாகக் கொள்கையாக இருக்கின்றன. பள்ளி நிர்வாகங்கள் ஆசிரியர்கள் மீதும் மாணவர்கள் மீதும் கடுமையான கண்காணிப்புகளையும் கட்டுப்பாடுகளையும் விதிக்கின்றன. எதைக் கற்றுக்கொடுக்க வேண்டும், எப்படிக் கற்றுக்கொடுக்க வேண்டும் என்பது குறித்த நிர்வாகங்களின் கட்டளைகள், ஒவ்வொரு குழந்தைக்கும் ஏற்ப தனித்தனியான பயிற்றுவித்தல் முறையை ஆசிரியர்கள் தாங்களாக உருவாக்கிக்கொள்வதற்குத் தடையாக நிற்கின்றன. பாடங்கள் ஒன்றுக்கொன்று சம்பந்தமில்லாமலே கற்பிக்கப்படுகின்றன.

**இன்றைய பள்ளி முறையில் ஆசிரியர்கள் தங்களை "தொழிலாளர்கள்" என்றே கருதுகிறார்கள். ஆசிரியர்களின் இந்த துண்டிக்கப்பட்ட நிலை சமுதாயத்தின் வேறு அம்சங்களிலும் பிரதிபலிக்கிறது.**

ஆசிரியர் பற்றாக்குறையை சமாளிப்பதற்காக ஒட்டுமொத்தமாக ஆசிரியர்கள் வேலைக்கு எடுக்கப்படுகிறார்கள். "கல்வி வழங்குபவர்" என்ற தகுதியைப் பெறுவதற்கான அடிப்படைப் பயிற்சிகள் எதுவும் இல்லாமலே அவர்கள் நியமிக்கப்படுகிறார்கள். தொழில் சார்ந்த வழிகாட்டல்களும் ஆலோசனைகளும் வழங்கப்படுவதில்லை. ஆசிரியரின் செயல் திறனை, தேர்வுகளில் மாணவர்களின் செயல்பாடு அடிப்படையில் மதிப்பிடுகிற நிர்வாகங்களின் கீழ் அவர்கள் பணி செய்ய வேண்டியிருக்கிறது. விரிவான பாடத் திட்டங்களும், அதிகக் குழந்தைகளைக் கொண்ட வகுப்பறைகளும், தேர்வு நோக்கத்துடன் கற்றுத் தருவதற்கு கட்டாயப்படுத்தப்படுவதும், பள்ளிக் கல்வி என்ற அடிப்படை நோக்கத்திலிருந்தே ஆசிரியர்களை விலக்கி வைத்து விடுகின்றன. பள்ளி நிர்வாகங்களையும், பெற்றோர்களையும் திருப்திபடுத்துகிற நோக்கத்துடன், குழந்தைகள் தேர்வுகளில் தேர்ச்சியடைந்தால் போதும் என்பதற்கான வழி முறைகள் கட்டாயமாக நடைமுறைப்படுத்தப்படுகின்றன. இதனால், ஒவ்வொரு குழந்தையும் ஒரு தனிமனிதர் என்பதன் முக்கியத்துவம் பின்னுக்குத் தள்ளப்படுகிறது. தாங்கள் ஆசிரியர்கள் என்ற உணர்விலிருந்து ஆசிரியர்கள் தொழில் ரீதியாகவும் சித்தாந்த ரீதியாகவும் துண்டிக்கப்படுகிறார்கள். தொழிற்சாலை அமைப்பு போன்ற இன்றைய பள்ளி முறையில் ஆசிரியர்கள் தங்களை "தொழிலாளர்கள்" என்றே கருதுகிறார்கள். ஆசிரியர்களின் இந்த துண்டிக்கப்பட்ட நிலை சமுதாயத்தின் வேறு அம்சங்களிலும் பிரதிபலிக்கிறது. அது குற்றமனப்பான்மைகொண்ட, நெறியற்ற, நியாயமற்ற முறைகளில் பள்ளிகள் செயல்படுவதற்கு இட்டுச் செல்கிறது.

இதேபோல், மாணவர்களும் கல்வி கற்றல் என்ற நடைமுறையிலிருந்து துண்டிக்கப்படுகிறார்கள். வயது அடிப்படையில் வகுப்பறைகளுக்கு அனுப்பப்படுகிற குழந்தைகள், எதையும் கேள்வி கேட்காமல் கற்க வேண்டும் என்றும், "தாழ்மையுள்ள" மாணவர்கள் என்ற அடையாளத்தை பெற்றால் போதும் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது. விமர்சனப்பூர்வமாக பகுத்தாய்வு செய்து கற்பதற்கோ, மாற்றுக் கருத்து கூறுவதற்கோ, தனக்கு உடன்பாடில்லை என்று வெளிப்படுத்துவதற்கோ மாணவர்களுக்கு எவ்வித வாய்ப்பும் தரப்படுவதில்லை. ஆசிரியர்களும் பள்ளியின் இதர பணியாளர்களும் மாணவர்கள் மீது தங்களது சொந்த ஆதிக்கத்தை செலுத்துவதற்குத்தான் முயல்கிறார்கள். பள்ளிகளுக்குள் ஒழுங்குமுறை சார்ந்த, கண்காணிப்புகள் சார்ந்த அதிகார ஏற்பாடுகள் மாணவர்களை தங்களது சந்தேகத்தையோ, மாற்றுக் கருத்தையோ மன அழுத்தத்தையோ வெளிப்படுத்த முடியாத அளவிற்கு மிகுந்த அச்சம்கொண்டவர்களாக மாற்றுகின்றன. ஏராளமான மாணவர்கள் மௌனமாக, அர்த்தமுள்ள கல்விமுறையிலிருந்து வெளியேற்றப்படுகிறார்கள். பள்ளிகளில் நடைபெறும் குழந்தைகளுக்கு எதிரான அத்துமீறல்களில் ஒன்றுதான் பாலியல் அத்துமீறல். அதே வேளையில் இது மிகக் கொடூரமான அத்துமீறலாகவும் இருக்கிறது.

இந்தியாவின் விரிவான சமூக பண்பாட்டு நெறிகள், சமுதாயத்தின் அதீதமான ஏற்றத்தாழ்வுகளை ஏற்றுக்கொண்டதாகவே இருந்து வந்துள்ளது. பாலினம், சாதியம், வர்க்கம், வயது தொடர்பான கட்டமைக்கப்பட்ட கோட்பாடுகள் பள்ளிகளிலும் தொடர்கின்றன. பள்ளிகளில் ஆசிரியர்கள் தங்கள் முதல்வர்களை அல்லது நிர்வாகங்களை மிக அரிதாகவே கேள்வி கேட்க முடிகிறது. இதைத் தொடர்ந்து மாணவர்கள் தங்கள் ஆசிரியர்களையும் இதர மூத்தவர்களையும் மிக அரிதாகவே கேள்வி கேட்கிறார்கள். இந்த ஆதிக்கக் கலாச்சாரம்தான் பள்ளிக் கல்வி முறையிலும், அதற்கான அரசு சார்ந்த அதிகார அமைப்புகளிலும் மேலோங்கியுள்ளது. மாநில அளவிலும், மாவட்ட அளவிலும், வட்டார அளவிலும் உள்ள கல்வி அதிகாரிகள்

பள்ளிகள் எவ்வாறு செயல்பட வேண்டும் என்று கட்டளையிடுகிறவர்களாக இருக்கிறார்கள். மையப்படுத்தப்பட்ட நெறிகள், நடைமுறைகளுக்கு ஏற்ப பள்ளிகள் செயல்பட வேண்டும் என்று அவர்கள் ஆணையிடுகிறார்கள். பள்ளிகளை நிர்வகிப்பதற்கான நிறுவன ஏற்பாடுகள் பள்ளியின் நிதியாதாரங்களை நிர்வகிப்பது எப்படி என்பதையே மையப்படுத்தியதாக இருக்கின்றன. பாடத் திட்ட சோதனைகளிலும் தேர்வுகளிலும் மாணவர்களை எவ்வாறு செயல்பட வைப்பது என்பதில்தான் கவனம் செலுத்தப்படுகிறது.

அரசு சார்ந்த கல்வித்துறை பொறுப்பாளர்கள் பள்ளிகளின் விரிவான (வகுப்பறைகளின் எண்ணிக்கை, மாணவர் ஆசிரியர் விகிதம், ஆசிரியர் தகுதி, ஆசிரியர் நியமனம் மற்றும் இடமாறுதல் விதிகள், ஊதியம் போன்ற) உள்கட்டமைப்பு மற்றும் மனித தேவைகளில் மட்டுமே கவனம் செலுத்துகிறார்கள். மென்மையான ஆனால், இதே அளவிற்கு முக்கியத்துவம் வாய்ந்த பள்ளிக் கலாச்சாரம், ஆசிரியர் ஒத்துழைப்பு, ஆசிரியர் கடப்பாடு, ஒவ்வொரு குழந்தையின் தனிப்பட்ட கற்றல்திறன் ஆகியவை உள்ளிட்ட பள்ளிக் கல்வி முறைகள் கண்டுகொள்ளப்படுவதில்லை. இதன் விளைவாக பள்ளிகள் தங்களது நிர்வாக ஏற்பாடுகளுக்குத்தான் முக்கியத்துவம் தருகின்றனவேயன்றி, குழந்தைகள் – ஆசிரியர்கள் – பள்ளி என்ற மையமான உறவு பரிசீலிக்கப்படாமலே, கண்டுகொள்ளப்படாமலே விடப்படுகிறது.

## கடமைப் பொறுப்புக்குக் கட்டுப்பாடு

இத்தகைய அமைப்பு சார்ந்த நிறுவனம் சார்ந்த கட்டுப்பாடு மற்றும் கண்காணிப்புக் கலாச்சாரம், பள்ளிகளில் அறநெறி சார்ந்த கடப்பாட்டையும் லட்சியத்தையும் ஊக்குவிப்பதாக இல்லை. இத்தகைய அறநெறி சார்ந்த லட்சியமும் தலைமைப் பண்பும் இல்லாமல் போகிறபோது, சமுதாயத்திற்குத் தொண்டாற்றுவதற்காக ஏற்படுத்தப்பட்ட நிறுவனங்களின் ஆசிரியர்கள் மற்றும் பள்ளிகள் என்ற அடையாளம் அச்சுறுத்தலுக்கு உள்ளாகிறது. கண்காணிப்பு ஏற்பாடுகளை எவ்வளவு விரைவாக மேற்கொண்டாலும் அனைத்துக் குழந்தைகளுக்கும் அவர்கள் வளர்வதற்கும் முன்னேறுவதற்குமான சரியான சூழலை உருவாக்கிவிட முடியாது. பள்ளிகளின் அறம் சார்ந்த நோக்கங்கள் பற்றிய ஆழமான கேள்விகளை எழுப்பாமல் அந்தச் சூழல் உருவாகிவிடாது. பள்ளிகளிலும் பிரதிபலிக்கிற சமூகம் சார்ந்த பண்பாடுகள், சமூக மதிப்புகள், அணுகுமுறைகள் ஆகியவற்றிலும் கவனம் செலுத்தப்பட்டாக வேண்டும். எத்தகைய சமுதாயத்தை நாம் கட்டி வளர்க்க விரும்புகிறோம் என்ற கேள்விகளை எழுப்புவதும் அவசியமாகிறது. கர்நாடக மாநில காவல்துறையினர் தங்களது வழிகாட்டல் நெறிகளை அனுப்பிய மூன்று மாதங்களுக்குப் பிறகு பள்ளிகளிலிருந்து வந்துள்ள தகவல்கள், 10 சதவீதத்திற்கும் குறைவான பள்ளிகளே குழந்தைகளின் பாதுகாப்பு தொடர்பான வழிகாட்டல்களை பின்பற்றுவதற்கான முயற்சிகளை மேற்கொண்டுள்ளன என்பதைக் காட்டுகின்றன. பல பள்ளிகள் இந்த விதிகள் நடைமுறைக்கு சாத்தியமானவையா என்று கேள்வி எழுப்பியுள்ளன. கண்காணிப்பு கேமராக்களும், கண்காணிப்பு அறைகளும் ஏற்படுத்துவதற்கு கூடுதல் செலவாகும் என்றும் நிர்வாகங்கள் கூறுகின்றன. இந்த விதிகளைப் பின்பற்றாத பள்ளிகள் மீது கர்நாடக காவல்துறை சட்டத்தின் கீழ் நடவடிக்கை எடுக்கப்படும் என்று மாநில அரசு பதிலளித்துள்ளது. அதைத் தொடர்ந்து பள்ளி நிர்வாகங்கள் தங்களது கண்காணிப்பு மற்றும் கட்டுப்பாடு ஏற்பாடுகளை மேலும் இறுக்கமாக்குகிற நிலைமை ஏற்பட்டுள்ளது.

## நிறைவாக

கல்வியின் இலக்கு சமூகம் சார்ந்தும், உணர்வு சார்ந்தும் குழந்தைகளை நலமாக இருக்கச் செய்வதுதான் என்றால், அமைப்பு சார்ந்த, பண்பாடு சார்ந்த, நிறுவனம் சார்ந்த நடைமுறைகள் குழந்தைகளுக்கு இப்படிப்பட்ட வாய்ப்பு வெளிகளை ஏற்படுத்தித் தருவதாக இருக்க வேண்டும். அதுவே அனைத்துப் பள்ளிகளின் மைய இலக்காக இருக்க வேண்டும். கண்காணிப்பு அதிகார ஏற்பாடுகளை வலுக்கட்டாயமாக ஏற்படுத்த ஆணையிடுவது ஒரு இடைக்கால ஏற்பாடாக இருக்க முடியும்.

அரசுக் கொள்கைகளை உருவாக்கும் இடங்களில் இருப்பவரும், பள்ளிகளுக்கான அதிகார அமைப்புகளும் பள்ளிகளில் குழந்தைகளுக்கு எதிரான அத்துமீறல் பிரச்சனைகளைக் கையாள்வதில் ஆழ்ந்த அக்கறையோடு இருப்பதாக காட்டுகிற ஏற்பாடுகளாகவே இருக்க முடியும். பள்ளிகளில் குழந்தைகளுக்கு எதிரான அத்துமீறல்களை அனைத்து வடிவங்களிலும் ஒழித்துக்கட்ட வேண்டுமானால், அனைத்துப் பள்ளிகள், பள்ளிகளுக்கான அரசு கட்டமைப்புகள், அவற்றின் அமைப்பு சார்ந்த கொள்கைகள் ஆகியவற்றின் மைய நோக்கமாக குழந்தையின் நலன் என்பதே இருக்க வேண்டும். கட்டுப்பாடு சார்ந்த, நிறுவன ஏற்பாடுகள் சார்ந்த பள்ளிக் கல்வி முறையானது ஒரு தார்மீகக் கடப்பாடும் லட்சியமும் சார்ந்த ஏற்பாடாக மாறுவது அத்துமீறல்கள் இல்லாத, குழந்தைகளுக்கு இணக்கமான பள்ளிகளை உருவாக்குவதற்கான முதல் நடவடிக்கையாக இருக்கும். ஆம். இது ஒரு கல்வி சார்ந்த தேவை மட்டுமல்ல, நமது சமுதாயத்தின் தேவையுமாகும்.

**ஆதாரம்: Economic & Political Weekly (EPW)**
**January 17, 2015 VOL L NO 3**

# பட்டுக் கையுறைக்குள் ஒரு இரும்புக் கரம்

**– த்வணி மேத்தா**

*ஒரு பக்கம் குழந்தைகளை தத்தெடுப்பது, குழந்தை இல்லங்கள் தொடர்பான சட்டத் திருத்தங்கள் வரவேற்கத்தக்கவையாக இருக்கின்றன. ஆனால், அவற்றின் அருகிலேயே, உத்தேசிக்கப்பட்டுள்ள சிறார் நீதி (பராமரிப்பு மற்றும் பாதுகாப்பு) சட்டத்தில், கடுமையான குற்றங்களுக்காக குழந்தைகளை வழக்கமான நீதிமன்றங்களில் விசாரிக்கலாம் என்ற விதி சேர்க்கப்பட்டுள்ளது.*

இந்தியாவில் ஒரு சட்டம் கொண்டு வரப்படுவதற்கு முன் கலந்தாய்வு நடைமுறைகள் மேற்கொள்ளப்படுவதென்பது பாராட்டும்படியாக இல்லை. உத்தேசிக்கப்பட்டுள்ள, சிறார் நீதி (பராமரிப்பு மற்றும் பாதுகாப்பு) சட்டம் – 2000 இதிலிருந்து ஒன்றும் மாறுபட்டுவிடவில்லை. இந்த சட்டத்திற்கான முன் வரைவை மத்திய பெண்கள் மற்றும் மேம்பாட்டுத்துறை அமைச்சர் மேனகா காந்தி, சட்டம் மற்றும் நீதித்துறை அமைச்சகத்திற்கு அனுப்பியுள்ளார். அந்த அமைச்சகத்தில் இந்த சட்டமுன்வரைவு குறித்து விரிவாக விவாதிக்கப்படும் என்று தோன்றவில்லை. ஒரு முனைப்பான பொது விவாதம் நடத்தப்படவில்லை, 2012 டிசம்பர் 16ல் தில்லியில் நடந்த கும்பல் வன்புணர்வு ஆகிய பின்னணிகளில், இத்தகையக் குற்றங்களில் ஈடுபடும் சிறார்கள் கடுமையாக தண்டிக்கப்பட வேண்டும் என்ற வற்புறுத்தல் முன்னுக்கு வந்துள்ளது. இந்தச் சூழலில் சட்ட முன்வரைவு குறித்த ஒரு ஆழ்ந்த ஆய்வு தேவைப்படுகிறது.

தற்போதுள்ள சட்டத்தை விரிவான முறையில் மாற்றியமைக்க இந்தச் சட்ட முன்வரைவு முயல்கிறது. அதிகாரிகளும் பல்வேறு அமைப்புகளும் கடைப்பிடிக்க வேண்டிய வழிகாட்டல் கொள்கைகள் இதில் முன்மொழியப்பட்டுள்ளன. சீர்திருத்த இல்லங்களை ஆய்வுக்கு உட்படுத்துவதற்கான ஏற்பாடுகளை வலுப்படுத்த முயல்கிறது. நாடுகளுக்கு இடையே குழந்தைகள் தத்தெடுக்கப்படுவது தொடர்பாக, குழந்தைகளின் பாதுகாப்பையும், நாடுகளிடையே ஒத்துழைப்பையும் உறுதிப்படுத்துவதில் 1993ஆம் ஆண்டின் ஹாக் மாநாட்டுத் தீர்மானங்களைச் செயல்படுத்துவதற்கான முக்கிய நடவடிக்கைகள் இந்த சட்ட முன்வரைவில் உள்ளன. ஆயினும், சில கடுமையான குற்றச் செயல்களில் ஈடுபடக்கூடிய 16 முதல் 18 வயது வரையிலான சிறார்களை (தற்போது சிறார்கள் என்ற சொல் குழந்தைகள் என மாற்றப்பட்டுள்ளது) வழக்கமான குற்றவியல் நீதிமன்றங்களே விசாரிப்பதற்கான விதிகளைக் கொண்டுவரவும் இந்த முன்வரைவில் வழி செய்யப்பட்டுள்ளது. இந்த ஆலோசனை, ஒட்டுமொத்த சட்டத்தின் சீர்திருத்த அம்சங்களையே ஒரே வரியில் ஒழித்துக்கட்டுவதாக இருக்கிறது. சட்ட முன்வரைவின் இதர முற்போக்கான அம்சங்கள் இதனால் பின்னுக்குத் தள்ளப்படுகின்றன.

இந்தத் திருத்தம் இந்தியாவின் அரசமைப்பு சாசனத்திற்கும், இந்தியாவின் உலகளாவிய கடமைப் பொறுப்புகளுக்கும் பொருத்தமானதாக இருக்கிறதா என்பதை இக்கட்டுரையில் காண்போம். இந்த சட்ட முன்வரைவு “குழந்தைகளின் பராமரிப்பு, பாதுகாப்பு, நீதி” ஆகிய அம்சங்களை வலியுறுத்துகிறது. மேற்படி திருத்தம் இந்த நோக்கத்துடன் பொருந்துவதாக இல்லை என்பது இக்கட்டுரையின் இறுதியில் சுட்டிக் காட்டப்படுகிறது.

**தற்போதைய சட்டம்**

குற்றச் செயல்கள் தொடர்பாக புகார் செய்யப்படும் 18 வயதுக்குக் குறைந்த இளஞ்சிறார் நீதி குழுமத்தின் (இனி இது குழுமம் என்று குறிப்பிடப்படும்) முன் கொண்டு வரப்பட வேண்டும். அதைத் தொடர்ந்து குழுமம் விசாரணை நடத்தும். வழக்கமான நீதித்துறை நடைமுறைகளில் உள்ள, பாதகமான, குற்றவாளிகள் தொடர்பான பதங்கள் இந்தச் சட்டத்தில் கவனத்தோடு தவிர்க்கப்பட்டிருக்கின்றன. ஒரு குழந்தை குற்றச்செயலை செய்திருப்பதாக குழுமம் முடிவுக்கு வருமானால் அந்தக் குழந்தைக்கு கலந்தாலோசனை வழங்க அல்லது சமூகம் சார்ந்த சேவைகளை வழங்க அல்லது குழந்தையின் சார்பில் அபராதம் செலுத்த ஆணையிடலாம் அல்லது நன்னடத்தை அடிப்படையில் குழந்தையை விடுவிக்கவும் ஆணையிடலாம். சட்டத்தின்படி ஒரு குழந்தைக்கு அளிக்கப்படக்கூடிய மிகக் கடுமையான ஆணை எதுவென்றால், அந்தக் குழந்தையை அதிகபட்சமாக மூன்றாண்டு காலத்திற்கு சீரமைப்பிற்கான ஒரு சிறப்பு இல்லத்தில் சேர்க்க வேண்டும் என்பதுதான். குழந்தையின் வயது அடிப்படையிலும், குற்றத்தின் கடுமை அடிப்படையிலும் நடவடிக்கை எடுக்கப் பரிந்துரைக்கும் இந்தச் சட்டத்தில் உள்ள ஒரே விதி பிரிவு – 16 மட்டுமே. மிகக் கடுமையான தன்மையுள்ள ஒரு குற்றம் நடந்திருப்பதாக குழுமம்

முடிவுக்கு வருமானால் ஒரு சிறப்பு இல்லத்திற்கு அனுப்புவது குற்றம் செய்த சிறாருக்கோ அல்லது இல்லத்தில் இருக்கக்கூடிய மற்ற சிறார்களுக்கோ நல்லதல்ல என்ற முடிவுக்கும் குழுமம் வருமானால், ஒரு ''பாதுகாப்பான இடத்தில்'' சம்பந்தப்பட்ட சிறாரை வைத்திருக்க வேண்டும் என்று குழுமம் ஆணையிடலாம். அந்த பாதுகாப்பான இடம் என்பது குறிப்பாக ஒரு சிறைக்கூடமோ, காவல்கூடமோ அல்ல. இந்த ஆணையும்கூட, மற்ற நடவடிக்கைகள் பொருத்தமானவை அல்ல அல்லது போதுமானவை அல்ல என்று குழுமம் கருதுமானால்தான் பிறப்பிக்கப்படும்.

இவ்வாறாக, சட்டத்துடன் முரண்படும் அனைத்துக் குழந்தைகளும் சமமாக நடத்தப்படுவதை இந்தச் சட்டம் உறுதிப்படுத்துகிறது. குற்றமிழைத்த பெரியவர்களிடமிருந்து சிறார்கள் வேறுபடுத்திப் பார்க்கப்பட வேண்டும் என்றும் சட்டம் கூறுகிறது. சிறார் நீதி அமைப்பின் அடித்தளமாக இருப்பவை இந்த அம்சங்கள்தான் என்று உச்சநீதிமன்றம் உறுதிப்படுத்தியுள்ளது. கடுமையான குற்றங்கள் சுமத்தப்படும் சிறார்கள் வழக்கமான குற்றவியல் நீதிமுறையின்கீழ் கொண்டுவரப்பட வேண்டும் என்று கோரும் மனுக்கள்மீது தீர்ப்பளித்த உச்சநீதிமன்றம் இவ்வாறு கூறியது. டிசம்பர் 16 சம்பவத்தைத் தொடர்ந்து பொதுமக்களிடமிருந்து ஆவேசமான கருத்துகள் வந்தன என்றபோதிலும், குற்றவியல் சட்டத்தில் திருத்தங்கள் செய்வதற்காக அமைக்கப்பட்ட J.S.வர்மா குழு தனது அறிக்கையில், இதேபோன்ற கருத்தைத்தான் கூறியது.

**சட்ட முன்வரைவில் மாற்றங்கள்:**

சட்டத்தின் முந்தைய பிரிவில் கூறப்பட்டுள்ள அடிப்படையில் எந்த ஒரு ஆணையையும் பிறப்பிப்பதற்கான அதிகாரம் குழுமத்திற்கு இருக்கிறது. ஆயினும், இத்துடன் இணைந்ததாக, சட்ட முன்வரைவின் சட்டக்கூறு–14, கொலை, அமில வீச்சால் படுகாயப்படுத்துதல், கும்பல் வன்புணர்வு உள்ளிட்ட வன்புணர்ச்சி போன்ற குறிப்பான குற்றச் செயல்களில், குற்றம் நடந்த நாளில் சம்பந்தப்பட்ட சிறாருக்கு 16 வயது நிறைவடைந்திருக்கும் நிலையில், குழுமம் எவ்வாறு செயல்பட வேண்டும் என்பதைக் கட்டாயமாக்குகிறது. இத்தகைய நிலைமைகளிள்போது, குழுமத்தின் முன் குற்றம் சாட்டப்பட்ட சிறார் நிறுத்தப்படும் நாளிலிருந்து ஒரு மாதத்திற்குள் குழுமம் தனது விசாரணையை நடத்த வேண்டும். இத்தகைய குற்றத்தை செய்வதில் குழந்தையின் பின்னணி, குற்றத்தின் பின்விளைவுகளைப் புரிந்துகொள்வதற்கான குழந்தையின் திறன், இத்தகைய குற்றத்தை முன்கூட்டியே திட்டமிடுகிற தன்மை ஆகியவற்றைக் கணக்கில் கொண்டு, ஒரு மாதத்திற்குள் விசாரணையை நடத்த வேண்டுமென்று அந்த விதி கூறுகின்றது. அத்தகைய விசாரணை முடிவடைந்த பிறகு சட்ட முன்வரைவின் சட்டக்கூறு–17ன் கீழ், இந்தச் சட்டத்தின்கீழ் வழக்கைத் தொடர்வதற்கான ஆணையைப் பிறப்பிக்கலாம் அல்லது அத்தகைய குற்றங்கள் தொடர்பாக விசாரிக்கும் அதிகாரம் பெற்ற வழக்கமான நீதிமன்றத்திற்கு, பொதுவாக ஒரு அமர்வு நீதிமன்றத்திற்கு, வழக்கை மாற்றலாம்.

கொலை முயற்சி, வன்முறையைப் பயன்படுத்தி பெண்ணின் ஆடைகளைக் களைதல், பல்வேறு வகையான ஆள்கடத்தல் குற்றங்கள், பாலியல் தொழிலுக்காக குழந்தைகளை வாங்குதல் அல்லது விற்றல், கொள்ளை போன்ற குற்றச் செயல்கள் விஷயத்தில் மேலே கூறிய அம்சங்களைக் கணக்கில் எடுத்துக்கொள்வதோடு, குற்றம் சாட்டப்பட்ட சிறார் இத்தகைய குற்றங்களை ஏற்கனவே செய்தது தொடர்பான பதிவுகளையும் கவனத்தில் கொள்ள வேண்டும். சம்பந்தப்பட்ட குழந்தை மீண்டும் மீண்டும் அத்தகைய குற்றங்களைச் செய்வதாகத் தெரிய வந்தால் மட்டுமே வழக்கை ஒரு வழக்கமான நீதிமன்றத்திற்கு மாற்றலாம் என்று புதிய சட்ட முன்வரைவில் கூறப்பட்டுள்ளது.

இந்த மாற்றங்களின் அர்த்தம் என்னவென்றால் இப்படி அந்தக் குழந்தை வழக்கமான நீதிமன்றத்திற்கு மாற்றப்படுமானால் ஆணோ பெண்ணோ அந்தக் குழந்தையை சாதாரணமான குற்றவியல் நீதிமன்றங்கள் விசாரிக்கும். இந்திய தண்டனைச் சட்டத்தின்கீழ் இத்தகையை குற்றங்களுக்கு வகுத்துரைக்கப்பட்டுள்ள தண்டனைகளை (மரண தண்டனையும், விடுதலையின்றி ஆயுள் சிறையும் தவிர்த்து) குழந்தை எதிர்நோக்க வேண்டியிருக்கும், பெரியவர்களாக உள்ள குற்றவாளிகளுக்கு என பொதுவாக ஏற்படுத்தப்பட்டுள்ள சிறைகளில் அடைக்கப்பட நேரிடும் என்பதேயாகும். சட்டத்தின் சீர்திருத்த நோக்கத்தையே தலைகீழாக மாற்றுகின்ற இந்த விதி பின்வரும் சட்டப்பூர்வ குறைபாடுகளையும் கொண்டுள்ளது.

**(1) வேறுபடுத்துவதற்கான அபாயகரமான விளக்கம்:**

இந்த சட்டக் கூறு தன்னியல்பிலேயே இரண்டு வகையான குழந்தைகளை சமத்துவமற்ற முறையில் கையாள்கிறது: 16 வயதுக்கு மேற்பட்ட குழந்தைகள், அதற்கு கீழ்ப்பட்ட குழந்தைகள் என்பதே அந்த இரண்டு வகைகள். சட்ட உரை – 14ன் கீழ், சமமாகக் கையாளப்படுகிறதா என்ற சோதனையில் தாக்குப்பிடிக்க வேண்டுமானால், பிரித்துக்

காட்டுவதற்கான 16 வயது என்பது, அவ்வாறு வேறுபடுத்துவதற்கான நியாயமான அடிப்படையோடு இருக்கிறது என்று நிரூபித்தாக வேண்டும். அத்துடன் இவ்வாறு வேறுபடுத்துவதற்கு, இந்த சட்டத்தின் மூலம் அடைய முயல்கிற இலக்கோடு ஒரு சட்டப்பூர்வ தொடர்பு இருக்கிறது என்பதும் நிரூபிக்கப்பட்டாக வேண்டும். இதை, 16 வயதுக்கு மேற்பட்ட குழந்தைகள் பெரிதும் முதிர்ச்சியோடு இருக்கிறார்கள் என்று காட்டுவதன் மூலமும், சிறார் குற்றச் செயல்கள் அதிகரித்து வருகின்றன என்ற புள்ளிவிவரங்களைக் காட்டுவதன் மூலமும் நிரூபிக்க முயலக்கூடும். எவ்வாறானாலும், சிறார் குற்றவாளிகளைப் வேறுபடுத்துவதற்கு, அவர்களின் முதிர்ச்சி என்பது அளவுகோலாகக் கொள்ளப்படுமானால், அது ஒரு அபாயகரமான சரிவுப் பாதையாகிவிடும். இளம் குழந்தைகளின் முதிர்ச்சி நிரூபிக்கப்படுமானால், அவர்கள் தண்டனைக்குரிய குற்றவாளிகளாக அறிவிக்கப்படுவதற்கு வாய்ப்பு ஏற்படுகிறது.

7 முதல் 12 வயது வரையிலான, புரிந்துகொள்வதற்குப் போதுமான முதிர்ச்சி இருக்கிற, ஒரு குழந்தையால் ஒரு குற்றச்செயலை செய்கிற செய்வதற்கான வாய்ப்பு குறித்து இந்திய தண்டனைச் சட்டத்தின் 83வது பிரிவு வரையறுக்காமல் விட்டுள்ளது என்ற நிலையில் இந்த வாய்ப்பு நிச்சயமாக இருக்கிறது. அண்மையில் உச்சநீதிமன்றம், “குற்றத்திற்கான கெடு எதுவும் இருக்க முடியாது” என்று கூறியிருப்பது இந்த சரிவுப் பாதைக்கான அபாயத்தை அழுத்தமாகக் காட்டுகிறது.



மேலும், 16 வயதுக்கு மேற்பட்ட சிறார்களுக்குக் கடுமையான தண்டனை வழங்குவதன் மூலமாகத்தான் குற்றங்களைத் தடுக்க முடியும் என்ற வாதம் வைக்கப்படுமானால், சட்டத்தோடு முரண்படுகிற மற்ற குழந்தைகளுக்கு, அவர்களும் பெரிய குற்றவாளிகளுக்கு வழங்கப்படுவதுபோலவே விசாரணை நடத்தப்பட்டு சிறையில் அடைக்கப்படுகிற நிலையில் அவர்களுக்குக் கிடைக்கிற சீர்திருத்த வாய்ப்புகள், 16 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கு மறுக்கப்படுவதில் எந்த நியாயமும் இல்லை. இந்த அடிப்படைகளில் 14வது சட்ட உரையை நீதிமன்றம் எவ்வாறு கையாளப் போகிறது என்பது கவனத்திற்குரியதாகிறது.

**(2). குற்றமற்றவர் என்ற அனுமானம்:**

ஒரு வழக்கை வழக்கமான நீதிமன்றத்திற்கு மாற்றுவதா வேண்டாமா என்று தீர்மானிப்பதற்கு முன்பாக, குழுமம் நடத்த வேண்டிய விசாரணைக்கான வாய்ப்பு குறித்து இந்த சட்ட முன்வரைவில் தெளிவாகக் குறிப்பிடப்படவில்லை. குழந்தையின் குற்றமுறு தன்மை குறித்துக் குழுமம் விசாரிக்க வேண்டும் என்று சட்டக் கூறு–14 கூறுகிறது. இத்தகைய குற்றங்களின் இரண்டாவது வகை சேர்ந்த வழக்கானால் குழந்தை மீண்டும் மீண்டும் அந்தக் குற்றத்தைச் செய்திருப்பதாக நிறுவ வேண்டும். இது, குழுமத்திற்கும் வழக்கமான நீதிமன்றத்திற்கும் உள்ள அதிகாரத்தைப் பிரித்துக் காட்டுவது தொடர்பான முக்கியமான கேள்விகளை எழுப்புகிறது.

உதாரணமாக, வழக்கு மாற்றப்படுமானால், குழந்தையின் குற்றமுறு தன்மை குறித்த குழுமத்தின் முடிவுகள் வழக்கமான நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட வேண்டுமா? அனுப்பப்பட வேண்டுமென்றால், ஒரு வழக்கமான நீதிமன்றத்தில் ஒரு சிறாருக்குக் குற்றமற்றவர் என்ற அனுமானத்தின் அடிப்படையில் கையாளப்படுகிற வாய்ப்பை இது மறுப்பதாகாதா? சட்ட முன்வரைவின் சட்டக்கூறு–4ன் இந்த அனுமானத்திற்கு ஒரு அடிப்படைக் கொள்கை என்ற நிலை வழங்கப்பட்டிருக்கும் நிலையில் இந்தக் கேள்வி முக்கியமானதாகிறது. சம்பந்தப்பட்ட குழந்தைக்கு ஒரு நியாயமான விசாரணை நடத்தப்படும் என்ற அரசமைப்பு சாசன உத்தரவாதம் சீர்குலையாது என்பதை உறுதிப்படுத்த, இந்தக் கேள்விகளுக்கு முறையான பதில்கள் காணப்படுவது அவசியம்.

**(3). நிலுவையில் உள்ள வழக்குகள்:**

கடுமையான குற்றங்களைச் செய்ததாகக் கூறப்படும் 16 வயதுக்கு மேற்பட்ட சிறார்கள் மீதான வழக்குகள்

நிலுவையில் இருக்கும் நிலையில் அந்த வழக்குகள் எவ்வாறு கையாளப்படும் என்பதை இந்த சட்ட முன்வரைவு விளக்கவில்லை. அரசமைப்பு சாசனத்தின் சட்ட உரை –20(1)ன் கீழ் அளிக்கப்பட்டுள்ள உத்தரவாதம் இத்தகைய வழக்குகளை வழக்கமான நீதிமன்றங்களுக்கு மாற்றுவதைத் தடுக்கும் என ஊகிக்கலாம். ஆனால், இந்த சட்ட முன்வரைவில், இவ்வாறு நடக்காமல் தடுப்பதற்கான விதி சேர்க்கப்பட்டாக வேண்டும்.

**உலகளாவிய பொறுப்புகள்**

குழந்தைகளுக்கான நீதி தொடர்பாக (18 வயதுக்குக் குறைந்த மனிதர்கள் என்ற வரையறையின் அடிப்படையில்) இந்தியாவுக்கு உலகளாவிய கடமைப் பொறுப்பு இருக்கிறது. ஐக்கிய நாடுகள் அமைப்பின் குழந்தை உரிமை மாநாட்டின் பிரகடனத்திற்கு இந்தியா கட்டுப்பட்டுள்ளது. 18 வயதுக்குக் குறைந்த குழந்தைகளைக் கைது செய்யக்கூடாது, காவலில் வைக்கக்கூடாது, சிறையில் வைக்கக்கூடாது என்றெல்லாம் அந்த மாநாட்டுப் பிரகடனத்தில் நாடுகளின் அரசுகளுக்கு முற்றிலுமாகத் தடை விதிக்கப்படவில்லை. இத்தகைய நடவடிக்கைகள் ''கடைசி வழிமுறையாக மட்டுமே மேற்கொள்ளப்பட வேண்டும், அதுவும் பொருத்தமான அளவிற்கு குறுகிய காலத்திற்கே மேற்கொள்ளப்பட வேண்டும்,'' என்றுதான் மாநாட்டுப் பிரகடனம் கூறுகிறது. தண்டனைச் சட்டத்தை மீறியதாகக் குற்றம் சாட்டப்படும் குழந்தைகள் மீது நீதிமுறை நடவடிக்கைகள் மேற்கொள்ளக்கூடாது என்று அந்தப் பிரகடனம் அரசுகளைத் தடுக்கவில்லை. இருந்தபோதிலும், ''நீதிமுறை நடவடிக்கைகளை நாடாமலே, எப்போது தேவைப்படுகிறதோ அப்போது பொருத்தமாகவும், ஏற்கத்தக்க வகையிலும், இத்தகைய குழந்தைகளைக் கையாளுவதற்கான நடவடிக்கைகளை'' அரசுகள் உருவாக்கலாம் என்ற வாய்ப்பு, பிரகடனத்தில் அரசுகளுக்கு அளிக்கப்பட்டுள்ளது. பிரகனத்தில் இவ்வாறு ''பொருத்தமாகவும், ஏற்கத்தக்க வகையிலும்'' என்ற வார்த்தைகள் இருப்பது, நாடுகளின் அரசுகள் குறிப்பிட்ட சிலவகையான குழந்தைகளை அல்லது குற்றச் செயல்களை, பிரகடனத்தில் கூறப்பட்டுள்ள நீதிமுறை அல்லாத மாற்று நடவடிக்கைகளில் இருந்து விலக்கி வைப்பதற்குப் பயன்படுத்திக் கொள்ள அனுமதிக்கக் கூடும் என்று தெரிகிறது.

எவ்வாறாயினும், மாநாட்டுப் பிரகடனத்திற்கு உட்பட்ட அரசுகளுக்கு உள்ள கடமைப் பொறுப்புகள் குறித்து ஐ.நா. அமைப்பின் குழந்தைகள் உரிமைகள் குழு (சிஆர்சி) ஒரு அதிகாரப்பூர்வ விளக்கத்தை அளித்துள்ளது. குற்றப் பொறுப்புக்கு இரண்டு குறைந்தபட்ச வயதுகள் (தற்போது நமது நாட்டில் 16, 18 என்ற இரண்டு குறைந்தபட்ச வயதுகள் முன்மொழியப்படுகின்றன) பயன்படுத்தப் படுவதை சிஆர்சி கடுமையாக விமர்சித்துள்ளது. குறிப்பாக, கடுமையாக குற்றத்தைச் செய்திருப்பதாகக் குறிப்பிட்ட குழந்தையின் மீது குற்றம் சாட்டப் படுகிறபோது, அல்லது குற்றப் பொறுப்பு ஏற்கத்தக்க அளவிற்கு முதிர்ச்சியுடன் இருப்பதாகக் கருதப்படும் போது, இந்த வயதை மேலும் குறைக்கலாம் என்ற நடைமுறையை சிஆர்சி விமர்சித்துள்ளது. சிஆர்சி பரிந்துரைகள் இந்தியாவைக் கட்டுப்படுத்தாது என்றாலும்கூட, குற்றப்பொறுப்புக்கான வயதைக் குறைப்பது என்பதை சிஆர்சி கடுமையாகச் சாடுகிறது. அது, குறைந்தபட்சம், இந்திய அரசு கொண்டு வர உத்தேசித்துள்ள சட்ட முன்வரைவு மாநாட்டுப் பிரகடனத்தை சரியான முறையில் எடுத்துக்கொண்டு உருவாக்கப்படவில்லை என்பதற்கும், அதன் நோக்கத்தையும் இலக்கையும் மீறுவதாக இருக்கிறது என்பதற்கும் அறிகுறியாகும். குற்றப் பொறுப்புக்கான வயதைக் குறைப்பது ஒரு எதிர்மறையான தடங்கலாகிவிடும் என்பது மட்டுமல்லாமல், சிறார் குற்றங்களைக் குறைத்தாக வேண்டும் என்று அமைச்சர் மேனகா காந்தி முழங்கியிருப்பதும் சேர்ந்து, குற்றச் செயல்களில் ஈடுபடும் குழந்தைகளை எதிர்மறையான முறையில் ஒரே மாதிரியாக, வகைப்படுத்துவதைத் தடுப்பதில், இந்தியாவுக்கு உள்ள ஆக்கப்பூர்வமான கடமைப் பொறுப்பைக் கைவிடுவதாகவும் உள்ளது.

பெய்ஜிங், ஹவானா மாநாடுகளில் உருவாக்கப்பட்ட விதிகளை மீறுவதாகவும் இந்த சட்ட முன்வரைவின் அம்சங்கள் உள்ளன. ஆனால், சட்ட முன்வரைவின் முன்னுரையில் இந்த இரண்டு மாநாடுகளின் தீர்மானங்களுக்கும் செயல்வடிவம் கொடுக்கப் படுவதாகக் கூறப்படுகிறது. பெய்ஜிங், ஹவானா விதிகளில் சிறார் நீதிக்கான குறைந்தபட்ச தர அளவுகள் பரிந்துரைக்கப்பட்டுள்ளன. அவற்றுள் முக்கியமான ஒரு விதி, காவலில் வைக்கும் ஏற்பாடுகளில் சிறார்களை பெரியவர்களிடம் இருந்து பிரித்து வைக்க வேண்டும் என்றும் கூறுகிறது. இந்த வழக்குகளை வழக்கமான நீதிமன்றத்திற்கு மாற்றுவதும், சிறார்களை வழக்கமான சிறைகளில் அடைப்பதும், இந்த விதிகளை மீறுகிற செயலே ஆகும்.

**நிறைவாக**

இந்த சட்டத்தின் கீழ் செயல்படும் அதிகாரிகள் தங்களது கடமைகளை நிறைவேற்றும்போது கடைப்பிடிக்க வேண்டிய வழிகாட்டல் கொள்கைகளை இந்த சட்ட முன்வரைவு வகுத்துரைக்கிறது. இது இந்த முன்வரைவின் செய்யப்பட்டுள்ள ஒரு வரவேற்கத்தக்க

**இதன் தொடர்ச்சி கடைசி பக்கத்தில்...**

# கல்வி உரிமைச் சட்டம் வந்தபின்னும் காணாமல் போகும்குழந்தைகள்

– அபர்ணா தேசிகன்

அண்மையில் வெளியான ஒரு அதிர்ச்சித் தகவல் தொடக்கக் கல்வி நிலைமை குறித்தும், கல்வி உரிமைச் சட்டம் எந்த அளவுக்கு பயனளிக்கிறது என்பது குறித்தும் ஆழமான கேள்விகளை எழுப்புகிறது. பள்ளிக்குச் செல்லாத, 6 முதல் 13 வயது வரையிலான குழந்தைகள்பற்றி தேசிய அளவில் மேற்கொள்ளப்பட்ட ஒரு கணக்கெடுப்பில், தமிழகத்தில் அத்தகைய குழந்தைகளில் பாதிக்கும் மேற்பட்டோர் பள்ளிகளில் இருந்து பாதியிலேயே நின்றவர்கள் என்பது தெரிய வந்துள்ளது. இந்திய அரசின் அமைப்பாகிய இந்திய கல்வி ஆலோசகர்கள் (ECI) நிறுவனம், மத்திய மனித வளத்துறை அமைச்சகத்தின் ஆதரவோடு இந்த கணக்கெடுப்பை மேற்கொண்டது. 2009ல் மேற்கொள்ளப்பட்ட கணக்கெடுப்பை விட, தற்போது, இத்தகைய குழந்தைகளின் எண்ணிக்கை 10 சதவீதம் அதிகரித்திருக்கிறது. 2011ஆம் ஆண்டில், கல்வி உரிமைச் சட்டம் கொண்டுவரப்பட்ட பிறகும் இந்த நிலைமை ஏற்பட்டிருக்கிறது.

### கீழே போடப்படும் புத்தகங்கள்

**இந்தியா முழுவதும் பள்ளிக்குச் செல்லாமல் இருக்கும் 6 முதல் 13 வயது வரையிலான குழந்தைகள் பற்றிய ஒரு தேசிய அளவிலான ஆய்வு, பள்ளிப் படிப்பைப் பாதியில் நிறுத்திக்கொள்வோர் பற்றிய புதிய தகவல்களை வெளிப்படுத்துகிறது:**

தமிழகத்தில் பள்ளிக்குச் செல்லாத குாந்தைகளில் **53.5%** பாதியிலேயே விலகியவர்கள்.

2009ஆம் ஆண்டு கணக்கெடுப்பின்படி தமிழகத்தின், பள்ளி செல்லா குழந்தைகளில் **45.34%** பாதியில் படிப்பை நிறுத்தியவர்கள்.

தமிழகத்தில் இடைநிற்றல் ஆன குழந்தைகளின் எண்ணிக்கை **30,821.**

இந்தியாவில் மிக அதிக எண்ணிக்கையில் பள்ளியிலிருந்து விலகும் குழந்தைகள் இருப்பது உத்திரபிரதேச மாநிலத்தில்தான் **4,66,000** பேர்.

இந்தியாவில் இடைநிற்றல் ஆகும் குழந்தைகளில் **1.3%** தமிழகத்தைச் சேர்ந்தவர்கள்.

நகரப் பகுதிகளில் படிப்பைப் பாதியில் நிறுத்தும் ஆண் குழந்தைகளின் விகிதம் **49.44%** பெண்குழந்தைகளின் விகிதம் இதைவிட அதிகம் – **56.33%**

**குழந்தைகள் பள்ளிக்குச் செல்லாமல் இருப்பதற்கான காரணங்கள்:**

**23.76%** வறுமையும் இதர பொருளாதார நிலைமைகளுமே காரணம்.

**18.38%** சதவீதத்தினருக்குப் படிப்பில் ஆர்வமில்லை.

**12.16%** சதவீத குழந்தைகள் குடும்பத்தின் வருமானத்திற்கு உதவ வேண்டியவர்களாக உள்ளனர்.

2009ஆம் ஆண்டின் கணக்கெடுப்பில் தெரிய வந்த தகவல்களோடு ஒப்பிடுகையில் பள்ளிகளிலிருந்து இடைநிற்றல் ஆகும் குழந்தைகளின் எண்ணிக்கை ஏழாயிரத்துக்கும்மேல் அதிகரித்துள்ளது. 2009ல் இத்தகைய குழந்தைகளின் விகிதம் 43 சதவீதமாக இருந்தது, தற்போதைய கணக்கெடுப்பின்படி 53.57 சதவீதமான அதிகரித்திருக்கிறது. நகரப் பகுதிகளில் இடைநிற்றல் விகிதம் 51.59 சதவீதமென்றால், கிராமப்பகுதிகளில் அது 55.41 சதவீதமாக இருக்கிறது. பாலினத்தைப் பொறுத்தவரையில் மாநிலத்தின் நகரப்பகுதிகளில் இடைநிற்றலுக்கு உள்ளாகும் குழந்தைகளின் விகிதத்தில் ஒரு குறிப்பிடத்தக்க ஏற்றத்தாழ்வு இருக்கிறது. தமிழத்தின் நகரப்பகுதிகளில் பள்ளிகளில் சேரும் ஆண் குழந்தைகளில் 49.4 சதவீதத்தினர் பாதியில் படிப்பை முடித்துக் கொள்கிறார்கள். பெண் குழந்தைகளில் பாதியில் படிப்பை நிறுத்துபவர்கள் 56.33 சதவீதம். தமிழகத்தின் ஊரகப் பகுதிகளில் பள்ளிகளிலிருந்து பாதியிலேயே படிப்பை முடித்துக்கொள்ளும் பெண் குழந்தைகள், ஆண் குழந்தைகள் விகிதத்தில் சிறிய வேறுபாடு இருக்கிறது. பெண்களின் விகிதம் 55.76 சதவீதம், ஆண் குழந்தைகளின் விகிதம் 55.14 சதவீதம். பள்ளியிலிருந்து பாதியிலேயே நிற்கும் மாணவர்களில் மிக அதிகமானவர்கள் ஏழாம் வகுப்புக்குப் பிறகு நிற்பவர்கள்தான் – 29.97 சதவீதம். அதற்கடுத்து அதிகமான மாணவர்கள் ஐந்தாம் வகுப்பு மாணவர்கள் 23 சதவீதம். கிராமங்களைச் சேர்ந்த குழந்தைகள் பள்ளிப் படிப்பைப் பாதியில் முடித்துக்கொள்வதற்கு வறுமையும், அவர்களது குடும்பங்கள் வேலை வாய்ப்புக்காக நகரப் பகுதிகளுக்குக் குடி பெயர்வதும் முக்கியக் காரணங்களாக உள்ளன.

**ஆதாரம் : The New Indian Express, 13.11.2014**

*For Private Circulation Only*

...பக்கம் 30ன் தொடர்ச்சி

மாற்றமாகும். இந்தியாவின் ஒரு சட்டத்தை வலுப்படுத்தக்கூடிய இத்தகைய விதிகள் சேர்க்கப்படுவது உற்சாகமளிப்பதே ஆகும். அது பயனுள்ள வழிகாட்டல்களை உருவாக்க இட்டுச் செல்லும். குற்றமற்றவர் என்பதற்கான அனுமானம், இத்தகைய குழந்தைகளை இழிவுபடுத்தக் கூடாது என்பதற்கான விதிகள், பாகுபாடற்ற முறையில் சமமாக நடத்தப்படுவதற்கான விதிகள் தண்டனைகளுக்கான சில நிறுவனப்பூர்வ ஏற்பாடுகளை கடைசி வழியாக மட்டும் மேற்கொள்ள வேண்டும் என்பதற்கான விதிகள், விலக்கி வைப்பதற்கான விதிகள், இயற்கை நீதி உள்ளிட்டவை ஆக்கப்பூர்வமானவையாகும். ஆனால், ஒரு கெடு வாய்ப்பாக, சிறார்களை வழக்கமான நீதிமன்றங்களில் விசாரிக்கலாம் என்பதற்கான விதி, மேற்படி பாராட்டத்தக்க அம்சங்களை முற்றிலும் நிராகரிப்பதாக இருக்கிறது. குறைந்தபட்சம், வழக்கமான நீதிமன்றங்கள் குழந்தைகள் மீதான வழக்குகளைக் கையாளுகிறபோது மேற்படி விதிகளை பின்பற்றியாக வேண்டும் என்ற விதியாவது இந்த சட்ட முன்வரைவில் சேர்க்கப்பட வேண்டும்.

பழிக்குப்பழி நீதி என்ற பொதுமக்களின் தாகம் அரசமைப்பு சாசனத்திலும், உலக அளவிலும் வகுத்துரைக்கப் பட்டுள்ள சிறார் நீதிமுறைக்கான தரங்களைக் கீழே தள்ளுவது என்பது வருந்தத்தக்கது.

**ஆதாரம்: ஆகஸ்ட் *2, 2014 Economic & Political WEEKLY (EPW) VOLXLIX No.31***




“பொதுவாக இளஞ்சிறாரின் வயதை குறைப்பதைப் பற்றி... நாங்கள் பரிசீலித்தோம். இந்த தலைப்பைப் பற்றிய ஆராய்ச்சி மற்றும் புள்ளிவிவரங்கள் அத்துடன் சொந்த அனுபவங்கள், இது நீடிக்காது என காட்டுகிறது. பெரும்பாலான பெண்களின் உரிமைகளுக்காக செயல்படும் அமைப்புகளும் இத்தகைய பார்வையையே கொண்டுள்ளது. நீங்கள் இதை பொதுப்படுத்த முடியாது.”

– வன்புணர்ச்சி குற்றங்களுக்கு கடுமையான சட்டங்களை பரிந்துரை செய்வதற்காக அமைக்கப்பட்ட, காலஞ்சென்ற நீதிபதி திரு. **J.S. வர்மா** தலைமையிலான குழு, தன்னுடைய அறிக்கையை ஜனவரி 23, 2013 அன்று தாக்கல் செய்தது. குற்றவியல் சட்டத் திருத்த மசோதா பாராளுமன்றத்தால் 2013 மார்ச் மாதத்தில் ஏற்றுக்கொள்ளப்பட்டது.

*Education Material Published on behalf of*

**Tamil Nadu Child Rights Protection Network by Human Rights Advocacy and Research Foundation (HRF)**

*# 54, LDG Road, Little Mount, Saidapet, Chennai - 600 015, India.*
*☎ 22353503, 22351919 Fax : 22355905,*
*E-mail : humanrightsadvocacyandresearch@gmail.com*
*website : www.humanrightsfoundation.org.in*